# தடங்கள்



இயல்வாணன்

# சுவடுகள்

இயல்வாணன்



மீரா வெளியீடு
யாழ்ப்பாணம்

- சுவடுகள்
- இயல்வாணன் (நூலாசிரியர்)
- முதல் பதிப்பு: ஐப்பசி 1992
- விலை ரூபா: [redacted] 80/=
- வெளியீடு: 22

  மீரா வெளியீடு

  38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
- அட்டை: மரப் பலகையில் செய்து அச்சிடப்பட்டது.
- அச்சமைப்பு: லக்ஷ்மி அச்சகம்

  37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

SUVADUKAL

IYALVAANAN AUTHOR

First Edition: October 192

80/- Price: [redacted]

Publication: 22

Published by

Meera Veliyeedu

38, Vembadi Road, Jaffna.

Printed by

Sri Luxmi Press

37, Kandy Road, Jaffna.

# ஈழத்து இலக்கிய களத்தில் "மீரா" வெளியீடுகளாக வெளிவந்தவை

**1988**

1. மழைக்காலம் — செங்கை ஆழியான்
2. ராதையின் நெஞ்சம் — கே. எஸ். ஆனந்தன்
3. பூம்பனி மலர்கள் — து. வைத்திலிங்கம்
4. முடிவல்ல ஆரம்பம் — சிதம்பர திருச்செந்திநாதன்

**1989**

5. மண்ணின் தாகம் — செங்கை ஆழியான்
6. பாலைவனப் பயணிகள் — கே. ஆர். டேவிட்
7. கானகத்தின் கானம் — செம்பியன் செல்வன்
8. முற்றத்து ஒற்றைப்பனை — செங்கை ஆழியான்
8. சங்கரன் — வளவை வளவன்

**1990**

10. பூஜைக்காக வாழும் பூவை — கே. எஸ். ஆனந்தன்
11. இராவணன் கோட்டை — கே. எஸ். ஆனந்தன்
12. நிலவே நீ மயங்காதே — இந்திரா பிரியதர்ஷினி
13. இருள் இரவில் அல்ல — சிதம்பர திருச்செந்திநாதன்

**1991**

14. அக்கினி — செங்கை ஆழியான்
15. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை — கே. ஆர். டேவிட்
16. முள்முடிமன்னர்கள் — சிதம்பர திருச்செந்திநாதன்
17. விடியலைத் தேடி — ஒ. கே. குணநாதன்
18. ஊருக்கல்ல — முருகு

**1992**

19. ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள் — வாமதேவன்
20. மீண்டும் புதிதாய்ப் பிறப்போம் — சிதம்பர திருச்செந்திநாதன்
21. விண்ணில் அல்ல விடிவெள்ளி — தாமரைச்செல்வி
22. சுவடுகள் — இயல்வாணன்

● சந்தா அனுப்பவேண்டாம் புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

## பதிப்புரை

என்னைப் பொறுத்த வரையில், இலக்கியத் துறைக்கு நான் புதியவன்.

''இன்று பிரபலமாக இருக்கும் 'இந்தியா ருடே' ஆரம்பித்தவர்களுக்கும் பத்திரிகைத் தொழிலுக்கும் என்ன சம்பந்தம் இருந்தது?'' தொழில் எதுவானால் என்ன?... செய்யும் தொழிலே தெய்வம் என்ற முனைப்போடு செயல்பட்டால், எந்தத் தொழிலும் சுலபமானதே. வெற்றிகரமானதே.

ஒரு படைப்பு, தான் படைக்கப்பட்ட காலத்தின் பிரதிபலிப்பாக இருக்கவேண்டும் என்பது எனது இலக்கிய வேட்கை...

''இந்த நாவலில் வரும் பாத்திரங்களும், சம்பவங்களும் கற்பனையே எவரையும் குறிப்பிடுவனவல்ல'' என்ற அடிக்குறிப்போடு இன்னும் எழுதிக்கொண்டிருப்பது... இலக்கியத்திற்கும், சமூகத்திற்கும் ஆரோக்கியம் ஆகாது.

நிகழ்காலத்தைப் பற்றிய வலியில்லாமல் காகிதத்தைக் கறுப்பாக்கிக் கொண்டிருப்பவர்கள், பல சவலைப் புத்தகங்களுக்கு குசேலனாக மட்டுமே இருக்க முடியும்.

'சுவடுகள்' நாவலாசிரியர் இயல்வாணன் நாவலிலக்கியத்திற்கு புதியவர். ''தான் பேசுவதைவிட தனது படைப்புத்தான் பேசவேண்டும்'' என்பதில் கவனமாயிருக்கிற இளைஞர்.

''சுவடுகள்' நாவலைப் படித்ததும்.. ஒரு புதிய பரம்பரை எழுத்தாளர் முளைவிடுகிறார் என்று உதட்டுக்குத் தெரியாமல் உச்சரித்துக் கொண்டேன்.

நன்றி! — மீரா பிரசுரங்கள் அழகாக வெளிவர ஒத்துழைப்பு வழங்கிவரும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், பிரியமுள்ள வாசகர்களுக்கும்!

அன்புடன்...
மீரா-லிகோரி

# இயல்வாணன் பற்றி



- ஞானரதன் -

தமிழ் இலக்கிய உலகில்
சுவடுகள் என்ற இந்நாவல் மூலம்
இளம் எழுத்தாளரான
இயல்வாணன் கால் பதிக்கின்றார்
இவருக்கு வயது
21 மட்டுமே.

இவரது எழுத்தாற்றலை
இந்நாவல் கட்டியம் கூறுகிறது
இவரின் சிறுகதைகள்,
கவிதைகள், கட்டுரைகள்
ஈழத்தின் பல்வேறு
பத்திரிகைகள் சஞ்சிகைகளில்
வெளியாகியுள்ளன.
இவரின் படைப்புக்கள்
ஆழமானவையாகவும்,
கவனத்தை ஈர்ப்பனவாகவும்
அமைந்துள்ளன.

பத்மமகன், எஸ். எஸ். குமரன்
ஆகிய பெயர்களிலும் இவரது
படைப்புக்கள் வெளியாகியுள்ளன.
மனித நேயம்" விரவி நிற்கும்
இவரது படைப்புகள்
வருங்காலத்தில் மேலும்
சிறப்பாக அமையும் என
எதிர்பார்க்கலாம். இலக்கியத்
துறையுடன்
பத்திரிகைத்துறையிலும்
ஈடுபாடு கொண்டுள்ள
இயல்வாணன் ஈழத்தின்
புதிய பரம்பரை எழுத்தாளர்களில்
ஒருவராக
கணிக்கப்படவேண்டியவர்.

# சுழகனின் பார்வையில்...

'சுவடுகள்' நாவல் கதாநாயகன்
சத்தியனுக்கு,
நீ வாழ்க!

பாசம், பந்தம், கடமையுணர்வு என்பவற்றால் உந்தப்பட்ட இளைஞனான நீ, உன் குடும்ப வட்டத்தைத்தான் முதலில் உற்று நோக்கினாய். உன் உறவுகள், நட்புகள், ஊரில் நிலவிய போர்க்காலச் சூழ்நிலைகள் என்பன உன்னை வெளியே ஓடத் தூண்டின.

ஓடினாய்.

ஓட்டத்தில் நீ விரும்பாமலே பெற்ற அனுபவங்கள் உன்னைத் தமிழீழத்தின் உணர்வுமிக்க ஓர் இளைஞனாக உயர்த்தி விட்டன. இந்த உயர்ச்சியில், உணர்வில் உனது நோக்குப் பரந்ததும், தமிழீழத்தைத் தழுவியதுமான ஒரு வட்டத்துள் நிலைத்தது. நீ சிந்தித்தாய்: புறப்பட்டு விட்டாய். உன்னைத் தடுக்க இனி எவராலும் முடியாது. உனது சிந்தனையும் புறப்பாடும் ஒவ்வொரு தமிழ் இளைஞனையும் பற்றுவதாக!

சுவடுகள் என்ற இந்தச் சிறிய நாவலில் உனது அனுபவங்களையும், சிந்தனைகளையும், தீர்மானங்களையும் வாசகரின் மனக் கண்களில் படம் பிடித்துக் காட்டும் நாவலாசிரியர் இளைஞர், இளமைத் துடிப்பும், சிந்தனை முதிர்ச்சியும் கொண்ட இந்த இளைஞரான நாவலாசிரியரின் முதல் நாவல் இது என்பதை ஆச்சரியத்தோடு நோக்குகிறேன். பல நாவல்களை எழுதிய பக்குவம் இந்நாவலில் மிளிர்கிறது.

சத்தியனே, உனக்கும், உன் வரலாற்றின் முதற்கட்டத்தை நாவலுருவில் தந்த நாவலாசிரியர் இயல்வாணனுக்கும் தமிழீழப் பெருமக்களின் சார்பில் நன்றியும், வாழ்த்துக்களும்.

திருநெல்வேலி.
1992-07-10

—சுழகன்
சு. இராஜநாயகன்

# என் அகம் வழியே...

இது எனது முதல் நாவல் பெறுகை. பெற்றவன் என்பதால் இப்பிறப்பையிட்டு பெருமிதம் கொள்கிறேன். இது ஆரம்ப நிலையிலான படைப்பு என்பதால் இதில் குறைகள் தொக்கி நிற்க இடமுண்டு. அவற்றை என் எழுத்தாக்கத்தில் விருப்போ, நம்பிக்கையோ கொண்ட நெஞ்சங்களைச் சுட்டிக் காட்டித் திருத்த வேண்டுகிறேன்.

நான் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு கால வாழ்வின் யதார்த்தத் தன்மையை இந்நாவலுள் சுட்டியுள்ளேன். இதனுள் பொதிந்துள்ள விடயங்கள் நடைமுறை வாழ்க்கையில் நாம் கண்டுணர்ந்து அனுபவித்தவையே.

இந் நூலாக்கம் பலரது பங்களிப்புகளாலானது. குறிப்பாக, தாமும் வளர்வதோடு என்னையும் எழுத்துலகில் வளர்க்கும் இருவர். எனக்கு ஆக்க இலக்கியம் குறித்த தெளிவினை ஏற்படுத்தி வருபவர் இந்நூலில் என்னை அறிமுகப்படுத்திய ஞானரதன் (வை. சச்சிதானந்தசிவம்) அவர்களுக்கும், என் எழுத்துக்கள் அனைத்தையும் வாசித்து குறை நிறைகூறி ஊக்குபவர். இந் நூலின் தலைப்பைத் தெரிந்து தந்து, அத்தியாயங்களுக்கு அழகு சேர்த்த திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் அவர்களுக்கும், என் அன்பின் நன்றிகள்.

புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களை எழுத்துத் துறையில் இனங்காட்ட எத்தனமாகத் தொழிற்படும் டேவிற் லிகோரி அவர்களது அதீத முயற்சி என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. இந்த நெருக்கடி வேளையிலும் எம்மைத் தூக்கி நிறுத்தும் அவரது துணிவிற்கும், ஆர்வத்திற்கும் மதிப்பளிக்கிறேன். அவருக்கும், இந் நூலுக்கு நல்லதொரு முன்னுரை வழங்கிய முதுபெரும் எழுத்தாளர் சு. இராஜநாயகன் அவர்களுக்கும் நன்றி கூறி, என்னை இந் நிலைக்குயர்த்திய அருமைத் தாத்தாவை நினைவிலிருத்தி, வாசகர்களிடம் இந்நூலைத் தந்து செல்கிறேன்.

நன்றி!

அன்புடன்,
**இயல்வாணன்**
(சு. ஸ்ரீகுமரன்)

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு,
1992-08-05

# இப்படைப்பை

என்னை நெகிழ்த்தி
என் எழுத்துக்கு உயிரூட்டி
களத்தில் விதையான
கலைஞர்களும்
போராளித் தோழர்களுமான

## இயல்வாணன் (கஸ்ரோ)
## மருதன்

ஆகியோருக்கு
படையல் செய்கிறேன்.

எப்போது வரும் என்றீர்கள்
இப்போதும் வருகிறது.
இனியும் வரும்
உங்கள் எதிர்பார்ப்புகள்
ஒவ்வொன்றாய் முழுமை பெறும்.

- இயல்வாணன்

காலைச் சூரியன்
கண்களைத் திறந்துவிடும்
காற்று
கன்னங்களை வருடிச்செல்லும்!
குளிர்
உடலை உரசிப்பார்க்கும்!
ஆனாலும்... இவன்மட்டும்
ஆகாயத்தை வெறித்தபடி...
மனச்சுமைகளோடு .. இந்த
மண்ணின் துயர்களும்
இவனுக்குள்!

# 1

அதிகாலை நிசப்தத்தைக் கலைத்துக் குண்டொன்று வெடித்தது. ''டுடொம்'' என்ற ஓசையின் அதிர்வினால் திடுக்கிட்டுக் கண் விழித்தான் சத்தியசீலன். நெஞ்சம் டக் .. டக் .. என அடித்துக் கொண்டது. சத்தம் மிக அருகில் கேட்டது போல ஒரு உணர்வு. திக்குத் திசையெதுவும் தெரியவில்லை. இன்னும் இருள் கலையவில்லை. "எழும்புவோமா ..'' என நினைத்தவன், தன்னையறியாமலே படுத்துக் கொண்டான்.

''இன்னுங் குண்டுகள் விழுமோ ?''

''வீட்டுக்கு மேலே குண்டு விழப்போகுது. உடல் சிதறப் போகுது'' என்று அகத்திற்குள்ளிருந்து ஏதோ சொல்வது போல...

குண்டு விழுந்து உடல் சிதறும், பத்திரிகையில் பெரிய எழுத்துக்களில் செய்தி வரும்... வீட்டைச் சுற்றிக் கூட்டம் கூடும்... நண்பர்கள் வருவார்கள், சிதைந்து போன உடலைச் சோகத்துடன் பார்ப்பார்கள்.

''ஐயோ .. இவன் கதியும் இப்படியாகிப் போச்சே! நாளைக்கு 'மச்'சிலை 'ஸ்பீட் போலிங்' பண்ணுறதுக்கு என்ன செய்யிறது'' என்றெல்லாம் சொல்வார்கள்... சுபத்திரா அழுவாள், அம்மா கதறுவாள், அக்கா, தங்கச்சியள்...

''எங்களை நடுத்தெருவிலை விட்டிட்டுப் போட்டியே...'' என்ற வார்த்தைகள் அம்மாவின் கதறலில் தொனிக்கும்... சே! அப்படியெல்லாம் நடக்காது''

மனது படபடத்தது. உடலுக்குள் ஏதோ சுரப்பு நடந்தது போல இருந்தது. கோபம், பயம் என்பன ஏற்படும் போது அதினீரலின் சுரக்குமென்று படித்தது ஞாபகத்திற்கு வந்தது.

''நாளைக்குக் கட்டாயம் வா'' என்று மதி பின்னேரம் சொன்னான்.

''உயிரோடையிருந்தால் வருவன்'' என்று அவனுக்குச் சொல்லிவிட்டு வந்திருந்தான்.

''அப்படி இறந்தால்... இவன் தீர்க்க தரிசிதான். நேற்றுச் சொல்லிப் போட்டு வந்தான். இண்டைக்குச் செத்திட்டான்'' என்று மதி சொல்லக் கூடும்.

இறந்தால், இந்தக் கிராமத்தை அதன் அழகை... மக்களை வீட்டிலிருந்து சற்றுத் தள்ளியிருக்கும் முத்தமிழ் மன்றம், அதனருகே நிழல் பரப்பி நிற்கும் தேக்க மரங்கள், ஒட்டால் வேயப்பட்ட சிறுகட்டடம், கருமை தேய்ந்து போன கரும்பலகை, முதுகு தேய்த்து அழுக்குப் படிந்திருக்கும் அரைச்சுவர் அதில் சாய்ந்திருந்து நண்பர்களுடன் அவனும் அரட்டையடிப்பான்.

வெயில் வேளைகளில் தேக்கமரத்தின் கீழமர்ந்து சீட்டாடுவார்கள்.

அதன் முன்னால் குன்றுங் குழியுமாகச் செல்லும் பாதை, அது கிழக்கு நோக்கி புகையிரதப் பாதையைத் தாண்டி, மின் உற்பத்தி நிலையத்திற்குச் செல்கிறது. ஒரு காலத்தில் பேரிரைச்சலுடன் புகையைக் கக்கியவாறு இயங்கிய இராட்சத இயந்திரங்கள் இப்போது இயக்கமின்றித் துருப்பிடிக்கின்றன. பெரிய கொள்கலன்கள், மின் இணைப்புகள், நீர்த் தொட்டிகள்... எல்லாம் இப்போது வெறுமையடைந்து, வரண்டு, வெடித்துப் போய்க் கிடக்கின்றன. வானம் பார்த்தபடி கூரை பிரிந்த

கட்டடங்கள்! விமானக் குண்டுகளால் எல்லாம் சிதைந்துபோய்க் கிடக்கின்றன.

புகையிரதப் பாதைகளில் பொருத்தப் பட்டிருக்கும் சிலிப்பர் கட்டைகள் விறகாகிக் கொண்டிருக்கின்றன. முன்பெல்லாம் புகையிரதங்கள் மாறி மாறி ஓடும். அதிலே போவோரைப் பார்த்துத் தோட்ட வெளிகளில் நின்று கையைக் காட்டுவான் சில வேளைகளில் புகையிரதம் வரமுன்னர் மெல்லிய இரும்புத் துண்டை தண்டவாளத்தில் வைப்பான். அது சென்ற பின்னர் அந்தத் துண்டு சப்பையாய்ப் போயிருக்கும். பார்க்கக் கத்தி போல இருக்கும்.

சின்னனாய் இருக்கும் போது தண்டவாளத்தில் விழாமல் நடந்து பார்த்திருக்கிறான். சிலிப்பர் கட்டைகளில் தத்தித் தத்தி நடந்திருக்கிறான். இப்போது...?

பனைவெளிகளுக்குள்ளால் தாண்டிச் செல்லும் ஒழுங்கை புளியடி வைரவ கோவிலைக் கடந்து சென்று, வளைந்து திரும்பி மைதானத்தை அடைகிறது. மைதானத்தில் கிரிக்கட், புட்போல் கிட்டியெல்லாம் விளையாடுவார்கள். அதன் வட அந்தத்தில் பற்றைகளின் நடுவே ஒரு பாழடைந்த கிணறு, பந்து விழுந்து விட்டால் அதற்குள் சென்று எடுக்கவே இயலாது. கிணற்றைச் சுற்றிக் காஞ்சோண்டிப் பூடுகள் முளைத்திருக்கும். ஒரு இலையை எடுத்து யாருடைய உடலிலாவது பூசி விட்டால் போதும், சொறியத் தொடங்கி விடும். அது பட்ட இடம் தடித்துப்போய் விடும்.

மைதானத்திற்கு முன்னால் மேற்காகப் பூதராயர் கோவில், அதன் முன்னால் ஒரு அரசமரம். வெள்ளிக்கிழமைகளில் அவ் வரச மரத்திற்குக் கீழே நின்று புக்கை வாங்கித் தின்னத் தவறுவ தில்லை. பூசைகள் முடிந்து கைதட்டல் சத்தம் கேட்டதும் விளையாட்டை நிறுத்திவிட்டு அரச மரத்தடிக்கு ஓடிச்சென்று விடுவார்கள்.

இறந்தால் எல்லாமே இழந்து போய் விடுமே...

''சாவந்தால் சாகிறதுதானே... வந்தால் வரட்டும்'' தனக் குள் சமாதானம் சொல்லிக் கொண்டான். விலகியிருந்த போர் வைச் சீலையை, குளிர் உட்புகாதவாறு மூடிக் கொண்டான்.

சில கணங்கள் மடிந்தன. மீண்டும் தொடர்ச்சியாய்க் குண்டுச் சத்தங்கள் கேட்டன. போர்வையை இழுத்து விட்டு, படுக்கையில் உட்கார்ந்திருந்தபடி கதவற்ற சாளரத்தினூடாக வெளியே பார்த்தான். இருள் விலகவில்லை. படுப்பதா? எழும்புவதா? எனத் தீர்மானிக்க முடியவில்லை. குண்டுச் சத்தங்கள் ஏழாலைப் பக்கமாகக் கேட்பது போல இருந்தது.

"ஜெயா... கனகு .. சதீஸ் அவங்கடை வீட்டடியிலையோ... இந்தநேரம் பங்கருக்கை இருப்பாங்களோ ... அல்லாட்டி செத்து... சீ...இதென்ன பேச்சு" மனது பணிய மறுத்து, எங்கெல்லாம், எதையெல்லாமோ தொடுகிறது!

படிக்க முடியுதே... படிப்பவையெல்லாம் சப்புறதும்...துப்புறதும் மனதிற்குள்ளை நிண்டாத்தானே" மீண்டும் போர்வையை இழுத்து மூடிவிட்டுப் படுத்துக் கொண்டான்.

"விழுந்தா விழட்டும் .. ஒவ்வொரு நாளுந்தான் விழுகுது தானே. இனி எழும்புறேல்லை"

கண்ணை மூடினான்! நேரங்கடந்தது. நித்திரை வரவில்லை.

முன்பென்றால் நித்திரை வராவிட்டாலும், இப்படி கண்ணை மூடியபடி படுத்திருப்பதே இன்பந்தான்! நினைவுகளில் மகிழ்ச்சி துளிர் விடும். படம் போல எல்லாம் விழும்... வண்ண வண்ணக் கனவுகள் தோன்றும்... இப்போது ...எந்நேரமும் நித்திரையாய் இருக்க வேண்டும் போல இருக்கிறது. எப்போது பொழுது விடிந்து கண் திறக்குமோ... அப்போதிருந்து கண்ணயரும் வரை சதா யோசனைகள்... கவலைகள்.. மனக்குழப்பங்கள்...

கண்ணயர்ந்தாலும் கனவுகளில் விமானங்களும்...கரியகுண்டுகளும்... இராணுவமும், துப்பாக்கியும், சிதைந்த உடல்களுந்தான்!

பாடசாலைக்குப் போகும் நாட்களில் விடியற் காலையில் எழும்புவது சிரமம் போல் தோன்றும். பொழுது விடியக் கூடாது என நினைப்பான். விடிந்து விட்டதேயென்று பொழுதைச் சபித்துமிருக்கிறான். சில நாட்களில் விடிந்தாலும் எழும்ப மாட்டான். அம்மா வந்து முதுகில் நான்கு தட்டுப் போட்டு, "சத்தியன், சத்தியன்" என்று பத்துப் பதினைந்து முறை கத்தினால்தான் எழும்புவான். அப்படி எழும்பினாலும் பாடசாலை ஞாபகம் வந்ததும் மீண்டும் படுக்கத்தோன்றும். இரவு வீட்டு

வேலை செய்யாவிட்டால் பாடசாலையில் வாங்கின் மேல் ஏறி நிற்க வேண்டும். 'மந்திரக்கிழவி' ரீச்சர் வாங்கின் மேல் ஏற்றி விட்டு, பேசுவார்.

"இந்தப் பெட்டையள் எல்லாஞ் செய்துதந்திட்டுதுகள்... உனக்கென்ன வேலை. ராத்திரி களவுக்குப் போனனியே... அல்லாட்டால் பிள்ளை குட்டியளுக்குச் சமைச்சுப் போட்டனியே" என்று பேசி மானத்தை வாங்கி விடுவார். அவரது பேச்சைக் கேட்டுப் பெண்கள் பக்கமிருந்து பலத்த சிரிப்பு எழும்.

அதைத் தொடர்ந்து தனது மந்திரக் கோலால், புறங் கையைப் பற்றி மொழியில் நான்கைந்து அடி போடுவார்... "ஊ...ஊ .." எனக்கத்திய படி நெளிந்து நெளிந்து அடி வாங்கிய பின், கையை உதறி விட்டுக் கொண்டிருப்பான்.

"என்ன கை முறிஞ்சு போச்சே... இஞ்சை வா, இப்பிடி வந்து எனக்குப் பக்கத்திலை முழங்காலிலை இரு. எல்லாரும் பாக்கட்டும். அப்பதான் உனக்கு அறிவு வரும்" என்று சொல்லி முழங்காலில் இருத்தி விடுவார்.

அந்தப் பயத்தினால் வீட்டு வேலை செய்யாத நாட்களில், அன்றைக்குப் பாடசாலைக்குப் போகமாட்டான். விடிய அம்மா எழுப்பினாலும், எப்படியோ சமாளித்து எழும்பாமலே இருந்து விடுவான். நன்றாக விடிந்ததும் எழும்பி "வயித்துக்குத்து... தலையிடி..." என்று ஏதோ ஒரு சாட்டுச் சொல்லி நின்று விடுவான். அதனால் ஆடிக்கொருக்கா... ஆவணிக்கொருக்கா கையெழுத்துப் போட வாறனியே" என்ற மந்திரக் கிழவியின் நக்கல்களையும் உள்வாங்கியிருக்கிறான்.

அப்பாவென்றால் விடிய முன்னரே எழுந்து தோட்டப் பக்கம் சென்று விடுவார். அப்படி எழுந்து செல்லும் நாட்களில் அவனை எழுப்பிப் படிக்கச் சொல்லி விட்டுச் செல்வார். எழுந்து சிறிதுநேரம் படிப்பான். நித்திரை தூங்கும். விளக்கை அணைத்து விட்டுப் படுத்து விடுவான்.

அப்பாவும் போய் விட்டார்...!

அப்பா போன பின்னால் அவனது படிப்பும் நின்று விட்டது. இப்போதெல்லாம் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் போல் ஒரு துடிப்பு.

பாடசாலையின் "மலாயா ப்ளொக்"கின் தொங்கலில் நிற்கும் சிவலிங்கப்பூ மரம். அதில் பூத்துக் குலுங்கும் சிவலிங்கப் பூக்கள். அவற்றையெல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஒரு ஆவல்!

றோஸ் கலரில் விரிந்து கிடக்கும் பூவிதழிற்குள் பாம்பு படமெடுத்து நிற்பது போல்... அதற்குக் கீழே ஒரு சிவலிங்கம் இருப்பது போல்... அந்தப் பூவை எடுத்துப் பிரித்துப் பார்ப்பதில் அவனுக்கு அப்போது மிகுந்த ஆசை. ஒரு நாள் ஒரு பூவை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். ஒவ்வொரு துண்டாக அதைப் பிரித்து, முள்ளு முள்ளுப் போல இருக்கும் பகுதியை எடுத்து, ஒவ்வொரு முள்ளாகப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன், நிமிர்ந்து பார்த்த போது, முன்னால் சிதம்பரநாதன் ரீச்சர் நின்று கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதும் கையிலிருந்த பூ நழுவி நிலத்தில் விழுந்தது. ரீச்சர் அவனை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்தார்.

"என்ன வேலை செய்தனி. எக்கணம் இரவுக்கு கடவுள் வந்து கழுத்தைத் திருகப்போறார். சரி, போ... இனிமல் இப்பிடிச் செய்யாதை" என்று சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

அவர் சொன்னவை அவனது காதில் மீண்டும் எதிரொலித்தன. இரவுக்கு கடவுள் வருவாரா? கழுத்தைத் திருகுவாரா என்ற பயம் அவனுள் எழுந்தது.

"கடவுள் அன்பே உருவானவர், நல்லவர், வல்லவர், உயிர்களிடத்து அன்பும், பாசமும் கொண்டவர்" என்றெல்லாம் சமய பாடத்தில் படிப்பித்த சிதம்பரநாதன் ரீச்சரே, கடவுள் கழுத்தைத் திருகுவார் என்று சொல்லி விட்டார். கடவுள் என்ன கொலைகாரனோ? யமன்...யமன் என்கிறார்களே... அதுவோ? அவனுக்குப் பயங் கூடியது.

இதற்கு என்ன செய்யலாம்? என்று சிந்தித்துப் பார்த்தான். "கடவுளே... நான் இனி இப்பிடிச் செய்யமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டான். என்றாலும் ஏதாவது நடக்குமோ?

பாடசாலை விட்ட பின்னால் அம்மன் கோவிலுக்குச் சென்று திருநீறு, சந்தனம் போட்டுக் கொண்டுதான் வீட்டிற்கு வருவது வழக்கம். அன்று கோவில் பக்கமே செல்லவில்லை. கடவுள் திருகி விடுவார் என்ற பயம்.

இரவு அப்பாவோடு படுத்துக் கொண்டு, அவரைக் கட்டிப் பிடித்திருந்தபடியே கிடந்தான். வழக்கத்திற்கு மாறாக அம்மாவை விட்டு, அப்பாவிற்குப் பக்கத்தில் சென்று படுத்தது அப்பாவிற்கு ஆச்சரியமாய்த்தானிருந்தது.

''ஏன் ராசா .. அம்மாவை உனக்குப் பிடிக்கேல்லையே...''

''ம்கூம்...''

''அப்ப...ஏன் இங்கை வந்து கிடக்கிறாய்''

''கடவுள் கழுத்தைத் திருகுவாராம்...'' பயந்தபடி சொன்னான்.

''ஆர் சொன்னது ?''

''சிதம்பரநாதன் ரீச்சர்''

''அதொண்டுமில்லையனை... ரீச்சர் சும்மா வெருட்டினவ. கடவுள் பிழை செய்யாமல் எங்களைத் திருகேலுமே''

சற்று நேரம் பேசாமலிருந்தான். தான் பிழைவிட்டது போல் ஓர் உணர்வு. ''நான் சிவலிங்கப் பூவைப் பிரிச்சுப் போட்டன்''

''அதுக்கென்ன... அதைப்பிரிச்சால் கடவுள் திருகுவாராமோ? பிள்ளையை நல்லா வெருட்டித்தான் போட்டா. நீ பேசாமல் படு ராசா... நான் விடிய ரீச்சரோடை கதைக்கிறன்'' என்று சொல்லி அவனை அமைதியடைய வைத்ததோடு, மறுநாள் ரீச்சருக்கும் பேசி விட்டார்.

இப்போது அந்தச் சிவலிங்கப் பூமரம் பட்டு விட்டதாம். பலாலியிலிருந்து அடித்த ஷெல் விழுந்துதான் அது பட்டதென்று சங்கர் சொன்னான். அம்மரத்திற்குப் பக்கத்தில் கட்டப்பட்ட கோவிலும் சேதமடைந்து விட்டதாம். அதிலே கோவில் கட்டுவதற்கு முன், அவ்விடத்தில் வாழைத் தோட்டமும், பாழடைந்த கிணறொன்றும் இருந்தன. வாழைத் தோட்டத்தை அழித்து, வாழைக் கழிவுகளை அந்தக் கிணற்றினுள் போட்டு மூடும் வேலையில் சத்தியனும் ஈடுபட்டிருந்தான். அதன்பின் அவ்விடத்தில் ஒரு கோவில் அமைக்கப்பட்டது. முன்பிருந்த இடமே தெரியாது, புது இடமாக மாறியது. இன்று...?

மீண்டும் அவ்விடத்தில் பற்றைகள் படர்ந்திருக்கும்.

''டுமொம்'' திடீரென்று பலத்த சத்தம் மிக அருகில் கேட்டது போர்வையை உதறி விட்டு எழுந்தான். அம்மாவும், அக்காவும்

எழுந்து நின்று, பதட்டத்துடன் சத்தியனையும், மற்றவர்களை யும் கூப்பிட்டனர்.

சத்தியன் எழுந்து வாசல் கதவைத் திறந்தான். அம்மா கை விளக்கைக் கொளுத்தினாள். அக்கா ஒவ்வொருவரையும் எழுப்பிக் கொண்டிருந்தாள். ''எழும்புங்கோடி! எங்கையோ கிட்டடியிலை வந்து விழுகுது, எழும்புங்கோ...''

அக்கா போட்ட சத்தத்தில் ஒவ்வொருவராக எழுந்து, தலை யைச் சொறிந்து கொண்டு வெளியே வந்தனர்.

''பலாலிப் பக்கமிருந்துதான் அடிக்கிறாங்கள். ஆராரைப் பலியெடுத்துதுகளோ...'' என்று சொல்லிய படி, அம்மா பங்கர் பக்கம் போனாள்.

அம்மாவைப் பின் தொடர்ந்து நான்கு பேரும் சென்றனர். சத்தியன் மட்டும் வாசற்படியில் அமர்ந்திருந்தான்

''சத்தியன்... ஏன் உதிலை இருக்கிறாய். கெதியெண்டு உள்ளுக்கு வா'' பங்கர் வாசலில் நின்று ரமா சொன்னாள்.

''அது எனக்குத் தெரியும். நீ உன்ரை வேலையைப் பார்'' என வெடுக்கெனப் பதில் சொன்னான் சத்தியன்.

அவள் போய் அம்மாவிடம் மூட்டியிருக்க வேண்டும். அம்மா வாசலில் வந்து நின்று கத்தினாள்.

''அது எனக்குத் தலையாலை அழியிறனெண்டு வந்திருக்கு. டேய் சத்தியா... வாவன்ரா... ஏன் மனிசருக்குக் கரைச்சலைக் குடுக்கிறாய்''

சற்று நேரம் பேசாமலிருந்தான். மீண்டும் அம்மா குரல் கொடுக்கவே எழுந்து சென்று பதுங்கு குழியின் மேல் மண் மூடையொன்றில் உட்கார்ந்து இருந்தான். பதுங்கு குழியோடு சேர்ந்திருந்த மா மரத்தில் நான்கைந்து பிஞ்சுகள் தொங்கின.

தென்னை மரங்களுக்கால் கீழை வானம் சிவந்து வருவது தெரிந்தது. மெல்லிய செந்நிறத்தில் தெரிந்த வானப்பின்னணியில் தென்னை மரங்கள் அழகாய்த் தெரிந்தன. சிறிது நேரம் அவற் றைக் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

மீண்டும் பலாலிப் பக்கமிருந்து வேட்டுச் சத்தங்கள் கேட்டன. இங்கு இது ஒன்றும் பெரிய விடயமல்ல. அதிகாலை வேளையில்

துயிலெழுப்பும் சேவல்களெல்லாம் குண்டுச் சத்தங்களால் மௌன மாகிப் போய் விட்டன. இப்போது துயிலெழுப்புபவை இந்தக் குண்டுச் சத்தங்கள்தான்!

குண்டுகளும் வெடிக்கும் சத்தம் கேட்டது. ஏதோ மோதல் நடக்கிறது என ஊகித்துக் கொண்டான். சற்று நேரத்தால் ஒரு அம்புலன்ஸ் கூவியபடி யாழ்ப்பாணம் நோக்கி விரைந்து செல்வது, காற்றைக் கிழித்து அது போட்ட ''கூஊய்ங்..'' என்ற சத்தத்திலிருந்து தெரிந்தது.

'இந்த மக்களின் அன்றாட வாழ்வோடு யுத்தத்தின் பிரதி பலிப்புகளும் பின்னிப் பிணைந்துவிட்டன. அனேகமானோர் யுத்த விளைவுகளுக்கேற்பத் தம்மை இசைவாக்கப் பழகிவிட் டனர்' எனச் சத்தியன் எண்ணிக் கொண்டான். அம்மா கூடத் தனது பாதுகாப்பை உறுதிப் படுத்தப் பழகி விட்டாள்.

அவள் பொம்மரைக் கண்டதும் பங்கருக்குள் தலையை நுழைக்கும் போதும், மற்றவர்களையும் நுழையுமாறு அவசரப் படுத்தும் போதும் சத்தியனுக்குச் சிரிப்பாய்த் தோன்றும். சிரித்தால் ''பல்லைக் காட்டிக் கொண்டு நில்லு. அவங்கள் இடம், வலமில்லாமல் எல்லா இடத்திலையும் போடுறாங்கள். உனக்குச் சிரிப்பாய்க் கிடக்குது.'' என்று பேச்சு விழும். அதனால் சிரிப்பை உள் விழுங்கி விடுவான்.

சத்தங்கள் சற்று ஓய்ந்ததும் பதுங்கு குழிக்குள்ளிருந்தவர் கள் வெளியே வந்தனர். அம்மா விளக்கை அணைத்து விட்டுக் கையிலேந்தி வந்தாள். விளக்கிலிருந்து வெளிவந்த புகையுடன் இலுப்பெண்ணை வாசம் மூக்கில் நுழைந்தது.

''இனித்துலைவாங்கள் வந்து கொட்டித் தள்ளப் போறாங் கள். எப்பதான் இந்தப் பிரச்சனையெல்லாந் தீந்து நாங்கள் நிம்மதியா வாழப் போறமோ—ம்...'' அம்மா பெருமூச்சுடன் சொல்லியபடி அவனைக் கடந்து சென்றாள். அம்மாவிற்குத் தெரியும் பலாலியில் 'அடிபாடு' நடந்தால் பொம்மர்கள் எங்கா வது குண்டுகளை வீசுமென்று!

கீழ்வானைப் பார்த்தான். சிவப்பு மறைந்து மெல்லிய மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தில் பளிச்சிட்டது. சுற்று முற்றும் விடிந்து விட்டது. மேலே மாமரத்தின் உச்சிக் கொப்பில் குலுங்கிய மாம் பிஞ்சுகள் சூரிய ஒளி பட்டு ஒளிர்ந்தன.

எழுந்து வீட்டிற்குள் சென்று பற்பொடியை எடுத்து வந்து பல்லைத் தீட்டியவாறு கிணற்றடிக்குச் சென்றான். கிணற்றுக் கட்டில் ஏறியிருந்து, ஒரு காலை மடக்கிக் கட்டின் மேல் போட்டவாறு பல்லைத் துலக்கினான்.

பலா மரத்தில் இருந்து இரண்டு கிளிகள் மெல்லிய குரலில் தமக்குள் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தன. அவற்றிற்குத்தான் கவலைகளே இல்லையா? மனிதனாய்ப் பிறந்து விட்டால் கவலைதான்!

மனித வாழ்க்கையே ஒரு போராட்டந்தான். புறப்பகுதியிலும் போராட்டம்; அகப் பகுதியிலும் போராட்டம். புறப் போராட்டங்களுக்குச் சிலவேளை தீர்வு கிட்டலாம். ஆனால் மனதுள் கிளர்ந்தெழுகின்ற அகப் போராட்டத்திற்கு முடிவு கிடைப்பது கடினம் அது எல்லாவற்றிலும் பயங்கரமானது. இதன் தாக்கம் தனிமனிதனின் புற வாழ்வில் எத்தனை தடைகளைக் கொண்டு வருகின்றது?'' எனச் சத்தியன் எண்ணிக் கொண்டான். சத்தியனுக்கு மட்டுமா? இங்குள்ள ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு உளத்தாக்கம் உறைந்தே கிடக்கிறது.

'தனி மனிதர்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள அகத் தாக்கங்கள்தானா இங்குள்ளவர்களின் வாழ்வில்... இந்தச் சமுதாயத்தின் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

''என்னடா அப்பிடிப் பெரிசா யோசிக்கிறாய்? தேத்தண்ணி ஆறப் போகுது. போய்க் குடியன்'' ராணியக்காவின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ராணியக்காவும், கமலாவும் கலாவும் இருகைகளிலும் வாளிகளை ஏந்தியவாறு வந்தனர்.

''கெதியிலை கழுவிட்டு விடு. வெய்யில் ஏற முன்னுக்குத் தண்ணி வாத்திடவேணும்'' கலா சொல்லியபடி வாளிகளைப் படிக் கட்டிற்கு அருகில் வைத்தாள்.

சத்தியன் எழுந்து முகத்தைக் கழுவினான். கிணற்றுத் தண்ணீர் சற்றுச் சூடாக முகம் கழுவுவதற்கு இதமாக இருந்தது. முகத்தைக் கழுவி விட்டு வந்தான். ரமா ஆடுகட்டும் இடத்தைக் கூட்டிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிலும் தூசி படர்ந்திருந்தது. 'பப்புறுக் கட்டைக்கடா ஆடு தன் பலத்தையெல்லாம் கூட்டி, கொட்டில் கப்புடன் மோதிக் கொண்டிருந்தது.

வீட்டிற்குள்ளே வந்து தேநீரை எடுத்து அருந்தினான். தேநீர் சுவையாய் இருந்தது. அம்மா போட்டிருக்க வேண்டும். அம்மாதான் இப்படிச் சுவையாகப் போடுவாள். தேநீரை ருசித்துக் குடித்தவாறே மேலே தொங்கிக் கொண்டிருக்கும் அப்பாவின் படத்தைப் பார்த்தான். ஒவ்வொரு நாளுந்தான் பார்க்கிறான். இன்றைக்குப் பார்க்கும் போது ஒரு மாதிரியாய்த் தெரிந்தது. அந்த நெடிதுயர்ந்த அப்பா இறங்கி வருவதுபோல் உணர்வு நினைவுகள் நிழலாடின.

அப்பா எவ்வளவோ நினைத்திருந்தார். அவர் நினைத்த வையெல்லாம் நிறைவேறாமலே சென்று விட்டன. சத்தியனின் அப்பா செல்லையா பரம்பரைக் கமக்காரர்தான்! அந்தத் தொழிலில் கடந்த காலங்களில் தான் பெற்ற அல்லல்கள் தனது பிள்ளைகளும் பெறக்கூடாது என்பதே அவரது எண்ண மாய் இருந்தது.

''நான் மண் திண்டு வளந்தது போதும். என்ரை பிள்ளை யளும் மண்ணுக்கிள்ளை கிடந்து அல்லாடேலாது. அதுகளைப் படிப்பிச்சு, நல்ல உத்தியோகத்திலை விட வேணும்.'' என்று அடிக்கடி கூறுவாராம்.

தான் மட்டும் வேளைதவறாமல் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்வார். மனைவியையோ, பிள்ளைகளையோ கூட்டிச் செல்லமாட்டார். அப்போதெல்லாம் தோட்டத்திற்குச் செல்ல சத்தியனுக்கு விருப்பம். அப்பாதான் விட மாட்டாரே!

எப்போதாவது கூட்டிச் சென்றால் அவனுக்குச் சந்தோச மாய் இருக்கும். பச்சைக் கம்பளம் விரித்தது போலப் பசுமை யாய்த் தெரியும் தோட்டம். தோட்டத்தில் நான்கைந்து பெண்கள் ஏதேதோ வேலைகளைச் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களுடன் சேர்ந்து ஏதாவது செய்ய வேண்டும் போல் இருக்கும். அவர்களுக்கு அருகில் செல்வதானால் வெயிலிற்குள், நிற்க வேண்டும். வெயிலில் நின்று, குழப்படியேதும் செய்தால் அப்பா மீண்டும் கூட்டி வரமாட்டார்.

அப்பா தண்ணீர் இறைத்துக் கொண்டிருப்பார். வாய்க் காலிற்கால் ஓடும் தண்ணீரில் கையை வைத்துப் பார்த்தால் இதமாக இருக்கும். கொட்டிலில் ..உரப்பையில் கிடக்கும்

உரத்தில் ஒரு பிடியை எடுத்து அந்தக் கையை நீரிற்குள் வைக்கும் போது, கை குளிரும். அந்த உணர்வே சந்தோசமாயிருக்கும். வாய்க்கால் தண்ணீரில் காகங்களும், புலுணிப் பறவையும் சிறகடித்துக் குளிக்கும் போது அழகாயிருக்கும். தண்ணீர் இறைத்த பாத்திகளில் புழுக்கள் பொறுக்க வெண் கொக்குகள் தத்தித் தத்தி நடை பயிலும்...தென்னைகள் தாவி அணில்கள் பாய்ந்து திரியும். அப்படியே அங்கேயே இருக்கலாம் போல் அவனுக்குத் தோன்றும்,

ஆனால், அப்பா தோட்டத்தில் நிற்க விடமாட்டார். அப்பாவிற்குப் படிக்க வேண்டும். அப்பா காணும் போது படித்துக் கொண்டிருந்தால் போதும்; ஒழுங்காகப் பாடசாலைக்குப் போனால் போதும். பிள்ளைகள் விளங்கிப் படிக்கிறார்களோ என அவர் எண்ணுவதில்லை. படிக்கா விட்டால் தலையில் குட்டுப் போட்டு, ''அங்கை என்ன செய்து கொண்டிருக்கிறாய், களிசடை, போய்ப்படி'' எனப் பேசுவார்.

திடீரென ஒரு நாள் அப்பா படுத்த படுக்கையாகி விட்டார். தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த போது, உடல் சோர்ந்து விழுந்து விட்டாரென அயற் தோட்டக்காரர்கள் வீட்டில் கொண்டு வந்து போட்டார்கள். பாரிச வாதத்தால் ஒரு காலும், கையும் செயலிழந்து போக, படுத்த படுக்கையாகி விட்டார்.

அவர் படுத்ததோடு ராணி படிப்பை நிறுத்திச் 'சமையலுக்குள்' தன்னை அமிழ்த்திக் கொண்டாள். அவளைத் தொடர்ந்து கலாவும், ரமாவும் படிப்பை நிறுத்திக் கொண்டனர். சத்தியனும், தமயந்தியுமே படிப்பை தொடர்ந்தனர். சத்தியன் அதிகாலை வேளையிலே எழுந்து தோட்ட வேலைகளைச் செய்து விட்டுப் பாடசாலைக்குப் போய்வந்தான்.

அப்பா அவனைக் காணும் போதெல்லாம் கண்ணீர் விடுவார். ''நான் என்னென்னவோ நினைச்சன். எல்லாம் மண்ணாய்ப் போச்சே. உன்னைத்தான் நான் கஷ்டப்படுத்திப் போட்டன் ..'' என்று ஏதோவெல்லாம் புலம்புவார். சத்தியனுக்கு அதைக் கேட்கச் சங்கடமாயிருக்கும்.

''சும்மா இருங்கோ அப்பா! இவ்வளவு நாளும் நீங்கள் எங்களுக்காகக் கஷ்டப் பட்டீங்கள். இப்ப நாங்கள் உங்களுக்காக கஷ்டப்பட்டால் குறைஞ்சே போயிடுவம்'' என்று சொல்லி விட்டுச் சென்று விடுவான். அப்பா படுக்கையில் இருக்கும் போது, அநேகமாகச் சத்தியனைக் கூப்பிடுவார். அவனோ அவரிலிருந்து விலகியே நிற்பான். அப்பாவின் மனதைப் பாதிக்கச் செய்யக் கூடாதென்றுதான் அவன் விலகி நடந்தான்.

அவன் தோட்ட வேலைகள் செய்யும் போது ..தண்ணீரில் காகமும், புலுனிப் பறவையும் குளிக்கும்; வெண் கொக்குகள் தத்தித் தத்தி புழுப் பொறுக்கும். அணில்கள் தாவும்! முன்பு போல அவற்றை ரசிக்க அவனுக்கு நேரங் கிடைக்கவில்லை. ஒரு இயந்திரம் தோட்டத்திற்குள் இறங்கி வேலை செய்து விட்டுத் திரும்புவது போல விரைவாகவே செய்து விட்டு, தாமதிக்காது வீட்டிற்கு வந்து விடுவான்.

இப்போது அந்தத் தோட்டமும் விற்றாகி விட்டது, எவ்வளவு தான் முயன்றும் தோட்டத்தில் வருமானம் கிடைக்காமல் போகவே, தோட்டக் காணியை விற்று வட்டிக்குக் கொடுப்ப தென அம்மா தீர்மானித்து, ஒரு லட்சத்திற்குத் தாடிச்சோமு விற்கு அதை விற்று விட்டாள்.

அந்தக் காசில்தான் அப்பாவின் மருந்துச் செலவுகள் செய்யப்பட்டன சத்தியனின் படிப்பு வீட்டாரின் வயிற்றுப் பாடு .. எல்லாவற்றிற்குமே இந்த வட்டிப் பணம்தான் பயன் பட்டது.

ஒருநாள் இரவு அப்பா சத்தியனைக் கூப்பிட்டார். அவன் போனதும், தன்னருகே அமருமாறு சைகை காட்டினார், அவன் அவரைப் பார்த்தபடி கட்டிலில் அமர்ந்தான். இயலக்கூடிய தனது கையைத் தூக்கி, அவனது தலையை வாரி விட்டார்.

''அப்பு நான் இன்னும் எவ்வளவு காலம் உயிரோடை இருப்பனோ தெரியா. வேளைக்குப் போயிடுவன் போலை கிடக்கு. உங்களைத்தான் கஷ்டப்பட விட்டிட்டன்'' என்று அவனைப் பார்த்தார். அவன் கண்களில் நீர் திரையிட்டது.

''ஏன் அப்பிடிச் சொல்லுறீங்கள். நீங்கள் போகமாட்டீங்கள். எங்களை விட்டு நீங்கள் போனால் நாங்களென்ன செய்யிறது?

அப்பிடிச் சொல்லாதேங்கோ... நீங்கள்தான் எங்களை உயத்தி னீங்கள்...'' அவரது வாயைப் பொத்தியபடி, அவன் அழுதான். கன்னங்களை உரசித் தெறித்த கண்ணீர்த் துளிகள் அவரது நெஞ்சில் விழுந்தன. அவனது கண்ணீரைத் துடைக்கப் பிரயத் தனப்பட்டார். கை அசைய மறுத்து விட்டது கையை எம்பித் தூக்கிப் பார்த்தார். அது அவனது முகத்தை வருடிய படி சோர்ந்து விழுந்தது.

''மற்றக்கையும் செயலிழந்து போச்சுது. ஏதோ காலகஷ்டம் எங்கடை நிலை இப்பிடியாய்ப் போச்சு...ம்...'' ஒரு பெருமூச்சுடன் அவனை ஆழமாய்ப் பார்த்தார்.

''முழுப்பொறுப்பும் உன்ரை தலையிலைதான்... உன்னாலை மண்திண்டு குடும்பத்தைக் காப்பாத்தேலாது. அதாலை, கவன மாய்ப் படிச்சு நல்லதொரு தொழிலிலை சேந்திட்டியெண்டால் ஓரளவு காப்பாத்திப் போடுவாய்''

''அதுக்காக நீ உன்னைக் கட்டுப்படுத்தி வச்சிருக்க வேணும். கண்ட கண்ட பிரச்சனையளிலையெல்லாம் தலையைக் குடுத்து' கண்ட கண்ட உணர்ச்சிகளுக்கு அடிமையாய்ப் போய், ஏதாவ தொரு உணர்ச்சியிலை நீ விழுந்திட்டால் உன்ரை குடும்பத்தை நடுத்தெருவிலை விட்டவனாய் போடுவாய்''

''இந்த வாலிபப் பருவத்திலை ஏற்படுற உணர்ச்சியளை அடக்குறது கஷ்டம். ஏதெதற்கோவெல்லாம் மனது துடிக்கும். எதைக் கண்டாலும் ஆசை வரும். வெளியிலை நடக்கிற பிரச் சனையள் உன்னைப் பாதிக்கும். எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் நீ .. எல்லாவற்றையும் கஷ்டப்பட்டு அடக்கினால்தான் குடும்பத்தை வழி நடத்த முடியும்'' என்று நீண்ட அறிவுரை யொன்றைக் கூறினார். அவன் தலையைக் குனிந்தவாறு இருந்து அவற்றையெல்லாம் கேட்டான்.

''நா....நான் .உன்னைத்தான்....அ .உன்னைத்தான் ...'' வார்த்தைகளை அழுகை உடைக்க, அவர் அவனைப் பார்த்தார். அவரது கண்களில் வடிந்த கண்ணீரை அவன் துடைத்து விட்டான் சற்று நேரம் மௌனமாயிருந்தவன் எழுந்தான். அவன் எழும்பும் போது, ''நான் சொன்னதுகளை மனதிலை வச்சிரு'' என்று சொன்னார்.

அதன்பின், மூன்று நாட்களில் அவர் இறந்து விட்டார். அம்மா கதறிக் கதறி அழுதாள், மற்றவர்களும் விக்கி, விக்கி அழுதனர். சத்தியன் மட்டும் அழவில்லை. அப்படியே நீட்டி நிமிர்ந்து படுத்திருந்த அப்பாவின் சடலத்தைக் கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் சடலமாயும் சிரித்துக் கொண்டிருந்தார்.

அழுகைக்கு வந்த கிழவியொருத்தி ஒப்பாரியில் பாடினாள்.

"நீ என்ரை ராசா எம்மைத் தவிக்கவிட்டுப் போயிட்டியே... மகராசா... நீ சிரிச்சுக் கொண்டு போயிட்டியே...உன்ரை பொறுப் பெல்லாம் அந்தக் குஞ்சுவிடம் கொடுத்திட்டியே... குஞ்சு என்ன செய்வான் .. ராசா குழந்தைதான் பாவியானான்..." அவனுக்கு அவ்விடத்தில் நின்று அழமுடியவில்லை. மௌனமாக அவ்வி டத்தை விட்டகன்றான்.

அப்பா இறந்தது கேட்டு வீடே சனத்தால் முட்டியது. அழுகையொலியும்...பேச்சொலியுமே கேட்டன. அவன் பேசாமல் இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான். ஒவ் வொருவராக ஒவ்வொரு வேலைகளைச் செய்தனர். எல்லோரும் அப்பாவின் உதவியை, நட்பைப் பெற்றவர்கள்! மாமா கையில் பணக்கட்டுடன் ஒவ்வொரு வேலைகளையும் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்.

அவனுக்கு அழவேண்டும் போலிருந்தது. எழுந்து கோடிப் பக்கம் சென்று, பாத்ரூமுக்குள் நுழைந்தான் நுழையும் போதே விம்மல் வெடித்தது. உள்ளே நின்று அழுதான். கண்களில் வடிந்த கண்ணீரையும் துடைக்காது குலுங்கிக் குலுங்கி அழுதான். விநாடிக்கு விநாடி கண்ணீர்த் துளிகள் நிலத்தில் விழுந்து தெறித்தன.

சிறிது நேரத்தில் "சத்தியன்" என்ற மாமாவின் குரல் கேட்டது கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான். அதன் பின் அவன் அழவேயில்லை. தீ மூட்டும் போதுதான் கண்களில் நீர் சுரந்தது. அதைக்கூடக் கையால் துடைத்துவிட்டு வந்து விட்டான்.

"சத்தியன் எழும்படா...ஏதோ இரையுது" என்று சொல் லியபடி பதுங்கு குழியை நோக்கி அம்மா ஓடினாள். அப்பாவின்

படத்தில் நிலைத்திருந்த பார்வையைத் திருப்பி வெளியே பார்த்தான். இரைச்சல் சத்தம் அண்மித்துக் கேட்டது. வெளியே வந்து பார்த்தான்.

இடியாய் இறங்கும் குண்டுகள்
ஆனாலும்...
விடியல் தேடும் இதயங்கள்...
பாதங்களோ .. விடுதலைப்
பாதைகளிற் படியும்!

## 2

வானில் இரு குண்டுவீச்சு விமானங்கள் சுழன்றுகொண்டிருந்தன. தெற்குப்புறமிருந்து பேரிரைச்சலுடன் வந்த விமானங்கள் சுற்றித் திரும்பி இரு வட்டமடித்தன. முற்றத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்த சத்தியனை பதுங்கு குழிக்குள்ளிருந்து அம்மா கூப்பிட்டாள். சத்தியன் போகவில்லை.

மேலே சுழன்றுகொண்டிருக்கும் விமானங்களைப் பார்த்தான். ஒன்று சற்று உயரத்தில் பெரிய விட்டமெடுத்துச் சுற்றிக்கொண்டிருந்தது. மற்றது அதற்கு சற்றுக் கீழே சிறிய விட்டத்தில் சுற்றியது. இரண்டும் மாறி மாறிச் சுற்றும் போது, அவற்றின் ஒலி கூடியும் குறைந்தும் கேட்டது. திடீரெனக் கீழே சுற்றிய விமானம் குத்தாக மேலெழுந்தது. மேலெழுந்த விமானம் தனது வேகத்தைக் கூட்டியபடி இரைந்து கொண்டு குத்தாக கீழிறங்கியது. கீழிறங்கும் போது வெயிலொளியில் பளபளத்தது.

அது குத்தாகத் கீழிறங்கும் போது, சத்தியன் பதுங்கு குழியை நோக்கி ஓடிவந்தான்.

"உனக்கு விளையாட்டாய்க் கிடக்கு. அவங்கள் கண்மண் தெரியாமல் போடுறாங்கள். வாடா கெதியிலை" உள்ளேயிருந்து அம்மா கத்தினாள்.

கீழிறங்கிய விமானம் கரிய குண்டொன்றைக் கக்கிவிட்டு மேலெழுந்தது.

"போட்டிட்டாங்கள் போட்டிட்டாங்கள் ஆரைப் பலியெடுக்கப் போகுதோ?" அம்மா சொன்னாள். அடுத்து, 'டமார்' என்ற பேரோசை எழுந்தது.

மேலெழுந்த விமானம் இருமுறை சுற்றிவிட்டு மீண்டும் கீழிறங்கிக் குண்டொன்றைப் போட்டது. கையினால் காதைப் பொத்தியபடி பங்கருக்குள் நுழைந்தான். குண்டு வெடித்ததும் வெளியே வந்தான் "அவனுக்கு ஆள்க்காட்டிறியே... வாடா உள்ளுக்கு" ராணியக்கா கத்தினாள். அவன் மேலே வந்த போது, விமானங்களிரண்டும் வடக்குப்பக்கமாகச் சென்றுகொண்டிருந்தன.

"அதுகள் போட்டுது. வெளியாலை வாங்கோ" என்று அவன் சொன்னதும் உள்ளேயிருந்தவர்கள் ஒவ்வொருவராக வெளியே வந்தனர். அம்மா ஏறும்போது "எங்கை போட்டவங்கள்" என்று கேட்டபடி வந்தாள்.

"சிவன் கோவில் பக்கந்தான். எங்கையெண்டு பாத்துக் கொண்டு வாறன்" என்றபடி சேர்ட்டை அணிந்துகொண்டான்.

'திரும்பி வந்தாலும் வருங்கள். உதுகளுக்கை போகாதை' அம்மா தடுத்தாள்.

"நான் தோட்ட வெளிக்குளாலைதான் போறன்" என்றபடி சைக்கிளை எடுத்தான். "கவனம். அதுகளைக் கண்டால் ஓடி வந்திடோணும்" என்றுசொல்லி அனுப்பினாள்.

அவன் வாசலுக்கு வந்து சைக்கிளை மிதித்தான். ஒழுங்கையில் வீட்டுக்குவீடு வாசல்களில் ஆட்கள் நின்றனர். பொம்மர் குத்தியதைக் கண்டதாக ஒருவர் விவரித்துக்கொண்டிருந்தார். குண்டு விழுந்த விதத்தை இன்னொருவர் கையைக் காட்டி வர்ணித்துக்கொண்டிருந்தார். சிலர் அறிமுகச் சிரிப்புச் சிரித்தனர். சிலர் "ஏன் உதுக்ிளை போய்த் துலையப் போறியே?" எனக் கேட்டனர். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு ஒழுங்கையால் வீட்டுக்கு வந்தான்.

வீதியில் விடுப்புப்பார்க்கும் கூட்டம் அவனைப்போல் விரைவாக ஓடிக்கொண்டிருந்தது. சிலர் குண்டு வீசும்போது பதுங்கியிருந்துவிட்டுத் தப்பினோம் பிழைத்தோம் என்று திரும்பி ஓடிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் "எங்கையண்ணை விழுந்தது?" என்று கேட்டுக்கொண்டு அக்கூட்டம் நகர்ந்தது அக்கூட்டத்தில் ஒருவனாகச் சத்தியனும் ஓடிச் சந்தியிலிருந்து சிவன் கோவில் பக்கமாகத் திரும்பி, அவ்விடத்திற்கு வந்தான்.

குண்டு விழுந்த இடத்தில் பதற்றத்துடன் எல்லோரும் நகர்ந்துகொண்டிருந்தனர். "கெதியிலை பாத்திட்டுப் போவம். வந்தாலும் வருவங்கள்" என்று சொல்லியபடி ஒருவர் அவனைக் கடந்து சென்றார். சத்தியன் சைக்கிளைப் பூட்டிவிட்டு, சுற்றுமுற்றும் பார்த்தான். எல்லோர் முகங்களிலும் பதற்றம்.

அவ்விடத்தவர் ஒவ்வொருவரும் "அவனைக் கண்டனியா? அவளைக் கண்டனியா? என ஒவ்வொரு பெயரைச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தனர். குண்டு விழுந்த இடத்திற்குப் போனான். சாய்ப்புப் போலமைந்த ஒரு வீடு. அதன் !முன்னே நின்ற ஒரு கார். வீதியருகே இருந்த கடை எல்லாம் சிதைந்திருந்தன. கார் பிரிந்து தகரமாய்க் கிடந்தது. அது கார்க்கார கமலநாதனுடைய வீடு. சத்தியனின் அப்பாவை ஒருநாள் அந்தக் காரில் ஏற்றித்தான் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அந்தக்கார் .. அவனது வீடு... அவன்?

"ஐயோ .. இஞ்சை பாருங்கோ கமலநாதனண்ணையை..." கட்டட இடிபாட்டிற்குள், உடலெங்கும் சீமெந்துத் தூசி படர்ந்திருக்க அந்தச் சடலத்தை வெளியே எடுத்தபோது, ஒரு காலையும், கையையும் காணவில்லை. உடல் எங்கும் இரத்தக் கறையாய் .. அடையாளங் காண முடியாதபடி முகம் சிதைந்திருந்தது. சடலத்தைத் தூக்கி வெளியே கொண்டு சென்ற பின்னர், கால் கண்டெடுக்கப்பட்டது. கை சிதைந்து எலும்பு வெளித்தெரிய மீட்கப்பட்டது.

அந்த இடம் முழுவதும் கந்தக நெடி பரவியிருந்தது. வீட்டிற்கு முன்னால் நின்ற வேப்பமரம் கொப்புகள் முறிந்து, இலைகள் உதிர்ந்து அம்மணமாய் நின்றது.

"அங்கைபார்..." ஒருவர் வேப்பமர உச்சியை நோக்கிக் கையைக் காட்டினார் ஒரு கையுடன் அரைவாசி உடலமொன்று

மரத்தில் தொங்கியது. தலைசிதையாது இருந்த அவ்வுடலம் ஒரு பெண்ணினுடையது. கூந்தல் தூசிக்குளியலில் வெண்ணிறமாக ஆடியது.

இன்னொருவர் சதைக்குவியலொன்றைத் தூக்கிவந்தார். புகையிரதத்தால் நசிக்கப்பட்டுச் சிதைந்தது போல அதுவும்— அது ஒரு சிறு குழந்தையுடையது. "இவர்களுக்கு இதுகள் என்ன பிழை விட்டதுகள் இங்கை வாழ நேர்ந்ததைத் தவிர, இதுகள் வேறென்ன குற்றஞ் செய்ததுகள்" ஒரு கிழவர் விம்மலுடன் இரு கைகளையும் மடித்து முன்னிறுத்தி இரப்பது போலக் காட்டிக் கேட்டார்.

"ஐகோ இந்தப் பச்சைப் பாலகன் என்ன குற்றஞ் செய்தான். குழந்தை நேற்றுத்தானே முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடிச்சுது பாவியள் விட்டாங்களா?" என்று இன்னொருவர் தலையிலடித்துச் சொன்னார். "எங்கடை நாட்டிலை வாழ அவை என்ன செய்யேலும்?" "எப்பிடிக் கொட்டினாலும், எப்பிடி எங்களை அழிச்சாலும் அவங்களாலை எங்களைத் திருப்பேலாது... "கிழவர் ஆத்திரத்துடன் உரத்துச் சொன்னார்.

திடீரென்று கூட்டத்தில் பதற்றம் எழுந்தது. நின்றவர்கள் எல்லோரும் "பொம்மர் வருகுது" என்று சொல்லியபடி சிதறி ஓடினர். சத்தியனும் சைக்கிளை விட்டு விட்டுப் பின்பக்கத்தால் தோட்ட வெளியை நோக்கி ஓடினான்.

வானில் பொம்மர் வரும் அறிகுறியே தெரியவில்லை. யாரோ வதந்தி பரப்பியிருக்கிறார்கள். சிறிது நேரத்தின் பின்னர் சத்தியன் திரும்பி வந்தான்.

"பொம்மருமில்லை... மண்ணாங்கட்டியுமில்லை" என்று சொல்லியபடி ஒரு கூட்டம் திரும்பி வந்தது. கொஞ்சங் கொஞ்சமாக ஆட்கள் கூடினர்.

காயமடைந்தவர்கள் வானொன்றில் ஏற்றி அனுப்பப்பட்டனர். இடிந்த கட்டடங்களைக் கிளறும் பணியில் சிலர் ஈடுபட்டனர். அவர்களுடன் சேர்ந்து அவனும் இடிபாடுகளைக் கிளறினான். இடிபாடுகளிலிருந்து மேலுமிரு சடலங்கள் எடுக்கப்பட்டன. சடலமொன்றை இன்னொருவருடன் சேர்ந்து தூக்கி வண்டியொன்றில் ஏற்றினான்.

எல்லா வேலைகளையும் செய்துவிட்டு அவன் வீட்டிற்கு வந்தபோது மதியம் சரிந்திருந்தது. தோய்ந்துவிட்டுச் சாப்பிட முயன்றபோது, சாப்பாடு உள்ளே இறங்க மறுத்தது. அந்தக் காட்சிகள் மனக்கண் முன்னே தோன்றின. வாய்க்குள் வைத்த சோற்றுக் கவளத்தை விழுங்க முடியவில்லை. அதை அப்படியே கொண்டு சென்று நாய்க்குப் போட்டுவிட்டு, வாசலில் வந்திருந் தான்.

''தோஞ்சனி சாப்பிடாட்டால் குளிரேறிடும்.. வாய்வு விழுந்திடும்'' என்று அம்மா சொன்னாள். அவன் பேசாமல் வானத்தை வெறித்துப் பார்த்தான்.

''தேத்தண்ணியாவது குடியன்.. தரட்டே''

''ஓம்..'' என்று தலையாட்டினான். தேநீர் வந்தது. அதை எடுத்து ஒரே மூச்சில் குடித்து முடித்தான். வயிற்றைப்போலவே மனமும் வெறுமையாய் இருந்தது

வாய் கசப்பது போலிருந்தது. கண்ணாடி ஆச்சியிடம் வெற் றிலை. பாக்கு வாங்கித் தின்ன எண்ணினான். அப்போது கிணற் றடியைக் கடந்து கண்ணாடி ஆச்சி வந்துகொண்டிருந்தாள். கண்ணாடி ஆச்சியின் மனதில் ஏதாவது தோன்றிவிட்டால் போதும். பொம்மர் விமானம் போல் இலக்கின்றி எங்கு சென் றாவது சொல்லிவிடுவாள், ஒரு கதையை ஒன்பது பேருக்காவது சொல்லாவிட்டால் ஆச்சிக்குத் தூக்கம் வராது. அதனால் கிழ வியோடு ''கொண்டோடிக் கிழவி'' என்ற பட்டமும் ஒட்டி விட்டது.

ஆச்சி மடியில் செருகியிருந்த கொட்டப்பெட்டிக்குள்ளிருந்து பாக்கையும், வெற்றிலையையும் எடுத்து அவனிடம் கொடுத் தாள். மாமரத்திலிருந்து காகம் கரைந்தது.

''ஆரோ வரப்போகினம்'' என்று ஆச்சி சொல்லியபடி உள்ளே போனாள். ''உனக்கு விசரணை'' உள்ளே இருந்து ரமா சொன்னாள்.

''எனக்கோ? உனக்குத் தெரியாதடி பிள்ளை, காகம், நாய் ஆடு, மாடு, பல்லி இதுகளுக்கு முன்னுணரும் சக்தி இருக்குது. அண்டங்காகம், ஆந்தை, சாகுருவி இதுகள் கத்துறது கூடாது. அரிசிக்காகம் கத்தினால் நல்லது நடக்கும். இது அந்தக்காலத் திலையிருந்தே உண்மையாய் நடந்து வருகுது''

''அதெல்லாஞ் சும்மா ஒரு நம்பிக்கை''

''நம்பிக்கைதான்... ஆனா உண்மையானது. ஒரு கதையே இருக்குது'' ''கதையோ சொல்லு கேப்பம்'' தமயந்தி ஆச்சிக்குக் கிட்ட வந்தாள் ''குமரிக்குக் கதையெண்டாக் காணும்'' என்று சொல்லிவிட்டு கதையைச் சொன்னாள்.

''பஞ்சபாண்டவர்கள் இருக்கினையல்லே அவர்களிலை சகாதேவன் சோதிடத்திலை விற்பன்னன். அவன் இறந்தபோது அவனுடைய சாம்பலை ஒரு முனிவரும், இந்தப் பிராணியளும் திண்டனவாம். அதனாலைதான் இதுகள் முன்கூட்டியே சாத்திரஞ் சொல்லுதுகள். அந்த முனிவர்தான் சோதிடக் கலையைத் தொடர வைச்சவராம்'' ஆச்சிக்குக் கதையைச் சொல்லி விட்ட திருப்தி.

''மெய்யேணை... பேச்சுவார்த்தை வருமெண்டு பேப்பரிலை கிடக்குது. உண்மையே? பேச்சுவார்த்தை வந்து பிரச்சனையெல்லாந் தீந்தால் நல்லாய்த்தான் இருக்கும்.'' ஆச்சி சொல்ல, அம்மா தொடர்ந்தாள்.

''ஓமணை .. எத்தினை நாளைக்குத்தான் இதுகளைத் தாங்கிறது? ஏதாலுமொண்டு வந்திட்டுதெண்டால் ''

அவர்களது பேச்சைக் கேட்க சத்தியனுக்குச் சினமாய்க் கிடந்தது.

''சும்மா ஏன் கத்துறீங்கள். நடக்காத ஒண்டுக்குச் சும்மா ஏன் வாயைப் போட்டடிக்கிறீங்கள், இப்பிடி உருப்படியில்லாமல் கதைக்கிற நேரம் பேசாமலிருந்து சிந்திச்சாக்கூட ஏதாவது தேடல் கிடைக்கும்'' சத்தியனின் பேச்சுடன் கண்ணாடி ஆச்சி எழுந்தாள். ''கண்டறியாத தேடலும் கிடலும்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

சற்று நேரம் கழித்து வாசலில் சைக்கிள் மணியொலித்தது. திரும்பிப் பார்த்தபோது மதி வந்துகொண்டிருந்தான்.

''வாடாமதி... என்ன கனநாளாய்க் காணேலை?''

''நீதான் அங்கை வாறேல்லை நான் வீட்டிலைதான் நின்றனான்'' என்று சொல்லிவிட்டு, சைக்கிளை நிறுத்தினான்.

''உள்ளுக்கை வாவன்''

''இல்லை மச்சான் நான் போகவேணும். அதுக்கு முதல் உன்னோடை தனியக் கதைக்கவேணும்''

''என்ன பெரிய கதை கதைக்கப்போறீர். உள்ளுக்கை வந்து கதையுமன்'' ராணியக்கா கூப்பிட்டாள். ''ஏன் வீட்டுக்குள்ளை வரக்கூடாதே'' இல்லையக்கா வாறத்திலை ஒண்டுமில்லை. சத்தியனோடை ஒரு விசயம் கதைக்கவேணும். கதைச்சிட்டு வாறன்''

இருவரும் கிணற்றடியை நோக்கி நடந்தனர்.

''சத்தியன்... நான் போகப்போறன். போறதுக்கு முதல் உன்னட்டைச் சொல்லீட்டுப் போகலாமென்று ..'' போகும் போது மதி சொன்னான். ''எங்கை யூ-கேயா? சுவிஸா? கொங்க்ராஜிலேசன்ஸ்...''

மதி ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி கிணற்றுக்கட்டில் ஏறியிருந்தான். சத்தியனும் அருகமர்ந்தான்.

''யூகேயுக்கோ — சுவிசுக்கோ போற ஒருவன் போறனெண்டு சொல்லமாட்டான். போயிட்டு வாறனெண்டுதான் சொல்லுவான். அவன் இங்கையிருந்து தன்னையோ, தனது குடும்பத்தையோ வாழவைக்க முடியாதென்று நினைத்துச் செல்பவன். ஒரேயொரு நோக்கம்... பணம்! அங்கை போய் அதை உழைத்துக் கொண்டு திரும்பி வந்து வாழ்வான்.'' மதியின் பேச்சு மாறியிருந்தது.

பாடசாலை நாட்களில் மதி வித்தியாசமானவன். எந்த நேரமும் பாட்டும், கும்மாளமும், பகிடியும் நக்கலும்.

''இலங்கை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையிலேயே தங்கியுள்ளது'' என்று ஒருநாள் ரீச்சர் படிப்பித்தார்.

பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியாலைதான் எங்கடை தேவையைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறோம்''

''ரீச்சர்! அது எங்களுக்குப் பொருத்தமில்லை .. நாங்கள் மனிதர்களை வெளிநாடுகளுக்கு அகதியா ஏற்றுமதி செய்யிறம்... அவர்களுக்கு பெண்களையும் அனுப்புறம் ''மதி இடை மறித்துச் சொன்னான். அவனது பேச்சின் ஆழத்தைப் புரிந்துகொண்ட ரீச்சர் யோசனை கலந்து சிரித்தாள்.

இப்போது மதி மாறிவிட்டான். முன்பிருந்த மகிழ்ச்சிகள் குறைந்துவிட்டன. அவனுக்கு இன்னுமொரு அண்ணனும், தங் 'கையும் இருக்கிறார்கள். மதியின் அப்பாவை 77 கலவரத்தில் ஹெக்கிராவ' என்னுமிடத்தில் வைத்து சிங்களக் காடையர் வெட்டி விட்டனர். அதன்பின் அவனுக்கு சிங்கள அரசு, இரா ணுவம் என்றாலே வெறுப்பு. பாடசாலையில்—

''அநியாயமாய் அப்பாவியளைக் கொல்லுறவங்களை, என் அப்பாவை வெட்டித் துண்டாடியவங்களை விடக்கூடாது. அவங் களைப் பழிவாங்காமல் விடக்கூடாது'' என்று அவன் அடிக்கடி சொல்வான்!

''உன்னுடைய நிலைமை எப்பிடி?'' மதி கேட்டான்.

''என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. ஒன்றுமே செய்ய முடியுதில்லை. விடிய எழும்பிச் சாப்பிடுறது... எதை யாவது சிந்திச்சு மனதைக் குழப்புறது. அந்தக் குழப்பங்களூடே வீணே பொழுதைக் கழிக்கிறது. அதன் தாக்கந்தீர உறங்கு றது... வாழ்க்கையே வெறுத்துப் போகுது... ஏனிப்பிடி வாழ் கிறோம் எண்டிருக்கிறது...''

''நீமட்டுமில்லை, இங்கையுள்ள எல்லாரும் இந்த நிலை யிலைதான் இருக்கினம்'' ''படிப்புகளும் அப்பிடியாய்ப் போச்சு. ஓ எல் படிக்கேக்கை ஒப்பரேசன் லிபறேசன்... படிப்பு நிண்டுது. இந்தியன் ஆமி வந்தாப்பிறகு கொஞ்சநாள் நிம்மதியா யிருந்து ரெஸ்ற் எழுதினம். பிறகு அவனும் கல்வியைச் சீரழிச் சான் ஏ. எல் படிப்பு நிண்டுது. இங்கை இருக்கேலாமல் கொழும் புக்கு ஓடினம். இப்ப சிங்கள இராணுவம்... படிப்பே நிண்டிட் டுது. இனி எப்பிடியோ?'' பெருமூச்சொன்று வெளி வந்தது.

''சத்தியன். ஒரு புறத்திலை அடக்குமுறை... மறு புறத் திலை அதற்கு எதிரான போராட்டம். இடையிலை ஏதேதோ சிந்தனையில் சிலர்...'' ''என்னடா போட்டுக் குழப்புறாய்...''

'நான் குழப்பேல்லை. இங்கையுள்ள இளைஞர்கள் எல்லா ரும் இதே குழப்பத்திலேயே வாழினை, நான் கூட இந்தக் குட் டைக் குழப்பத்திலை அமிழ்ந்துதானிருந்தன். இந்தக் குழப்பம் தெளியும்போது எங்களைச் சுற்றி விலங்குகள் அணியப்பட் டிருப்பதை, எங்கடை உரிமைகள் மறுக்கப்பட்டதை அறிவம்.

"இந்தத் தெளிவு தெரிந்தும் விலங்குகளை அறுக்கிற துணிவு எல்லோருக்கும் வருவதில்லை." சத்தியனை ஆழமாய்ப் பார்த்தான்.

மாலைச் சூரியன் முகத்தை எரித்தது. கூடவே கண்களைச் கூசச் செய்தது.

ஒரு கூட்டம் நாரைகள் கிழக்கிலிருந்து மேற்காகப் பறந்தன. நிரையாக அவை பறப்பது அழகாயிருந்தது.

"அந்தத் துணிவில்லாதவர்களிலை நானும் ஒருவனில்லையா?

"நிச்சயமாக!" சிரித்தான் மதி!

"அதுக்காக... உனக்குள்ள பொறுப்புகளைத் தட்டிக் கழிச்சுப் போட்டு என்னோடைவா எண்டு நான் சொல்லமாட்டன். ஆனால், தமது வாழ்வின் பிரச்சனைகளை முகங்கொடுத்துத் தீர்க்க இங்குள்ள பலர் தயங்குகிறார்கள்." இடைநிறுத்தி சத்தியனைப் பார்த்தான் மதி,

"சத்தியன்... நான் போகப் போறன்..."

சத்தியனின் கண்கள் கலங்கின.

"நேற்று நீ சொன்னாய். உயிரோடையிருந்தால் நாளைக்கு வருவனெண்டு. நான் உயிரோடிருந்தா நாங்கள் எப்போதாவது சந்திப்பம்" மதி உறுதியாயிருந்தான்... சிரிக்க முயன்றான்.

"உன்னை நிறுத்தவும் முடியாது. உன்னோடை கூட வரவும் முடியாது. எனது குடும்பம்... அதைக் காப்பாற்றவேணும் இல்லாவிட்டால் குடும்பத்தின்ரை எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். அதோடை நாளைக்கு இந்தச் சமூகம் என்னைக் கேவலமாய்ப் பார்க்கும், குடும்பம் நடுத்தெருவில் நிற்கும்..." சத்தியன் சொல்வதைக் கேட்டுக் கொண்டு பேசாமல் வந்தவன், திரும்பி அவனைப் பார்த்தான். "உங்கள் எல்லாரையும் காப்பாத்த வேண்டிய பொறுப்பு எனக்குண்டு". சத்தியனின் நெஞ்சில் முள்ளொன்று குத்தியது போலிருந்தது.

"நான் போறன்" சைக்கிளை எடுத்து, ஒழுங்கையைக் கடந்து சென்றான். அவன் போவதையே கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான் சத்தியன். அவனது உருவம் மறைந்ததும் திரும்பி வந்தான்,

''உங்கள் எல்லோரையும் காப்பாத்த வேண்டிய பொறுப்பு எனக்குண்டு.'' மதியின் வார்த்தைகள் அவனுள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

விண்ணில் எறிக்கும் நிலவா?
வசந்த காலத் தென்றலா?...
இல்லை... இல்லை...
இரண்டுமே... அவள்தான்!

# 3

வெயில் வெம்மையாய் எரித்தது. வெயிலின் வெம்மை உடலில் வியர்வையை உண்டுபண்ணியது. மேனியில் ஒட்டிக்கொண்டிருந்த சேட்டைக் கழற்றிவிட்டான் சத்தியன். வியர்வை குறையவில்லை ''வியர்வை வெளியேறுவது நல்லதுதான். உடலிலுள்ள கழிவுகள் வியர்வையாய் வெளியேறிவிடுந்தான்'' ஆனால் உடலுக்கு வெளியே வியர்வைத்துளிகள் படர்ந்திருப்பது அந்தரமாய்க்கிடந்தது.

துவாயொன்றினால் வியர்வையைத் துடைத்தான். சற்று நேரங்கழிய மீண்டும் வியர்வைகள் துளிர்விட்டன. மீண்டும் துடைத்தான். மீண்டும் மீண்டும்... 'வேலை செய்யாமலே இவ்வளவு வியர்வைத் துளிகள்! வேலை செய்யும்போது...? மலையகத் தோட்டங்களிலை காலை முதல் மாலை வரை அதற்குள்ளே வாழ்வு.. அதற்குள்ளே மடிவு... எத்தனை தொழிலாளர்களின் வியர்வைகள் - இரத்தங்கள் அந்த மலை முகடுகளில் உறைந்திருக்கும்?...' சத்தியனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. வீட்டில் மாட்டியிருந்த ''தேயிலைத் தோட்டத்தில் தேயிலைகொய்யும் பெண்களின் படத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

வாசலில் ஆளரவம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது கலாவும் சுபத்திராவும் வந்துகொண்டிருந்தனர். காலையில் வந்த சுபத்திரா கலாவையும் கூட்டிக்கொண்டு எங்கோ சுற்றித் திரிந்து

விட்டு வந்திருந்தாள். அவனைக் க ட ந் து செல்லும்போது - ''சேட்டைக் கழட்டிப் போட்டு நிண்டால் பெரிய பயில்வான் எண்ட நினைப்புப் போலை'' என்று சொல்லிவிட்டு, சற்றுத் தள்ளிப்போய்ச் சிரித்தாள்.

சுபத்திரா சத்தியனின் மாமாவின் மகள். சத்தியனின் அப்பாவுடன் கூடிப்பிறந்த தங்கை செல்லம்மா. அவளின் கடைசி மகள்தான் சுபத்திரா. சத்தியனின் அப்பாதான் உத்தியோக மாப்பிள்ளையான இராசையாவைச் செய்து வைத்தவராம். அப்பா நோய்வாய்ப்பட்டு இறக்குமுன்னர் சத்தியனின் குடும்பத்தாரும் நல்ல நிலையில்தான் இருந்தனர். இப்போது வருமானமேதுமின்றி ..

சுபத்திராவின் நிலமை வேறானது. அப்பா பென்சனியர். மூத்த அண்ணன் தயாளன் சுவிஸில். அடுத்த அண்ணன் குணாளன் ஜேர்மனியில்... நல்ல சம்பளத்தில் ஏதோ வேலை செய்கின்றனர். என்ன வேலையென்பது வீட்டாருக்கே தெரியாது. அவளைப் பொறுத்தவரை - அவளுக்குக் குடும்பப் பிரச்சனைகளேதுங் கிடையா. எது தேவையோ, அதைச் செய்து முடித்திடப் பணம் இருக்கிறது,

"காலம் மாறிக்கொண்டு வருகுது. பால் மாற்றந்தான் வரேல்லை. தப்பித்தவறி பெடியனாய்ப் பிறந்திட்டுது. சிரித்துக்கொண்டு வந்தாள் சுபத்திரா. அவளின் கையில் கன்டோஸ் பெட்டி இருந்தது.

"ம்..." நீட்டினாள். அவன் நிமிர்ந்து அவளையும் கன்டோஸையும் பார்த்துவிட்டு, தலையைக் குனிந்துகொண்டான்.

"வேண்டாமோ..."

"........" அவனது வாய்க்கு முன்னே நீட்டினாள்.

"வேண்டாம் .." அவன்வாயை விலக்கினான்.

"நீங்கள் சொல்லுவீங்கள்தானே .. எனக்குத் தெரியும்..."

"என்ன தெரியும்? விருப்பமில்லை··· எடுக்கேல்லை. பிறகென்ன?"

"உண்மையாய் விருப்பமில்லையெண்டு சொல்லும் பாப்பம்" கையை நீட்டினாள். அவன் 'சத்தியம் வழங்கவில்லை.

''எனக்குத் தெரியும் எங்களிட்டை வாங்கமாட்டீரெண்டு ..'' திரும்பி உள்ளே சென்றாள்.

''சுபா... இஞ்சை கொண்டுவா...'' திரும்பி வந்தாள். அவளைப் பார்த்து ஒரு நக்கல் சிரிப்பு சிரித்தான். அவள் சுட்டு விரலைக் காட்டி ''இரும்...பழக்கிறன்'' என்றபடி உள்ளே போனாள்.

சுபாவைக் கண்டால் அவனுக்கு குழந்தையொன்றின் ஞாபகமே எழும். குழந்தைகள் போலப் பேசுவதும், சுற்றித் திரிவதும், அழுவதும், மீண்டும் சிரிப்பதும் .. கோபப்படுவதும், சற்று நேரத்தில் அதை மறந்து குதூகலிப்பதும்...

சத்தியனுக்கு அவளை அழ வைத்துப் பார்க்க விருப்பம். ஏதாவது அவளைத் தாக்குவது போலச் சொல்லிவிட்டால் உடனே கோபப்படுவாள்; அழுகை வெடிக்கும். சற்று நேரத்தில் வழமைக்குத் திரும்பிவிடுவாள். சிரிப்பாள்... குதூகலிப்பாள். பழையதையெல்லாம் மறந்துவிடுவாள்.

ஒரு நாள் மாலை வேளை வழக்கமான சிரிப்பு எதுவுமில்லை. ஏதோ ஒரு தவிப்புப் போல... அடிக்கடி அவனுக்குக் கிட்ட வந்து வந்து .. தயங்கித் தயங்கி .. வருவது; எதுவுமே பேசாது திரும்பிச் செல்வது .. சத்தியன் அதை அவதானித்தான் கேட்கவேண்டும் போலிருந்தது.

''சுபா...''

''ஆங்...'' ஓடி வந்தாள்.

''என்னபிரச்சனை?... சொல்லு''

ஒ · ஒண்டுமில்லை ..

''அப்பிடித் தெரியேல்லை ஏதோ பிரச்சனையிருக்கெண்டு தெரியுது'' கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தாள். பின் தலையைக் குனிந்தவாறு இருகைகளையும் சேர்த்து விரல்களைப் பிசைந்தபடி கேட்டாள்.

''சத்தியன் என்னை விட்டுவிடுவீங்களே...'' அவனுக்கு ஆச்சரியமாய்க் கிடந்தது.

''என்ன சுபா சொல்லுறாய்'' அவளுக்கு கண்கள் கலங்கின.

''என்னாலை உம்மை விட்டிட்டு இருக்கேலா... என்னை விட்டிட்டு நீங்கள் தூரப் போயிடுவீங்களோ எண்டு பயமாயிருக்குது''

''சும்மா விசர்க்கதை கதையாதை. உன்ரை நிலை வேறை. என்ரை நிலை வேறை. சும்மா நீ இப்பிடியே என்னைச் சுத்தி வந்தால் பாக்கிறவை ஏதும்...'' அவனை இடைமறித்துச் சொன்னாள். ''நினைக்கட்டுமன். என்ன சொல்லுவினம். அவனுக்கும் அவளுக்கும் லவ்வெண்டு சொல்லுவினம்... சொல்லட்டுமன்...

''சுபா உனக்கென்ன விசரே? எனக்கெவ்வளவு பிரச்சனைகள் இருக்கு. நீ சும்மா பகிடி விடுறாய் ..''

''ஓம்... ஓம்... எனக்கு விசர்தான். நான் விசராயே இருந்திட்டுப் போறன்'' கண்களைக் கண்ணீர் நிறைக்க அவள் விம்மினாள்.

''இப்ப ஏன் அழுகிறாய்... நான் என்ரை பிரச்சனையைத் தானே சொன்னனான்...'' அவன் அவளைப் பார்த்தான். அவளது கண்களை நிறைத்துக் கண்ணீர்! இமையை வெட்டினாள். இமையை வெட்டும்போது கண்ணீர் சிதறியது. அதைக் கையினால் துடைத்துக்கொண்டாள். துடைத்துவிட்டுச் சத்தியனை நிமிர்ந்து பார்த்தாள். மீண்டும் தலையைக் குனிந்துகொண்டு கையைப் பிசைந்தபடி சொன்னாள். ''நானொண்டுக்கும் அவசரப் படேல்லை. உங்கடை பொறுப்புக்களை முடிச்சிட்டு வாங்கோ. அதுவரைக்கும் காத்திருக்கிறன்''

அவளது கதையைக் கேட்க அவனுக்குச் சிரிப்பாயிருந்தது.

''விசர்ப் பெட்டை... நாலு பெட்டையளைக் கரைசேர்க்கிறதுக்குள்ளை என்ரை வாழ்க்கையே முடிஞ்சிடும்''

''முடிஞ்சாப் போகட்டும். அதுவரைக்கும் காத்திருப்பன். அப்பிடியும் ஏலாட்டால் மறுபிறவியிலை ஒண்டாயிருப்பம்'' அவளது கதை அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. பலத்துச் சிரித்தான்.

''இதென்ன படமா? கதையா சொல்லுறாய். கேட்கிறதுக்கு நல்லாத்தானிருக்கு கனவுகளை விட்டிட்டு நடைமுறை வாழ்க்கைக்கு வா... மறுபிறப்பாய் சந்திப்பாம்''

அவன் சிரித்தான். அவள் தலையைக் குனிந்துகொண்டிருந்தாள். கண்கள் நீர்த் திவலைகளைச் சிந்தின. தனிந்த குரலில் அவன் சொன்னான். "சுபா உதுகளை விட்டிட்டு நான் சொல்லுறதைக் கேள். நல்ல சீதனத்தோடை எஞ்சினியர், டொக்டராய் பார்த்துச் செய்து வைக்கிற நிலையிலை அண்ணைமார் இருக்கினம். அதுக்குத் தக்கதாய் நீவடிவானனி, ஏ. எல். படிக்கிறாய். அதாலைதான் சொல்லுறன். நீ வீணாய் என்னை நம்பிச் சீரழியாதை. வேணுமெண்டால் நானே தோழனாய் நிக்கிறன்." சிரித்தான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். முகம் சிவந்திருந்தது. கோபக் குறிகள் தென்பட்டன.

"வேண்டாம்... வேண்டாம்... நீங்கள் எனக்கு அறிவுரை சொல்லவேண்டாம்..." கண்ணிலிருந்து நீர் சிந்தப் பெலத்துக் கத்தினாள்.

சத்தங்கேட்டு ராணியக்கா ஓடிவந்தாள், கண்ணைக் கசக்கியபடி சுபத்திரா அவளுடன் சென்றாள்.

"அக்கா என்ன நினைத்தாவோ" அவனுக்கு ஒரு மாதிரியாயிருந்தது. 'வித்தியாசமா எடுக்கமாட்டா. எண்டாலும்... சுபாவையும் புண்படுத்தியிருக்கக் கூடாதுதான்' என்று தோன்றியது.

ஏதோ நினைவில் இருந்துவிட்டான். அருகே சுபத்திரா வந்து நிற்பது தெரிந்தது.

"ஏன் மச்சான்... கண்போலைத் தீத்திவிட்டால்தான் தின்பீங்களோ?" என்றபடி கொல்லென்று சிரித்தாள்.

"ஏன் மாமி.. நீங்கள் சத்தியனைப் பெட்டையாக்கினீங்கள்... மணவறையிலையிருந்து வெக்கப்படுகிற பொம்பிளை போலை இருக்கிறார்" அவனைக் குறும்பாய்ப் பார்த்தாள்.

"ஓமடி பிள்ளை! பெட்டையள் நாலையும் ஒரு வழியிலை விடவேண்டியவன் அவன். அதுக்காண்டி அவனைக் கட்டுப்படுத்தி ஒரு கூட்டுக்குளை அடைச்சு வைச்சிருக்கிறன்" அம்மா சொன்னதைக் கேட்டு அவள் பெலத்துச் சிரித்தாள்.

"எல்லாப் பெடியளும் தங்கடை வீக்னஸ்ஸைக் காட்டிப் போடுவாங்கள். என்ன?" கடைக்கண்ணால் சத்தியனைப் பார்த்து நக்கலாய் நகைத்தாள். அவனுக்குக் கோபம் வந்தது. "எனக்கு என்ரை அலுவல் தெரியும். நீ சொல்லத் தேவையில்லை. வீக்னஸ்ஸாம்... உன்ரை அண்ணைமாருக்கு அப்பிடியிருக்கும். எனக்கு அப்பிடியில்லை"

அவனது பேச்சைக் கேட்டு, அவள் அழத் தொடங்கிவிட்டாள். குசினிக்குள்ளிருந்து அம்மா வெளியே வந்தாள். சுபத்திராவை அணைத்தபடி!

"வெளுத்து விட்டனெண்டால்... ஏனடா பிள்ளையை அழவைச்சனி நீ வாடி அம்மா" என்று கூட்டிச் சென்றாள்.

சற்று நேரங் கழிய சுபத்திரா மீண்டும் வந்தாள். அவனைக் கண்டதும் கைவிரல்களால் முகத்தை மறைத்தாள்.

"அழுகை முடிஞ்சுதோ..."

"போம்... உங்களுக்கு இப்ப பெரிய லெவல்" சிரித்தாள். கன்னத்தில் கண்ணீர் வடிந்த தடம் தெரிந்தது.

சந்தியில் ஒலிபெருக்கியில் ஏதோ அறிவிக்கப்படுவது தெளிவற்றுக் கேட்டது.

"என்னடி பிள்ளை... ஏதோ அறிவிப்புக் கேக்குது"

"ராத்திரி கட்டுவன் அடிபாட்டிலை ஒரு பெடியன் செத்திட்டானாம். தோறணமும் கட்டியிருக்கு" பரமா சொன்னாள்.

"ஒரு விதை விழுந்திட்டுது... இந்த விதையின் வீழ்ச்சி எத்தனை முளைகளை உருவாக்கும்!"

ஒரு விடுதலைப் போராளி இறக்கிறான். ஆனால் அவனது இடத்தை நிரப்ப பலர் முன்வருகின்றனர். அவனேந்திய ஆயுதம் இன்னொருவனின் கையில் எழுகிறது. அவனது உடை பாதணிகள் .. ஒவ்வொருவராய் வந்து சேருகிறது. அவனது இலட்சியம்... உணர்வு... அனைவரிலும் உறைகிறது.

இன்று ஒருவன் மரணித்துவிட்டான். அவனது மரணம் — சமூகத்தின் மத்தியில் — இளந் தளிர்கள் மத்தியில் தாக்கத்தை உண்டு பண்ணும். அவனது இலட்சியப் பற்று... தியாக உணர்வு ஏனையோரை அவன் வழி நடக்கச் செய்யும். அவர்கள் அவன் விதைத்த விதையில் முளைத்த முளைகள்..."

''கோட்டையும் பிடிச்சாச்சு. இவரெதைப் பிடிக்கப் போறாரோ?'' சுபத்திரா அவனை விலத்தும்போது சொல்லிய படி போனாள். அவளோடு ரமாவும் போனாள்.

''கோட்டையிலை குண்டுச் சத்தம் கேட்டவுடனை பங்கருக்கை ஓடுற சுபாக்கா இப்ப வீரங் காட்டுறா.''

''நீ பெரிய திறம். பொம்மரைக் கண்டா முன்னுக்குத் தலை நுழைச்சுப் போடுவாய்...''

''எண்டாலும் நாங்கள் உங்களைப்போலை பயந்து சுவிசுக்கு ஓடமாட்டம்.''

ரமா சொன்னது சுபத்திராவிற்குச் சுட்டுவிட்டது.

''இனிமேல் வந்தாப் பார். இப்ப உங்களுக்குப் பெரிய லெவல்''என்று சொல்லிவிட்டு வெளியே சென்றாள்.

வானத்தில் இயந்திரத் தும்பியின் இரைச்சல் கேட்டது. ''ஹெலி வருகுது பிள்ளை சுபத்திரா இஞ்சை வா'' அம்மா அழைத்தாள். குரலில்லை.

அண்மி வந்த தும்பி சுன்னாகச் சந்தைப் பகுதியை நோக்கிச் சரிந்து திரும்பியது. மறுகணம் சடசட எனச் சுட்டது. எல்லோரும் பங்கருக்குள் ஓடினர். சத்தியனும் உள்ளே நுழைந்தான். பங்கருக்குள் சுபத்திராவும் இருந்தாள். அதே சிரிப்பு; அதே பார்வை!

ஹெலி கொப்டர் போன பின்னர் எழுந்து வந்தனர்.

''சீச்சி... எங்கடை வாழ்க்கை பதுங்குகுழி வாழ்க்கையாப் போச்சுது'' அம்மா சினந்தபடி வெளியே வந்தாள்.

இயந்திரத் தும்பி தெல்லிப்பழைப் பகுதியில் வேட்டுத் தீர்க்கும் சத்தம் கேட்டது.

அவர்கள் சிட்டுக்குருவிகள்...
ஆனால்... சீதனம்...
அவர்களின் சிறகுகளைச்
சிறையிட்டு விடுகிறது!
சிறைகளை உடைப்பதற்கு
அவர்கள்—
சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்!

# 4

சத்தியனுக்கு வீட்டில் இருக்க சினமாய் இருந்தது. நேரத்தைப் பார்த்தான். மணி ஐந்தாகி விட்டது. சேர்ட்டை எடுத்துக் கொழுவியபடி தோட்டப் பக்கமாக நடந்தான். முத்தமிழ் மன்றத்தை அண்மித்த போது, அரைச் சுவரில் குந்தியிருந்தபடி சந்திரன் கூப்பிட்டான்.

"தோட்டப் பக்கமே.. நில்லு, நானும் வாறன்." கடகடக்கும் தனது சைக்கிளில் ஏறி மிதித்தான். சத்தியனும் அதில் ஏறிக் கொண்டான்.

சந்திரன் சந்திரன்தான்! சிலவேளைகளில் அமாவாசையாக இருப்பான். சில வேளைகளில் பௌர்ணமியாயிருப்பான். சில நாட்களில் முகத்தில் தாடி வளர்த்து, அமாவாசை போலக் காட்சியளிப்பான். கேட்டால் "அவள் மாட்டனென்டிட்டாள். அதுதான் கவலை" என்பான். சில நாட்கள் தாடி எல்லாம் வழித்து, தலையையெல்லாம் ஒழுங்காகச் சீவி, புது உடுப்புடன் மலர்ந்து நிற்பான். அப்போது...

"அவள் இண்டைக்கு வாறனெண்டவள். அதுதான் அவளைக் கவர வேண்டாமோ?" என்று சொல்லுவான். அவன் ஒரு வித்தியாசமான பிறவி.

"உன்ரை வெளி நாட்டுப் பயணங்கள் எப்படி?" சந்திரன் கேட்டான்.

"இன்னும் ஒண்டும் சரி வரேல்லை"

"ஐயாவும் வெளி நாட்டுக்குப் போகத்தான் போறார். காசு பிரட்டுறதுதான் கஸ்டமாயிருக்கு. ஒரு கலியாணம் செய்தால் சீதனக் காசிலை மாறிடலாம்...ம்... அதுதான் யோசிக்கிறன்"

அவனது பேச்சைக் கேட்கச் சத்தியனுக்குச் சிரிப்பாயிருந்தது.

"பார் ஐயாவோ, நீயோ முதலிலை போறதெண்டு" அவன் சபதமிட்டான்.

காலால் பிறேக் போட்டு சைக்கிளை நிறுத்தினான் சந்திரன். இருவருமாக இறங்கி ஒற்றையடிப் பாதையால் நடந்து புகையிரதப் பாதையில் ஏறினர். சற்றுத் தூரத்தில் தெரிந்த மதகினை நோக்கி நடந்து போய் அதில் அமர்ந்தனர். முன்னால் தோட்ட வெளி விரிந்திருந்தது. பீற்றூட்டுக்குள் புழுக்கள் பொறுக்க மூன்று கொக்குகள் தரையைத் துளாவிய படி நடந்து கொண்டிருந்தன.

"அங்கை பார் மச்சான்" மின் உற்பத்தி நிலையப் பக்கமாகச் சைக்கிளில் சென்ற ஒருவரைக் காட்டினான் சந்திரன். சத்தியனுக்கும் அவரைத் தெரியும். 'சுவிஸிலை சுப்பிரிண்டன்' என்ற சொல்லுடன் இலட்சமாய் சீதனம் வாங்கி, சுன்னாகமே சுவிஸாகத் தங்கி விட்டவர்தான் அவர் திருமணம் என்ற பெயரில் எத்தனை ஏமாற்றுக்கள்"

"அவருக்கென்ன பெண்டில் உழைக்கிறாள். சீதனக் காசு கிடக்குது. அவர் திரிவார்தானே" சந்திரன் நெளித்தான்.

கொத்தாய்ப் பூத்துக் குலுங்கிய எருக்கலைப் பூக்கள் ஆடின. இலந்தை மரப் பற்றைக்குள்ளிருந்து தையல் சிட்டொன்று விர்ரெனப் பறந்து சென்றது.

"கொஞ்ச நாளைக்கு முந்தி எவ்வளவு பேரிருந்தம். இப்ப பார் நீ நான்...சிவம். இந்த மூண்டு பேருந்தானே ஊரிலை பெடியள். மற்ற எல்லாரும் எப்பிடியெப்பிடியோ போயிட்டாங்கள்."

சத்தியன் அவனை ஏக்கத்தோடு பார்த்தான்.

"மட்டையடிச்சுக் கொண்டு திரிஞ்சவனெல்லாம் வெளி நாட்டுக்குப் போய் முன்னேறீட்டாங்கள். எங்களை...எங்கடை

ஊரை...எல்லாத்தையுமே மறந்திட்டாங்கள். எல்லாம் காலந் தான்...''

"மச்சான் நீ புறு புறுத்தாப் போலை ஏதோ நடக்கப் போகுதோ! கனடாச் சீதனம் ஐஞ்சு லச்சம்... சுவிஸ் நாலு... யூ.கே மூண்டு... மிடில் ஈஸ்ற் ஒண்டரை...சீதனமே இப்பிடி ஏறேக்கை அவங்களுக்கும் லெவல் ஏறுந்தானே...''

சத்தியன் நிமிர்ந்து அவனைப் பார்த்தான். அவன் சிரித்தான்.

''நாளை நீயோ, நானோ அங்கை போனா எங்களுக்கும் அவங்கடை சுபாவம்தான் வரும்.''

வானத்தை அண்ணாந்து பார்த்தான். அது சிவந்திருந்தது. மேலை அடிவானில் சூரியன் தணற் பந்தாய்த் தெரிந்தது. உற்று நோக்கிய போது அது உருள்வது போலிருந்தது.

"குக்கூக்கோ... குக்கூக்கோ...'' இலந்தைப் பற்றைக் குள்ளிருந்து கௌதாரியொன்று கத்தியது. சத்தம் வந்த திக்கை நோக்கி, நாலைந்து கூழாங்கற்களைத் தூக்கிக் கொண்டு சந்திரன் நடந்தான். திடீரென ஓரிடத்தில் நின்று பற்றையை நோக்கிக் கற்களை வீசினான். கிர்ரென கௌதாரியொன்று பறந்தது.

''செருப்பைத் தா மச்சான்! முட்டையிருக்கும்'' இலந்தைப் பற்றைக்குள் இறங்கினான். சற்று நேரங்கழித்து மூன்று முட்டை களுடன் வெளியே வந்தான். கோழி முட்டையை விடச் சற்று சிறிய முட்டைகள்.

''சின்னன்தான். எண்டாலும் பொரியலுக்கு திறம்'' ஒன்றை அவனிடம் நீட்டினான்.

''வேண்டாம். நீயே வைச்சிரு''

''அட...சும்மா வைச்சிரடா'' கைக்குள் ஒரு முட்டையைத் திணித்தான்.

''போவமே ..இண்டைக்கு வந்ததுக்குப் பலனிருக்கு'' சந்திரன் முன்னால் நடந்தான். அவன் பின்னே சத்தியன் நடந்தான்.

மின் உற்பத்தி நிலையக் கூரையிலிருந்த ஒரு கூட்டம் புறாக்கள் மேற்குப் பக்கமாய் பறந்து சென்றன. அவற்றைப் பார்த்துக் கொண்டே சத்தியன் நடந்தான்.

"கன நாளாய் புறா பிடிக்கேல்லை. ஒரு நாளைக்கு வேலை வைக்கத்தான் வேணும்" சந்திரன் சொன்னான்.

முன்பொருநாள் சத்தியனும், சந்திரனும், சிவமுமாய்ச் சேர்ந்து நான்கு புறாக்கள் பிடித்திருந்தனர். சந்திரன்தான் ஆடாமல் அசையாமல், இருளோடு இருளாக ஏறிப்போய் நான்கு புறாக்களையும் பிடித்து வந்தான். அடுத்த நாள் விடிய சிவம் வீட்டில் வைத்து அவற்றை இறைச்சியாக்கிச் சாப்பிட்டனர். புறா இறைச்சி ருசியானதுதான்.

சந்திரன் சைக்கிளை எடுத்தான். மேலை வானில் சூரியன் செந்நிறமாய் மின்னியது. சைக்கிளில் ஏறி அமர்ந்தான் சத்தியன். புல் மேய்ந்து கொண்டிருந்த மாடொன்று அவர்களைத் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் புல்லிற்குள் முகத்தை நுழைத்தது.

* * * *

உள்ளே புழுக்கமாயிருந்தது. சாக்கொன்றை எடுத்து வந்து முற்றத்தில் விரித்து விட்டுப் படுத்தான் சத்தியன். வானில் நிலவு தெளிந்தது மின்மினிகளாய் நட்சத்திரங்கள் பூத்திருந்தன.

காலையில் தயாளனின் கடிதம் வந்திருந்தது. அவன் கல்வியங்காட்டில் ஒரு ஏஜென்சிக்காரன் இருப்பதாகவும், அவனோடு தொடர்பு கொள்ளுமாறும் எழுதியிருந்தான். அதையொட்டிய நினைவுகள் நெஞ்சில் சுமையாய் அழுத்தியது.

'வெளிநாடு என்பது ஏமாற்று வேலை. எத்தனையோ பேர் இடைவழியிலை நிண்டு தவித்துக் கொண்டிருக்கினை. நானும் அங்கை போய் அப்பிடி நிண்டா ..'

அம்மாவின், அக்காவின், கலாவின், ரமாவின், தமயந்தியின் சுபத்திராவின்.. எல்லோர் முகங்களும் கண் முன்னே நிழலாடின.

"நான் போகமாட்டன்...இஞ்சையிருந்து தோட்டஞ் செய்தாலும் பரவாயில்லை" என மனது அரற்றியது. அவனருகே வந்து சுருண்டு படுத்திருந்த சின்னநாய்க்குட்டி குரைத்தது:

"புள்ளை...புள்ளை லச்சுமி.." வாசலில் யாரோ கூப்பிட்டனர். அம்மா வாசலுக்குப் போய்

"பொன்னுத் துரையண்ணையே...வாங்கோ" என அழைத்து வந்தாள்.

"எப்பிடியண்ணை சுகங்கள்?"

''நாட்டிலை எல்லாப் பிரச்சனையளும் ஒண்டடி மண்டடி யாய்த் தலை தூக்கீட்டுது. இதுக்கிளை எங்கை மனிசர் சுகமாயிருக்க முடியும்?''... வெற்றிலைச் சாற்றைத் துப்பி விட்டு. பொன்னுத்துரையர் உள்ளே வந்தார்.

புறோக்கர் பொன்னுத்துரையர்! ராணியக்காவின் திருமண விடயமாகத்தான் வந்திருக்க வேண்டுமெனச் சத்தியன் ஊகித்துக் கொண்டான்.

''பிரச்சனையளும் தீருற போக்காய்த் தெரியேல்லை அண்ணை''

''தீரும்... தீரும்... அவங்கள் கொழும்பிலை கூட்டம் போடு றாங்கள் எப்பிடி எங்களை அழிப்பமெண்டு. தீருற பிரச்சனை யெண்டா எண்டைக்கோ தீர்ந்திருக்குமே'' என்று சொல்லி விட்டுச் சிரித்தார்.

கலா ஒரு டம்ளரில் தேநீரை எடுத்து வந்து அவரருகே வைத்தாள்.

''பிள்ளை, செம்பிலை கொஞ்சம் தண்ணி தா...வாய் கொப்பளிப்பம்''

செம்பில் கலா கொண்டு வந்த தண்ணீரை வாங்கி, வெளியில் வந்து வெற்றிலை வாயைக் கொப்புளித்தார். மீண்டும் திரும்பி வந்து, செம்பைக் கொடுத்து விட்டுத் தேநீரை எடுத்து அருந்தினார். தேநீரைக் குடித்து முடித்து விட்டு,செல்லையாவின் படத்தைப் பார்த்தார்.

''அவன் சிமான் போயிட்டான். எல்லாத்தையும் உன்னட் டைப் பொறுப்பிச்சுப் போட்டு...ம்...''செருமினார்.

''பிள்ளை லச்சுமி . ஒரு குறிப்பு இடைச்சிருக்கு. அதுதான் வந்தனான்'' அம்மா மகிழ்ச்சியுடன் அவரைப் பார்த்தாள்.

''பெடியன் நல்ல வாட்ட சாட்டமான ஆம்பிளை சொந்தமாய் வீடு வளவும் இருக்குது''

''பெடியன் என்ன செய்யிறான் அண்ணை''

''கமந்தான் பிள்ளை. மூவாயிரங்கண்டு தோட்டஞ் செய்யு றான். நல்ல பிரயாசைக்காரன். பெடியன் உழைச்சுத்தான் ஒரு அம்பதினாயிரம் தருவனெண்டனான். அவையும் ஓமெண்டிருக்

கினை'' அறைக்குள்ளிருந்து கதவைத் திறந்தபடி பார்த்துக் கொண்டிருந்த ராணியின் முகம் கறுத்தது. படக்கெனக் கதவை அடித்துச் சாத்தி விட்டு உள்ளே போனாள். அம்மா திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு நிலமை விளங்கியிருக்க வேண்டும்.

''பெடியன் நல்ல குணமானவன். குடியோ, வெறியோ ஒண்டுமில்லை. நல்ல சம்பந்தமடி. நான் உன்ரை நிலையைப் பார்த்துத்தான் பொருத்தினனான்.'' அவர் சொல்லிக்கொண்டே போனார்.

அம்மா எழுந்தாள்: அறைக் கதவைத் திறந்து கொண்டு. ராணியிடம் போனாள். பொன்னுத்துரையர் எதுவுமே பேசாது அவளைப் பார்த்தார். கலாவும், ரமாவும் தமக்குள் பார்வையால் மோதிக் கொண்டனர்.

''எனக்குப் போயும் போயும் ஒரு தோட்டக் காரனையே செய்யப் போறீங்கள். அதிலும் விட நான் இப்பிடியே இருந்திடுறன்'' ராணி விம்மி வெடித்தாள். அம்மாவால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை. திரும்பி வந்தாள். பொன்னுத்துரையர் கேள்விக் குறியுடன் அவளைப் பார்த்தார்.

''அவள் மாட்டனெண்ணுறாள். உத்தியோக மாப்பிளையா அல்லாட்டி வெளிநாட்டு மாப்பிளையாப் பாருங்கோ அண்ணை'' அவளைக் கூர்ந்து பார்த்து விட்டுத் தனக்குள் நகைத்துக் கொண்டார்.

''இண்டைக்கு மாப்பிளை எடுக்கிறது குதிரைக் கொம்பாய்க் கிடக்குது. ஆறு பொம்பிளைக்கு ஒரு ஆம்பிளைதான் யாழ்ப்பாணத்திலை இருக்குதெண்டு பேப்பரிலை போட்டிருக்கு. அதுக்கின்னை முந்துறதை விட்டிட்டு, உத்தியோக மாப்பிளை யெடுக்கச் சுளையாய் வைச்சிருக்கிறியே?'' கேள்விக் குறியுடன் அவளைப் பார்த்தார்.

''என்னட்டை வெளிநாட்டுப் பெடியன்ரை குறிப்புக் கிடக்குது. குற்றமில்லை; பொருந்தும் ஆனா, சீதனந்தான் எக்கச் சக்கம்! வீடு வளவோடை மூண்டு லச்சம் காசும் நகையும் கேக்கினை''

அதைக் கேட்ட அம்மா தலையில் கையை வைத்தாள்.

''என்ரை கடவுளே! இதுக்குக் கொட்டிக் குடுக்க எங்கை யெண்டாலும் கொள்ளையல்லே அடிக்க வேணும்.'' ஏங்கினாள்.

''இந்த சீதனத்தை நிப்பாட்டினால்...'' அவளது பேச்சைக் கேட்டு அவர் பலத்துச் சிரித்தார்.

''பேய்ப் பிள்ளை! அந்தக் காலத்திலை ஒரு சம்பிரதாய மாய்த் தோன்றி, இண்டைக்கு ஒரு பாரம் பரீயமாயே நிலைச் சிட்டுது. சீதனக் காசிலையே வயித்தை வளக்க நினைக்கிற யாழ்ப்பாணச் சனங்கள் விடுங்களே? இஞ்சை இண்டைக்கு இது ஒரு தொழில்தானே!''

''ஓமண்ணை! எங்கடை புத்தூர்ப் பொன்னம்மாக்கா டொக்டருக்குப் படிச்சவன்ரை சீதனக் காசிலைதானே ரண்டு குமருகளையும் கரை சேத்தவ. பெடியன்ரை சீதனம் எவ்வளவு தெரியுமே? வீடு வளவு, கடைக்கிட்டங்கியோடை ஐஞ்சு லச்சம்!''

''அவள் கெட்டிக்காரி'' சிரித்தபடி எழுந்தார்.

''நான் வாறன் பிள்ளை... சந்திச்சால் வருவன். எங்கை மோனைக் காணேல்லை'' வாசலைத் தாண்டி முற்றத்திற்கு வந்தார்.

''அங்கை படுத்திருக்கிறான். படிப்புப் பேச்சுமில்லை. கொஞ்ச நாளாய்க் குழம்பிப் போயிருக்கிறான். வெளி நாட்டுக்கு அனுப்பத்தான் யோசிக்கிறன்''

''ஓம்...ஓம்...அதைத்தான் முதலிலை கவனி'' அவர் புறப் பட்டார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சத்தியன் வானை அண்ணாந்து பார்த்தான். கண்சிமிட்டும் நட்சத்திரங் களூடே செயற்கைக் கோளொன்று வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

''ராணியக்கா எவ்வளவு பெரிதாய்ப் பேசுவாள். இன்று? என்ன இருந்தாலும் அவளும் இன்றைய யாழ்ப்பாணத்துப் பெண்தானே! யாழ்ப்பாணத்தின் ஒட்டு மொத்தப் பெண்களின் கருத்தை அவளும் பிரதி பலிப்பதில் என்ன தவறிருக்கிறது? இதற்கெல்லாம் காரணம் யாது? சமூகமா? சமூக மாற்றமா? சமூகத்திற்கு ஏற்பட்ட சூழ்நிலையா? எது?

ஆட்காட்டிக் குருவியொன்று அலறியது. உள்ளே அம்மா ராணியைப் பேசுவது கேட்டது. சாக்கையும் தூக்கிக் கொண்டு எழுந்தான்.

''மூத்ததை ஒரு கரையிலை சேத்திட்டால் மற்றதுகளை மெல்ல மெல்லச் சேத்திடலாமெண்டு பார்த்தால் அது தலை யாலை அழியுது''

''அம்மா! வாழப் போறது நான்தானே. எனக்குப் பிடிக்காத ஒருதரோடை என்னாலை வாழேலுமே?''

''பிடிக்காதெண்டு ஒண்டிருக்கோ? உனக்குக் கொட்டிக் குடுக்கிறதுக்குக் கொப்பர் எதைத்தான் விட்டிட்டுப் போனார். நான் இதுக்கை கிடந்து மாளுறன்'' அம்மா கத்தினாள். கூடவே கண்ணீர் சிந்தினாள்.

''அதுதானே சொல்லுறன்...எனக்குக் கலியாணம் வேண்டாம் நீங்கள் மற்றவைக்குச் செய்து வையுங்கோ'' அக்காவும் விம்மினாள். சத்தியன் அவர்களைச் சமாதானப் படுத்தினான்.

'எல்லாவற்றிற்கும் தீர்வு காணலாம். ஒன்றேயொன்று இருந்தால்... பணம் பணம்!'

எப்படியாவது வெளிநாடு செல்வதெனத் தீர்மானித்துக் கொண்டான். நாளை ஏஜென்சிக் காரனைச் சந்திப்பது என்ற முடிவுடன் சாப்பாட்டுக் கோப்பையைத் தூக்கினான்.

ஒரு கூட்டுப் பறவைகள்
ஒவ்வொன்றும்...
வெவ்வேறு திசைகளில்...இது
இந்த மண்ணின் சாபமோ?

## 5

காலையிலேயே சத்தியன் புறப்பட்டான். எப்படித்தான் முயன்றும் ஒன்பது மணியளவில்தான் ஏஜென்சிக்காரனின் வீட்டைக் கண்டுபிடிக்க முடிந்தது. வீட்டு வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் நின்றது. ஹோலில் அழகான படங்கள் தொங்

கின. அவன் வாசலில் பேசாமல் நின்றான். சற்று நேரத்தில் ஒரு பெண் வெளியே வந்தாள். ''இருங்கோ அவர் வருவர்''

உள்ளே வந்து ஒரு கதிரையில் அமர்ந்தான். குசன் மென்மையாயிருந்தது. படகில் பயணிக்கும் ஒரு ஜோடி, பனிச்சறுக்குப் போட்டி, பூங்கொத்து... அழகான படங்கள் ரசித்துக்கொண்டிருந்தான்.

''ஆங்... என்ன விசயம்?'' ஒரு தடித்த இளைஞன்; மெல்லிய குறுந் தாடியுடன்! அவனருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

''வெளிநாடு போறதுக்கு... தயாளன் உங்களிட்டைப் போய்க் கதைக்கச் சொல்லிக் கடிதம் போட்டிருந்தான். அதுதான்...''

''சுன்னாகமே?'' எனக் கேட்டுவிட்டு ஏதோ யோசிப்பது போலப் பாவனை காட்டினான்.

''கொழும்பிலை என்னோடை ரெலெக்ஸிலை கதைத்தவர் தான்...ம்.. முந்தியைப் போல இல்லை. இப்ப சுவிசுக்குப் போறது கஸ்டம்.

வழியளும் புளொக்காயிட்டுது. இப்ப இரண்டரை கட்டினாத்தான் போகலாம்...'' நிமிர்ந்து அவனைப் பார்த்தான்.

''இத்தாலி வரைக்குந்தான் நாங்கள் கூட்டிக்கொண்டு போவம். அங்கையிருந்து சுவிஸைக் கடக்கிறது உம்மடைவேலை. சரியோ?'' அவனுக்கு எதுவுமே புரியவில்லை. ஒப்புக்குத் தலையாட்டினான்.

''நான் ஒருத்தருக்கும் போற வழியளைச் சொல்லுறேல்லை. தயாளன்ரை ஆள் எண்டபடியால் சொல்லுறன். ருறிஸ்ற்றாய்த் தான் இத்தாலிக்குப் போகவேணும். முதலிலை இங்கையிருந்து உங்களைக் கூட்டிச்செல்ல ஒருவர் வருவார். அவர் முன்னமே எல்லாத்தையும் சொல்லுவார். எயர்போட்டிலை அவர் புறம்பாப் போவர். பிளேனுக்கையும் அப்பிடித்தான். நீங்கள் அவரோடை எதுவும் பேசக்கூடாது. அவரை வெளியாள் எண்டு நினைச்சுக்கொண்டு அவருக்குப்பின்னாலை போகவேணும். விளங்குதா?''

''ம்...''

"இத்தாலியிலை இறங்கினவுடனை கிறீஸ்தவனாய் மாற வேணும்" இதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்தான். ஒரு நாட்டிற்குள் செல்வதென்றால் மதம் மாறவேண்டுமா?

"பெரிசா யோசிக்காதேம்! இத்தாலியிலை நிக்கிறவரைக் குந்தான்! பிளேனாலை இறங்கினால் ஒரு பைபிளும், செப மாலையும் தருவினை. செபமாலையை அணிந்துகொண்டு, பைபிளோடை போய் வத்திக்கான் சேர்ச்சிலை பிறேயரிலை இருக்கவேணும். அவ்வளவுதான்."

முன்புவந்த பெண் இரண்டு டம்ளர்களில் தேநீர் கொண்டு வந்தாள். அவள் அவனது மனைவியாய் இருக்க வேண்டும். இருவரும் தேநீரை எடுத்து அருந்தினர்.

"அங்கையிருந்து வெளியே வந்து றெயினிலை, இத்தாலி–சுவிஸ் போர்டரடிக்குப் போகவேணும். உங்களோடை வந்தவர் உங்களை றெயிலிலை ஏத்திவிட்டுவிடுவார். இவ்வளவுதான் எங்கடை வேலை. இதுக்குப்பிறகு நீர் தயாளனோடையோ, வேறு யாரோடையோ தொடர்புகொண்டு போர்டர் மாத்திற பெடியளுக்கு முப்பதினாயிரம் கட்டி சுவிசுக்குப் போகவேணும்"

"என்ன, சுவிஸ் பயணம் பிடிச்சுதா?" – அவன் சிரித்தான்.

"கேட்கவே பயமாயிருக்கு. எப்பிடிப் போறது" - சத்தியன் சிரித்தான்.

"முதல் ஒரு மாதிரித்தானிருக்கும். போகப் போக எல்லாம் சரிவரும். முயற்சி செய்தால் சரி. வெளிநாட்டிலை லட்சக்கணக்கிலை எங்கடை பெடியள் நிக்கிறாங்கள். இப்பிடிப் பாத்தால் அவங்களும் இஞ்சை நிண்டிருக்கவல்லோ வேணும். தற் ஸ் வெறி ஈஸீ..." என்று சொல்லி சத்தியனது முதுகில் தட்டினான். அவன் சிறிது நேரம் பேசாமலிருந்து யோசித்தான். சிறிது நேரத்தால் -

"நான் யோசிச்சிட்டு நாளைக்கு வந்து சொல்லுறன்" என்று சொல்லியபடி எழுந்தான். கண்கள் மீண்டும் பனிச்சறுக்கல் படத்தில் நிலைத்து மீண்டன.

❋ ❋ ❋ ❋

வானத்தில் ஒரு கூட்டம் நாரைகள் பறந்து சென்றன. சைக்கிளை எடுத்து மிதித்துக்கொண்டு வெளியேறினான் சத்தியன். வழியில் சிவம் எதிர்ப்பட்டான். ஒற்றைக்காலை நிலத்

தில் ஊன்றியபடி சைக்கிளில் அமர்ந்தவாறே நின்ற சிவத்தின ருகே சைக்கிளை நிறுத்தினான்.

''மச்சான்... இனி நானும் நீயுந்தான்''

''ஏன்?''

''சந்திரனும் கொழும்புக்குப் போட்டான்'' சத்தியனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

''நேற்றுப் பின்னேரம் என்னோடை கதைச்சவன்.''

''இரவு போட்டான். திடீரெண்டுதான் போனவன். போகப் போறதெண்டு அவனுக்கு உடனைதான் தெரியுமாம்...''

''ஐயாவோ, நீயோ முதலிலை போறதெண்டு பாப்பம்'' நேற்றுச் சந்திரன் சபதமிட்டது நினைவுக்கு வந்தது.

''இனிப் புறாவும் பிடிக்கேலாது. இளநீரும் குடிக்கேலாது'' என்று சொல்லியபடி சைக்கிளை எடுத்தான்.

குச்சொழுங்கையால் தெற்கே போய் வளைந்து திரும்பி னான். மூலையில் சீனியம்மானின் கொட்டில் தெரிந்தது. சீனி யம்மான் அப்பாவிற்கு மாமன் முறையானவர். ஊரில் எல்லோ ருமே அவரை அப்படித்தான் அழைப்பர். 'அவர் தனிக்கட்டை மனைவியும் பிள்ளையும் வேளாவேளைக்கே போட்டுதுகள்'

சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே போனான். அவர் சுருட் டுப் புகைத்துக்கொண்டு லௌன்சரில் சாய்ந்து படுத்திருந்தார். வெண்ணிறத் தலைமயிர்கள் எண்ணெயில் குளித்திருந்தன. அவ னைக் கண்டதும்

''என்னமோனை, என்னவேன் அலுவலே'' என்று கேட் டார். ''உங்களிட்டைத்தான்'' உள்ளே போய்த் திண்ணையில் அமர்ந்தான். அடுப்பில் கேத்தல் வைக்கப்பட்டிருந்தது. அது ''ஸ் . ஸ்'' என்ற சத்தத்துடன் கொதித்துக்கொண்டிருந்தது.

''சாப்பிட்டியே''

''ஓம்''

''வௌவால் கறி வைச்சிருக்கிறன். கொஞ்சத் சோத்தோடை சாப்பிடன்''

''வேண்டாம்... நான் இப்பதான் சாப்பிட்டனான்.''

"கொப்பருக்கு நல்ல விருப்பம். சின்னனிலை நீயும் நல்லாய்ச் சாப்பிடுவாய்தான். இப்ப எங்கை? எங்கினேன் ஆசையருமையாய்ப் பிடிச்சாச்சரி. இந்த வரியம் இஞ்சினேக்கை கொடி கட்டேல்லை. இது உரும்பிராயிலை சொல்லி வைச்சு எடுத்தது"

முன்பென்றால் ஊரில் பத்து வெளவால் கொடியாவது தொங்கும்பழக் காலத்தில்வெளவால் இறைச்சிதான்.

நடுவே வெளி. வெளியின் இரு புறமும் பனங்கூடல். ஒரு புறப் பனையொன்றின் உச்சியிலும், மறுபுறப் பனையொன்றின் உச்சியிலும் இரு பெரிய தடிகள் கட்டப்படும். தடிகளில் வளையம் போட்டு, நைலோன் நூலினால் வெளியில் கட்டப்பட்டிருக்கும் வலையை இழுக்கவும், தளர்த்தவும், கயிறு கட்டப்படும். வலைகளில் தூண்டிலும், இலந்தை முட்களும் குத்தப்படும். இருபக்கப் பனைகளிலும் வெளவால் சுவடுகள் (தோல்) கட்டப்படும். சுவட்டு மணத்தில் வெளவால்கள் வந்து வலையில் சிக்கும். உடனே கயிற்றைத் தளர்த்தி, வலையைக் கீழிறக்கி வெளவாலைப் பொல்லொன்றால் அடித்துக் கொல்வார்கள்.

ஒரு நாளிரவு சீனியம்மானுடன் சத்தியனும் வெளவால் அடிக்கச் சென்றிருந்தான். வெளவாலின் முகம் நாய் போல் இருக்கும். சிலவேளை கடித்துவிடும். இறைச்சியும் ருசியானது.

"வெளவால் பழங்களைத்தானே தின்னுறது. அதை உரிச்சுப் பார்த்தால் பூநூலொண்டு இருக்கும். அதாலை பிராமணப் பறவையெண்டு அதைச் சொல்லுறது. ஆனா, இறைச்சி உரிக்கேக்கை தோலிலை பட்டகை இறைச்சியிலை படக்கூடாது. பட்டா ஒரே வெடுக்கு அடிக்கும். சாப்பிடேலாது" அன்றிரவு வெளவாலிற்குக் காவலிருக்கும்போது சீனியம்மான் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

"ஏன் மோனை... என்ன விசியம்" அவனைப் பார்த்தார்.

"நான் வேளைக்கு வெளியாலை போகப் போறன். நான் போனால் வீட்டுக்குத் துணையுமில்லை. அதுதான் உங்களைக் கேப்பமெண்டு..."

காவி படிந்த பற்கள் வெளித்தெரியச் சிரித்தார்.

"அதுக்கு என்னை வரச் சொல்லுறியே?" சுருட்டை வெளியே எறிந்தார். "அவன் சீமான் உன்னட்டைப் பொறுப்பிச்சிட்டுப் போட்டான்...ம்... எப்ப போறாய்?"

''எப்ப எண்டு முடிவில்லை. வாறகிழமைக்குள்ளை போகத் தான் யோசிக்கிறன்'' ''நல்லது. அதுக்கென்ன... நான்தானே ஒண்டிக் கட்டை. இதிலை இருந்தாலென்ன, அதிலையிருந்தா லென்ன நீ போ. நான் அதுகளைப் பார்த்துக் கொள்ளுறன்''

லௌன்சரை விட்டு எழுந்து சென்று, கேத்தலை இறக்கித் தேநீர் போட்டார். ஒரு மூக்குப் பேணியில் தேநீரை எடுத்து வந்து அவனருகே வைத்துவிட்டுப் பனங்கட்டித் துண்டொன்றை அவனிடம் கொடுத்தார். அவர் ஒரு சிரட்டை நிறையத் தேநீரை எடுத்து வந்து லௌன்சரில் இருந்து குடித்தார். சிரட்டை விளிம்பில் வாயை வைத்து ஊதி ஊதி அவர் குடிப்ப தைப் பார்த்துக்கொண்டிருந்தான் சத்தியன்.

'சரியான பழமைவாதி. சிரட்டையிலைதான் தேத்தண்ணி; வாழையிலையிலைதான் சாப்பாடு'

தேநீரைக் குடித்துவிட்டுச் சத்தியன் எழுந்தான்.

''இந்தா மோனை... இதைக் கொண்டுபோ'' ஒரு சிரட்டை நிறைய வௌவால் கறியைப் போட்டு அவனிடம் கொடுத் தார். அதை வாங்கிக் கொண்டு சைக்கிளில் ஏறி அமர்ந்தான்.

''நீ போ மோனை... நான் இரவுக்கு வாறன்''

சைக்கிளை மிதித்து குச்சொழுங்கையால் வளைந்து திரும்பி வீட்டிற்கு வந்தான்.

மாமரத்தின் கீழே மோட்டார் சைக்கிளொன்று நின்றது. சைக்கிளை நிறுத்திவிட்டு இறங்கி வந்தான். மதி வந்திருந்தான்.

''மதி... எப்பிடிச் சுகங்கள்?'' ஆவலுடன் கேட்டான்.

மதி சற்றுக் கறுத்திருந்தான். முகம் அதைத்துப்போயிருந் தது, என்றாலும் பச்சைநிற உடுப்பிற்குள்ளே கம்பீரமாய்த் தெரிந்தான். கழுத்தில் கறுப்புக் கயிறொன்று தொங்கியது. அது நஞ்சு என்பது சத்தியனுக்குத் தெரியும்.

''என்ன— அப்பிடிப் பார்க்கிறாய்?''

''ஒன்றுமில்லை'' சிரிக்க முயன்றான்.

''மதியண்ணை'' என்றபடி தமயந்தி அவனருகே வந்து அணைந்துகொண்டாள். கலா சமயலறைக் கதவைப் பிடித்தபடி நாணி நின்றாள்.

"தமயந்தி! என்னைப் போலை எப்ப வரப்போறாய்?"?

''ஆய்! நல்ல ஆள்தான். அம்மாவை விட்டிட்டு நான் வர மாட்டன்'' அவனது முகத்தில் கிள்ளினாள்.

''யேய் கள்ளி, இண்டைக்கு உன்னைக் கொண்டு போகப் போறன்'' அவளது இருகைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பிடித்தான்.

"அவளைக் கொண்டு போய் உன்னாலை மேய்க்கேலுமே" என்றபடி அம்மா தேநீரைக் கொண்டுவந்து அவனருகே வைத்தாள்.

''ஏன் ராசா, போகப் போறனெண்டு ஒருவார்த்தை சொன்னியே'' அம்மாவின் கண்கள் கலங்கின.

'நானென்ன நாட்டை விட்டே போயிட்டன். இஞ்சை தானே இருக்கிறன்'' அவன் சிரித்தான். சத்தியனுக்கு அவ் வார்த்தைகள் உறைத்தன.

''உன்ரை பயணங்கள் எப்பிடி?'' நேநீரை அருந்தினான்.

''ம்.. இன்னும் முடியில்லை. ரண்டரை லச்சம் கேக்கிறாங்கள்''

''அப்ப என்ன செய்யப்போறாய்? ''

"பாப்பம்... அப்பாவிட்டை உதவி பெற்ற சிலரோடை கதைச்சுப் பார்த்தன். இல்லையெண்டிட்டினை கடைக்காரத் தம்பையா அண்ணை அஞ்சு வட்டிக்கு அம்பதினாயிரம் தாறனென்டவர்''

"மிச்சம்''

"எங்கடை காசிலை ஒண்டை எடுப்பம். மிச்சத்துக்கு மாமாவையைத்தான் கேட்கப் போறன். தயாளன் தான் தாறனென்டு எழுதியிருக்கிறான். அப்பிடியில்லாட்டில் அதையாவது வாங்கலாம்.''

''எப்பிடியோ போறதெண்டுதான் நிக்கிறாய்?'' மதி சிரித்தான்.

அவன் சிரிக்க முயன்றான். சிரிப்பில் செயற்கை இழையிட்டது. வெளியே வானைப் பார்த்தான் மதி.

''எங்கடை வாழ்க்கை எப்படி மாறீட்டுது பாத்தியா? பள்ளிக் கூடமும் விளையாட்டுமாய்... எவ்வளவு சந்தோசமாயிருந்தம். இண்டைக்கு நானொரு பக்கம்... நீ ஒரு பக்கம்... எல்லாரும் சிதறிப் போட்டம். எங்கடை வகுப்பு வெறுமையாய்க் கிடக்குதாம். எக்கொணமிக்ஸ் ரீச்சர் சொல்லிக் கவலைப்பட்டா''

பாடசாலை வாழ்வு இனிமையானதுதான். பகிடி விடுவதும், ஒருவரையொருவர் முந்திக்கொண்டு படிக்க முயற்சிப்பதும்... வாயால் சொல்லடிபடுவதும் போயே போய்விட்டது.

''ஏன் ஒருதரும் போறேல்லையே?'' சத்தியன் கேட்டான்

''ஆரிருக்கினை, நீயும் சிவமுந்தானே, கொஞ்சப்பேர் என்னைப் போலை வந்திட்டினை. மிச்சமெல்லாம் வெளியாலை தானே. கனடா, சுவிஸ்... யூகே... உன்னைப்போல'' சத்தியன் அவனைப் பார்த்தான்.

''நான் இதுவரை இங்கைதானிருக்கிறன்''

''அதைவிடு. நான் சொல்லுறது உனக்குப் பிடிக்கேல்லைப் போலையிருக்கு'' நேரத்தைப் பார்த்தான்.

''நேரமாச்சுது. நான் போறன். இனிமேல் உயிரோடை யிருந்தால் மீண்டும் சந்திப்பம்'' எழுந்து வெளியே வந்தான்.

''சும்மா வாய் தவறிக் கதையாதை'' அம்மா கடிந்துகொண்டாள். ''உண்மையைத்தானே சொன்னனான். நாங்கள் சாவைக் கழுத்திலையே கட்டி வைத்திருக்கிறம். இதுக்குப் போய்...'' சிரித்தபடி மோட்டார் சைக்கிளை இயக்கினான். அது உந்தி உருண்டு போனது. அது தள்ளிய மண்ணெண்ணெய்ப் புகை காற்றோடு காற்றாக மூக்கிலடித்தது.

கண்களுக்குள் கடல்
நெஞ்சிற்குள் காதல்...
விரிந்த - பரந்த - பிரபஞ்சத்துள்
அவன் மட்டுமே தனியனாய்...
உறவுகள் அந்நியமாய்...
ஆனாலும்... நம்பிக்கை
நாளை அவனுடையதே!

# 6

கண்ணை இறுக மூடியபடி படுத்திருந்தும் நித்திரை வர மறுத்தது. ஒவ்வொன்றாய் நினைவுகளில் அமிழத்தான் முடிந்தது. பெரிய விமான நிலையம். விமானம் வந்து இறங்கு கிறது. ஒரு பக்கத்தால் பிரயாணிகள் முண்டியடித்து ஏறுகிறார்கள். அதிலொருவனாக அவன். அம்மா, அக்கா, சீனியம்மான், சுபத்திரா... எல்லோரும் கையசைத்து வழி அனுப்புகின்றனர். விமானம் பறக்கிறது. மேலும், கீழுமாய் ஏறி இறங்கிப்பறக்கிறது. சுவிஸில்... சூரிச் விமான நிலையத்தில் இறங்கிய விமானத்திலிருந்து அவன் இறங்குகிறான். தயாளன் கூட்டிச் செல்கிறான். பனிக் கட்டிகளின் மேல் இருவரும் நடந்து செல்கிறார்கள்... ஓ... இனிமையான கனவு!

தூரத்தே சேவல்கள் கூவின. விடியப் போகிறது! கண்ணை மூடியபடி படுத்திருந்தான். புலன்கள் வெளியோசையில் லயித்திருந்தன. அண்மையில் ஒரு சேவல் கூவியது. தொடர்ந்து ஒவ்வொன்றாய் கூவல்கள். அதனோடு இணைந்து குயில்கள் கூவின. செண்பகங்கள் ஒலியெழுப்பின. சிட்டுக் குருவிகள் கத்தின கிளிகள் கீச்சிட்டன. வேறேதேதோ பறவைகளின் ஒலிகள். எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்திணைய... ஆ... அதைக் கேட்கவே மனது சிலிர்த்தது. பறவைகளின் ஒலிகள்... காலையின் பூபாளம்... இயற்கையான இந்த ராகத்திற்கு இணையேது? அவன் அதிலேயே மூழ்கிப் போயிருந்தான்.

திடீரென்று தூரத்தே துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன.

'சீ! ஒரு நாளாவது சந்தோசமாய் இந்த இசையைக் கேட்கேலாதா? வேட்டொலி இல்லாமல் என்றுதான் பொழுது விடியப் போகிறதோ?' அலுத்துக் கொண்டான். வேட்டொலி கேட்டதுமே பூபாள இசை நின்றது.

சினத்துடன் எழுந்தான் சத்தியன். பாயைச் சுருட்டி வைத்து விட்டுப் பற்பொடியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். தென்னை மரங்களுடே கீழை வானம் சிவந்திருந்தது. முற்றத்தில் படுத்திருந்த சூரன் கால்களை நீட்டி, உடலை வளைத்துச் சோம்பல் முறித்துக் கொண்டது. மாமரக் கொப்பிலிருந்த கோழி யொன்று இறகடித்துக் கத்தியபடி பறந்து இறங்கியது.

''அப்பு...எம்பெருமானே.'' என அனுங்கியபடி அம்மா எழுந்தாள். எழுந்தவள் அடுப்பைக் கிளறி, விறகை வைத்து தீ மூட்டினாள். ராணியக்கா மற்றவர்களை எழுப்பினாள்.

சத்தியன் கிணற்றுக் கட்டிலிருந்து பல்லை மினுக்கினான். 'ஏஜென்சிக் காரனிட்டைப் போக வேணும். அதுக்கு முதல் சீனியம்மான் வாறனெண்டவர்' நினைத்தபடி முகத்தைக் கழுவினான். கழுவி விட்டு வந்து முகந்துடைத்துக் கொண்டிருக் கும் போது, சீனியம்மான் குரல் கொடுத்தபடி வந்தார்.

''எங்கை சிங்காரியள்...ராத்திரி வெட்டி விழுத்துகிறமெண்டு நிண்டாளவை. ஒரு வேலையையும் செய்யக் காணோம்''

சமையலறையில் தேநீர் போட்டுக் கொண்டிருந்த அம்மா சொன்னாள். ''வாய் வீரந்தான் அம்மான். இப்பதான் எழும்பித் தலையைச் சொறிஞ்சு கொண்டு நிக்குதுகள்.''

கதிரையில் இருந்தபடி ஒரு சுருட்டை எடுத்து வாயில் வைத்தார்,

''தேத்தண்ணி போடுறன் அம்மான்''

''ஆ...ஆங்...சீனியைக் குறைச்சுப் போட்டு, சிரட்டை யொண்டுக்கை ஊத்திக் கொண்டு வா பிள்ளை''

''சிரட்டையோ?'' ரமா சிரித்தாள். அவளது கையில் பற் பொடி இருந்தது.

''அதிலை இருக்கிற ருசி உந்தக் கோப்பையளிலை வருமே? உந்தச் சில்வருகள் செழும்பூறும். இது அப்பிடியில்லை. வருத்தங்களும் வராது''...

அம்மா கொடுத்த தேநீரை வாங்கி ஊதி ஊதிக் குடித்தார்.

இரவு வந்த சீனியம்மான் சொன்னார்.

"பெடியன் போய் உடனை வேலை கிடைக்காது. அவன்ரை காசை நம்பி கடன் படேலாது. அதாலை வீட்டோடை இருக்கிற ஐஞ்சு பரப்பிலையும் தோட்டத்தைச் செய்வம். அதுவே வீட்டுப்பாடு பயன்களுக்குப் பணத்தைத் தரும். நான் எல்லாம் செய்யுறன். ஆனால் நாலு பெட்டையளும் என்னோடை சேர்ந்து செய்யவேணும்''

"ஓம்... நாங்கள் சேர்ந்து செய்யிறம்" அவர்களும் உடன்பட்டனர்.

''சரி, விடிய வாறன். தரையைச் சுத்தமாக்குவம். கல்லுகள் தடியளெல்லாம் நிறைஞ்சு போய்க் கிடக்கு'' என்று சொல்லி விட்டுச் சென்றவர் விடிய வந்து விட்டார்.

சத்தியன் அவரைப் பெருந்தன்மையுடன் பார்த்தான். அவரை வணங்க வேண்டும் போலிருந்தது.

''நீ மோனை வெள்ளணவே போய் உன்ரை அலுவலை முடிச்சிட்டு வா. நாங்கள் பாக்கிறம்''

''கொஞ்ச நேரம் செய்திட்டுப் போவம்''

''சீ...சீ வேண்டாம். முதலிலை போட்டு வா ..பிறகு வேலை செய்யலாம்''

அவன் தலையசைத்து விட்டு உடையை மாற்றினான். தலையைச் சீவி திரு நீற்றைப் பூசிக்கொண்டான். மேசையில் அம்மா வைத்த தேநீரை எடுத்து அருந்தி விட்டு, சைக்கிளை எடுத்தான்.

''சீனியம்மான், அம்மா, போட்டுவாறன்'.

''ஓம் ..ஓம்...கவனமாய்ப் போட்டுவா'' சைக்கிளை உந்தி மிதித்து, அம்மன் கோவிலைக் கடந்து செல்லும்போது தியானித்தபடி வீதியில் ஏறினான்.

சைக்கிள்களும், சைக்கிள் ரிக்ஷாக்களும், மாட்டு வண்டில்களும் வீதியை ஆக்கிரமித்துச் சென்றன. முன்பென்றால் பெரிய பெரிய வாகனங்கள் இரைந்த படி ஓடும். பஸ்கள், மினி பஸ்கள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் ஓடும்.

இப்போது? மண்ணெண்ணெய்ப் புகையில் ஓடும் மோட்டார் சைக்கிள்களையும், ஓட்டோக்களையும் தான் இடைக்கிடை காணமுடியும்.

வீதியை நிறைத்து சைக்கிளில் ஏழெட்டுப் பெண்கள் சென்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு பெண் நெளிந்தும், வளைந்தும் ஓடிக் கொண்டிருந்தாள். அவளுக்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கும் எனச் சத்தியன் ஊகித்துக் கொண்டான்.

அவர்களைக் கடந்து சென்றான். ஒருவர் ஒற்றைக் கையால் சைக்கிள் கான்ரிலைப் பிடித்தபடி அன்றைய பத்திரிகையை பார்த்தவாறு சென்றார். சத்தியன் ஒரு முறை பத்திரிகையை மேய்ந்து விட்டு, அவரைக் கடந்து சென்றான் மணலாற்றில் இருபது இராணுவத்தினர் பலியானதாகவும், புலிகளால் பல ஆயுதங்கள் மீட்கப் பட்டதாகவும் தலைப்புச் செய்தி கூறியது.

கொக்குவில் சந்தியால் திரும்பி, திருநெல்வேலியைத் தாண்டி ஏஜென்சிக் காரனது வீட்டை அடைய எட்டு மணியாகி விட்டது. வாசலில் குறுந்தாடியைத் தடவிய படி ஏஜென்சிக்காரன் நின்றான். அவனைக் கண்டதுமே,

''என்ன, எல்லாம் வெற்றியே..'' என்றபடி அவனை அழைத்துச் சென்றான். இருவரும் அமர 'சோபாசெட்' தாழ்ந்து எழும்பியது.

''தம்பி! வெளி நாட்டு ஆசை தோன்றக் கூடாது. அப்பிடித் தோன்றினால் காசை ரெடி பண்ண வேணும். ஏஜென்சியைத் தேடி வரவேணும். வேளைக்குப் போகப் பார்க்க வேணும். வெளி நாடு ஒரு யூனிவேர்சிட்டி மாதிரி அதுக்குத் தகுதி வேணும். இதுக்குப் பணமும் சாமர்த்தியமும் வேணும்,'' அவனை நிமிர்ந்து பார்த்தான்.

''நீர் காசை றெடி பண்ணீட்டீர்தானே?''

''இல்லை.''

அவன் ஒரு மாதிரியாய்ப் பார்த்தான்.

"அப்ப?"

"இஞ்சை காசு எடுக்கேலாமல் போச்சுது. அம்பதினாயிரம் இஞ்சை எடுக்கலாம். மீதி கொழும்பில போய்த்தான். தயாள னிட்டையும், குணாளனிட்டையும் கேட்டுப் பார்க்க வேணும்"

"வெளிநாட்டுப் பயணம் ரெஸ்ற் மாதிரி. கஸ்டப்பட்டு முயற்சித்தால் வேளைக்கே தேறலாம். இல்லாட்டி அடுத்த முறைதான்"

சிரித்தான். பின்னர் சிறிது நேரம் ஏதோ யோசித்தான்.

"இப்ப காசு கட்டினால் வாறகிழமை ஒரு குறூப் போகுது. அதோடை போகலாம்."

"பாஸ்போட்டில்லை. பணமில்லை"

"பாஸ்போட் நாலாயிரத்தோடை உடனை எடுக்கலாம். காசைப் பிரட்டினியளெண்டால்"

"கையில காசு விழும் எண்டுறதுக்காக அவன் துடியாய்த் துடிக்கிறான். எத்தனை பேரிடம் காசுக்கு நாயாய் அலைந்திருப் பேன்? அவனுக்குத் தெரியுமா?" மனம் குமுறியது.

"வேறை சில பிரச்சனையளுமிருக்கு. அடுத்ததாய்ப் போறன்"

"அது உம்மடை விருப்பம். எனக்கொண்டுமில்லை" அவனது சொல்லில் வெறுப்புக் கலந்திருந்தது.

மேசையிலிருந்த ஒரு அட்டையை எடுத்துக் கொடுத்தான்.

'இதுதான் என்ரை கொழும்பு அட்றஸ். அங்கை வந்து சந்தியும்."

அங்கிருந்து வெளியே வந்தவன், தோட்ட வெளிகள் நிறைந்த வீதியால் சைக்கிளை மிதித்தான். தோட்டங்களில் குரக்கனும், பயறும், உழுந்தும், தினையும் வளர்ந்திருந்தன. சில இடங்களில் எல்லாம் கலந்து காணப்பட்டன. காய்கறிகள், மரவள்ளி எங்கும் பசுமையாய் விரிந்து கிடந்தன. முன்பென் றால் சிறு போகத்திற்கு இந்தத் தோட்டங்கள் புகையிலையையும், வெங்காயத்தையும், மலைநாட்டுக் கிழங்குகளையுமே தாங்கி நிற்கும். இப்போது ஏற்றுமதியில்லை; சுயதேவையை பூர்த்தி செய்ய வேண்டிய நிலை . தானியங்களால் நிரம்பி வழிகின்றன.

ஒரு தோட்டத்தில் ஆண்களும், பெண்களுமாய் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தனர். ஒரு பெண் கயிற்றைப் பிடித்திருந்தாள். இரு ஆண்கள் துலா மிதித்துக் கொண்டிருந்தனர். இன்னொரு பெண் தண்ணீர் கட்டிக் கொண்டிருந்தாள், இன்னொரு பெண் கிணற்றிற்கு அருகே...கொட்டிலில் ஏதோ செய்து கொண்டிருந்தாள். அடுப்பு புகைந்து கொண்டிருந்தது. சமைக்கிறாள் போலும்! ஆடுகால் மரத்தில் ஒருவர் நின்றார். மற்றவர் முன் பக்கத் துலாவை மிதித்து விட்டு ஆடுகால் மரத்தில் தாவிக்கொண்டார். வாளி தண்ணீரைக் கோலியவுடன், மற்றவர் பின்பக்கத் துலாவை மிதித்தார். சத்தியன் அதைப் பார்த்துக் கொண்டே சைக்கிளை மிதித்தான்.

ஓரிடத்தில் சூத்திரம் சுழன்று கொண்டிருந்தது. இரு சிவலைக் காளைகள் சூத்திரத்தை இழுத்தபடி, வளைய வந்து கொண்டிருந்தன. சூத்திர நுகத்தில் ஒரு தடி குத்தப்பட்டு, அதில் துணியொன்றால் சுற்றப்பட்டிருந்தது. மாடுகள் ஆள் இருக்கிறது என நினைப்பதற்கே இந்த ஏற்பாடு.

வீடொன்றின் முற்றத்தில் பந்தலில் சுரைக்கொடி படர்ந்திருந்தது. ஒரு காலத்தில் மல்லிகையும், கொடித்தோடையும் படர்ந்த இடத்தில் இன்று சுரைக்கொடி படர்ந்து முட்டிபோலச் சுரைக்காய்கள் தொங்குகின்றன. அப்பா வருத்தமாக இருந்த போது சிறுநீர் கழிவதற்குச் சுரைக்காய்க் கறி சமைத்துக் கொடுத்தது நினைவிற்கு வந்தது. நன்றாகப் பருத்து பெரிய முட்டி போலக் காணப்படும் சுரக்காய்களை முற்றிக் காயவிட்டு உள்ளே இருப்பவற்றை அகற்றிவிட்டுக் குடுவையாய்ப் பாவிப்பார்கள் கள் இறக்குவதற்கும் சுரைக் குடுவைகளையே பாவிப்பர். சினியம்மான் வீட்டிலும் இரு 'சுரைக்குடுவைகள்' தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டதாக ஞாபகம்!

இயந்திரத் தும்பியொன்றின் இரைச்சல் கேட்டது. சைக்கிளை வேகமாக மிதித்தான். உரும்பிராயால் திரும்பி, மண்பாதை ஒன்றிற்கால் வெட்டி மிதித்து குச்சொழுங்கையில் மிதந்த போது, பொன்னுத்துரையர் எதிர்ப்பட்டார்.

''தம்பி சத்தியன்'' —

அவரருகே சைக்கிளை நிறுத்தி இறங்கினான்.

"சோக்கான சம்மந்தமெண்டு பேசினன். கொக்காள் மாட்ட னெண்டிட்டாள். நீயாவது ஒருக்காச் சொல்லிப் பாரன். அவன் சோக்கான பெடியன். சீதனமுமில்லை. எப்பிடியாவது செய்திட்டால் மற்றதுகளை ஒரு கரையிலை விடலாம்."

அது அவளது விருப்பமல்லவா! அவளது விருப்பு வெறுப்பு களை மாற்ற அவன் மனம் ஒப்பவில்லை. எனினும் "சொல்லுறேன்" என மொட்டையாய்ச் சொன்னான்.

"இப்பவும் ஒரு குறிப்போடைதான் போறன். உன்ரை கொம்மான் இராசையற்றை மோளுக்குப் பொருத்துறத்துக்கு..."

அவனது மனம் கனத்தது. நெஞ்சில் ஏதோ குத்துவது போலிருந்தது.

"சீதனமெவ்வளவு தெரியுமே? வீடு வளவோடை மூண்டு லச்சம். பெடியன் வெளி நாட்டாலை வந்து நிக்கிறான். கலியாணம் முடிஞ்சு அவளையும் கூட்டிக் கொண்டு போடுவான்- என்ன செய்யிறது? எல்லாத்துக்கும் பசை வேணும்"

சைக்கிளில் ஏறினான். "சொல்லிப் பார் மோனை"

"ஓம்". மனது அந்தரத்தில் நிற்பது போலிருந்தது.

வளவின் அரைவாசி சுத்தமாக்கப் பட்டிருந்தது. பலா மரத்துக்குக் கிழிருந்து அம்மா தேநீர் ஊற்றிக் குடிக்கக் கொடுத்த வண்ணம் இருந்தாள். சீனியம்மான் சிரட்டையில் உறிஞ்சிக் கொண்டிருந்தார். வீட்டிற்குள் நுழையும் போது சீனியம்மான் கூப்பிட்டார்.

"என்ன மோனை, எல்லாஞ் சரியோ?"

"காசு காசெண்டு நிக்கிறான். அவனுக்குத் தெரியுமே நான் பட்ட பாடுகள்" என்று சொல்லிய படி அவர்களருகே வந்தான். அம்மா தேநீரை வார்த்து அவனிடம் நீட்டினாள். அதை வாங்கி ஒரே மூச்சில் குடித்து முடித்தான்.

"அப்ப என்ன செய்யப் போறாய்"

"உடனை கொழும்புக்குப் போய்ப் பார்க்கப் போறன். தயாளனோடையும், குணாளனோடையும் தொடர்பு கொள்ள வேணும்"

''இண்டைக்கு அட்டமி, ஓரேயடியா நாளண்டைக்கு திங்கட் கிழமை போ'' சீனியம்மான் சொல்லியபடி எழுந்தார்.

அவன் திரும்பி வந்து வீட்டிற்குள் நுழைந்து உடையை மாற்றினான். மனது கனத்தது. தூங்க வேண்டும் போலிருந்தது பாயை விரித்துப் படுத்துக் கொண்டான். கண்முன்னே சுபத்திராவின் முகம் வந்து மறைந்தது. அவளை அறைய வேண்டும் போலிருந்தது.

'அவளை அறைந்தென்ன? அவளா திருமணம் பேசி வருகிறாள்'

'அவளைத்தான் அறைய வேணும்... அவள்தானே என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவள்'

'அவளையில்லை, உன்னைத்தான் அறைய வேண்டும். நீ அவளைத் திரும்பிப் பார்த்திருக்கக் கூடாது. திரும்பி அன்றைக்கே அறைந்திருக்கவேண்டும். இப்போது அவளுக்கு அறைய முடியுமா?' மனதுக்குள்ளே இருவர் தோன்றி அடிபட்டனர்.

'உன்னாலை அவள் சீரழிய வேண்டாம். அவள் யாரையாவது செய்து சந்தோசமாய் வாழட்டும்.' அதுவே சரியெனவும் பட்டது. எவ்வளவு நேரம் நினைவுகளில் தோய்ந்தானோ தெரியாது. நித்திரை அவனை ஆட்கொண்டது.

மீண்டும் எழுந்த போது நேரம் ஒரு மணியைத் தாண்டி விட்டது. எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எழுந்து முற்றத்தில் வந்து நின்றான்.

வாசலைக் கடந்து சுபத்திரா வந்து கொண்டிருந்தாள். அவளது முகம் சிவந்திருந்தது. அவளைப் பார்க்க வேண்டாம் போலிருந்தது. வேகமாய்க் கிணற்றடிப் பக்கமாய் நடந்தான். தண்ணீரை அள்ளி முகம் கழுவும் போது, அருகே சுபத்திரா நின்றாள். அவளது கண்கள் கலங்கியிருந்தன. வழமையான சிரிப்பு, குழந்தைத் தனமெல்லாம் மறைந்திருந்தன. அவளைத் திரும்பிப் பார்த்து விட்டு மீண்டும் தண்ணீரை அள்ளி முகத்தில் எற்றினான்.

''சத்தியன்''. திரும்பிப் பார்த்தான்.

''அப்பா எனக்குக் கலியாணம் பேசுறார்'' சொற்கள் உடைந்து தெறித்தன.

''நல்லது செய்யன்''

வாளியை வைத்து விட்டு திரும்பி வந்தான்.

''சத்தியன்...நான் செய்யமாட்டன். அப்பிடியில்லை யெண்டா சாவன்''

திரும்பி அவளைப் பார்த்தான். கண்களிலிருந்து வடிந்த நீர் கன்னங்களில் கோடிட்டு ஊர்ந்தது.

''அறைஞ்சனெண்டால் ..உதுக்குப் போய்ச் சாகிறதே... எனக்கு முதலே தெரியும் . ஆனால் அதிலை எனக்கு நல்ல சந்தோசம். இப்பவும் நீ செய்யலாம். எனக்குச் சம்மதம்'' மனதிற்கப்பாலிருந்து அவ்வார்த்தைகள் வெளிவந்தன. கூசாமல் பொய் சொன்னான்.

''போம் நீர் சரியான சந்தர்ப்பவாதி. ஆனா, நான் மாற மாட்டன். நான் சாவனே தவிர மாறமாட்டன்'' அவள் அழுதபடி வந்தாள்.

'சீ . ஏன் சொன்னன். பேசாமலே இருந்திருக்கலாம்' அவன் தனக்குள் நொந்து கொண்டான். முகத்தைத் துடைத்து விட்டுச் சாப்பிடப் போனான். அம்மாவை விட மற்றவர்கள் சாப்பிட்டு முடித்து விட்டனர். கோப்பையைக் கழுவி விட்டுச் சாப்பிட அமர்ந்தான். சாப்பாடு உள்ளே இறங்க மறுத்தது.

வெளியே சுபத்திரா கதைப்பது கேட்டது.

''என்ன, கண்ணெல்லாம் கலங்கியிருக்கு, அழுதிருக்கிறா'' எனத் தமயந்தி சொல்வதும்,

''கண்ணுக்கை ஏதோ விழுந்திட்டுது'' எனச் சுபத்திரா சமாளிப்பதும் கேட்டது

சாப்பாட்டை மென்று விழுங்கினான். தொண்டையில் ஏதோ அடைப்பது போலிருந்தது.

கையால் கண்ணைத் துடைத்தபடி சுபத்திரா வந்தாள்.

''என்னணை வீட்டிலை சாப்பாடு, மச்சமே?'' அம்மா கேட்டாள்.

''தெரியாது''...சோர்வான பதில்.

"ஏன் சாப்பிடேல்லையே?''

''...''தலையாட்டினாள்...

''அம்மா, சுபாக்குச் சாப்பாட்டைப் போட்டுக் குடுங்கோ'' என்றபடி எழுந்தான்.

''எனக்கு வேண்டாம். பசிக்கேல்லை''

''நாங்கள் பசிச்சே சாப்பிடுறம். போட்டுச் சாப்பிடு. இல்லாட்டி என்னோடை கதையாதை''

''கொஞ்சம். கேட்டதுக்காக'' என்று சொல்லிவிட்டு அம்மாவினருகே அமர்ந்தாள்.

நாய் குரைத்தது. வாசலில் சிவத்தின் அம்மா நின்றாள்.

''சத்தியன் சிவத்தைக் கண்டனியே'' பதட்டத்துடன் கேட்டாள்.

''இல்லை ஏன்?''

''நான்வரமாட்டனெண்டு சொல்லிப் போட்டுப் போனவனாம். நான் எங்கை தேடுறது? அமசடக்கமாய் இருந்திட்டு இப்பிடிச் செய்திட்டானே. எங்கையெண்டாலும் தேடிப் பாத்துச் சொல்லுறியே ராசா''

''நீங்கள் போங்கோ, நான் பாத்திட்டு வந்து சொல்லுறன்'' என்று சும்மா சொல்லி அனுப்பி வைத்தான். அவனைத் தேடிப் பிடித்தாலும் அவன் திரும்பி வருவானோ?

'சந்திரன் ஒரு பக்கம், சிவம் ஒரு பக்கம் நான் தனியன்!' தனிமையுணர்வு சில்லிட்டது. திங்கட் கிழமையுடன் நானும் போய்விடுவேன். அப்போது?

செய்தியறிந்த அம்மா சொன்னாள். ''பாவம் குஞ்சக்கா! படி படியெண்டு படிச்சுக் கொண்டிருந்தவன் போயிட்டான். அது மனிசி பிறசர்காரி! தேப்பனும் கொழும்பிலை''

மாமர இலைகளைக் குடைந்து கூடு கட்டியிருந்த தையல் சிட்டொன்று கூட்டை விட்டு விர்ரெனப் பறந்தது.

❋ ❋ ❋ ❋

புதிதுபுதிதாய் எண்ணங்கள் முளைக்கும்
மனது இறக்கைகட்டிப் பறக்கும்
இருந்தபோதும்
இந்த மண்ணின் சுகந்தத்தை
உணர்வுகள் நாடும்!

# 7

சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டிற்குள் நுழைந்தான் சத்தியன். உள்ளே மாமி இருந்தாள்.

''என்ன மாப்பிள்ளை! குசியிலை ஓடித்திரியிறீரோ?'' என்று சொல்லிச் சிரித்தாள்.

''அவனோ, வெளிநாடு போறதெண்டவுடனை அரைவாசியாய்ப் போனான். அங்கினைக்கையும் எப்படியிருக்கப் போகுதோ?'' அம்மா பெருமூச்சு விட்டாள்.

கதிரையொன்றில் அமர்ந்தபடி வெளியே நோட்டமிட்டான். தரையெல்லாம் கொத்தப்பட்டிருந்தது. சீனியம்மானுடன் பெண்கள் நால்வரும் சேர்ந்து பாத்திகளை அமைத்துக் கொண்டிருந்தனர்.

''தம்பியும் இருக்கேக்கை சொல்லவேணும்'' என்ற பீடிகையுடன் நிறுத்திய மாமி வெளியே எட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

''நீங்களும் கஷ்டப்பட்டனீங்கள், பெட்டையளுக்கும் வயது ஏறிக்கொண்டு போகுது அதுதான் யோசிச்சனான் என்ரை

தயாளனுக்கு ஒருத்தியைச் செய்து அனுப்புவமெண்டு, அவனுக்கு கலியாணம் செய்தால்தான் சுவிஸிலை 'லான்டட் போமிற்' குடுப்பினையாம். வேறை இடத்திலை லட்சக்கணக்காய் சீதனத்தோடை பேசலாம் ஆனால் அண்ணற்றை பிள்ளையளை நாங்கள் தனிச்சுவிடக் கூடாதெண்டுதான்...

''சீதனங்கீதனம் ஒண்டும் வேண்டாம். ராணியின்ரையோ கலாவின்ரையோ குறிப்பைப் பாருங்கோ'' அம்மாவை நிமிர்ந்து பார்த்தான். அம்மா பெருமூச்சொன்றை உதிர்த்தாள்.

''என்னவோ அதுகள் நல்லாயிருந்தால் சரி, நான் அறுதலி. என்னத்தைச் செய்யிறது. நீங்களும் அவருந்தானே இதுகளுக்கு நல்லது கெட்டதுகளைச் செய்யவேணும்''

''ஏன் மச்சாள்'' நாங்கள் செய்ய மறுத்தனாங்களே. அண்ணர் எனக்குச் செய்த உதவிக்கு நான் அவற்றை பிள்ளையளுக்குச் செய்யவேணுந்தானே. சத்தியன் - உனக்குச் சம்மதமே?'

''எல்லாரும் விரும்பினால் எனக்குச் சரிதானே'' எழுந்து வெளியே வந்தான்.

''ஏன் நேற்றுச் சுபத்திரா கோவிச்சுக் கொண்டுவந்தவள்?''

''அது பெரிய பகிடி மச்சாள். பிள்ளைக்கு ஒரு சம்பந்தம் பொருத்திக்கொண்டு பொன்னுத்துரையண்ணை வந்தவர். எங்களுக்குத் தெரியுமே? அவள் தொடுவிலும் மாட்டனெண்டிட்டாள். சத்தியனைத்தான் செய்வன் எண்டு தேப்பனோடை சண்டை. எங்களுக்கென்ன மச்சாள் அவள்தானே வாழப் போறது. சரியெண்டு சொல்லிவிட்டம்''

''மெய்தானே .. நெடுகலும் அடிபடுங்கள் அதுக்கிடையிலை இப்பிடியும்?'' உள்ளே அம்மாவும் மாமியும் கதைப்பது சத்தியனுக்குத் தெளிவாய்க் கேட்டது. மனதிற்குள்ளே இனம் புரியாத உணர்வு தொக்கி நின்றது.

* * * *

வெளியே இருள் பரவியிருந்தது. இரவு எட்டு மணி என்பதை தூரத்தே கேட்ட வானொலி ஓசை புலப்படுத்தியது. தமயந்தி குப்பி விளக்கொளியில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். விளக்கொளி அசைய அசைய விளக்கை அசைத்து அசைத்துப் போராடிக்கொண்டிருந்தாள் கலாவும் ரமாவும் வேளைக்கே படுத்துவிட்டனர்.

முற்றத்தில் ராணியும், அம்மாவும் சினியம்மானுடன் கதைத்துக் கொண்டிருந்தனர். போத்தல் விளக்கொன்றைத் தூக்கியபடி சத்தியன் அவர்களருகே வந்திருந்தான். போத்தலிற்குள்ளே சுடர் ஆடியாடி ஒளிர்ந்தது.

''அந்தநாளைய விவசாயத்துக்கும், இப்பத்தை விவசாயத்துக்கும் சரியான வித்தியாசம். மருந்துகளும், உரங்களும் காய்

கறியளின்ரை சுவையைக் குறைச்சிட்டுது. வருத்தங்களையும் கொண்டு வந்திட்டுது. இயற்கையாய்க் கிடைக்கிறதுகளைக் கொண்டு பயிர் செய்தாலொழிய, மற்றப்படி பயிர் நட்டமும் வருத்தங்களும் தரக்குறைவுந்தான்'' சீனியம்மான் நிறுத்தினார்.

கிணற்றடி வேப்பமரத்தில் வெளவால்கள் அடிபட்டன.

''ஆ... ரண்டு தென்னையிலையும் தடி கொழுவிக் கொடி கட்டலாம். ஆக்களும் இல்லை. தூண்டிலும் பத்தாது'' என்றபடி திரும்பி மரப்பக்கமாய்ப் பார்த்தார். இருளில் எதுவுமே தெரியவில்லை.

சிறிது நேரம் மௌனமாய்க் கழிந்தது.

''மச்சாள் தன்ரை தயாளனுக்கு ஒருத்தியைச் செய்ய ஒமெண்டிட்டா?'' அம்மா

''மெய்யே .. ஒண்டுக்கையொண்டு செய்துவிடன்''

''உவளுக்குப் பாக்கிறதுக்கு குறிப்புக் குடுத்திருக்கு''

''எனக்கோ?'' ராணி ஆச்சரியத்துடன் கேட்டாள்,

''கொத்தான்தானே செய்யன்'' சீனியம்மான் சிரித்தார்.

''நான் மாட்டன்... கலாவிற்குப் பேசுங்கோ''

''ஏனடி கொத்தானைப் பிடிக்கேல்லையே''

''தயாளனைப் பிடிக்கேலையெண்டில்லை. ஆனால் வெளிநாட்டிலை வாழப்பிடிக்கேல்லை''

''என்னடி நிமிசமொரு கதை கதைக்கிறாய். அண்டைக்கு வலிய வந்ததை வேண்டாமண்டாய். இண்டைக்கு இப்பிடி நிக்கிறாய் .. உனக்கு நான் எங்கை புருசன் தேடுறது'' அம்மா குமுறி வெடித்தாள்.

''நீ பேசாதை! ஏனணை அப்ப என்ன செய்யப் போறாய்?'' அம்மாவைப் பேசிய சீனியம்மான் சமாளித்துக் கேட்டார்.

''முந்தி எனக்கு வெளிநாட்டிலை ஆசையிருந்ததுதான். ஆனா இப்ப எனக்கு வாழ்ந்தாலுஞ்சரி, செத்தாலுஞ்சரி. எதுவுமே இந்த மண்ணிலை நடக்கட்டும் எண்ட உணர்வுதானிருக்கு. வேணுமெண்டால் புறோக்கர் மாமா பேசிக்கொண்டு

வந்த தோட்டக்கார மாப்பிள்ளையைச் செய்யுறன். என்னாலை இங்கையிருந்து எங்கையும் போக முடியாது''

அவள் குரலில் அழுத்தம் தொனித்தது. அதைக் கேட்கச் சத்தியனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

''எனக்குப் போயும் போயும் ஒரு தோட்டக்காரனையே பாக்கிறீங்க அதிலும்விட நான் இப்பிடியே இருக்கிறேன் என்றவளா இன்று மாறியிருக்கிறாள்? இங்கு நடக்கின்ற சமுதாய மாற்றங்களை அவளும் சரிவர உள்வாங்கியிருக்கிறாள். விவசாயத்தின் உயர்வையும் உணர்ந்திருக்கிறாள்.

காலையிலேயே பொன்னுத்துரையரைச் சந்திக்க வேண்டுமென எண்ணிக்கொண்டான் சத்தியன்.

❋ ❋ ❋ ❋

அந்த வீட்டின் முன்புறம் குறோட்டன்கள் செழித்து வளர்ந்திருந்தன. சூரிய ஒளியில் அவை சிரித்து நின்றன. பொன்னுத்துரையரையும் சத்தியனையும் தடித்த அவ்விளைஞன் அழைத்துச் சென்றான்.

''இருங்கோ'' உள்ளே நின்ற அவனது தாய் ஹோலில் வந்து நின்று வரவேற்றாள் சத்தியன் பார்வையைச் சுழலவிட்டான். அழகான பெரிய வீடு. வானொலியொன்று மெல்லிய சத்தத்தில் பாடிக்கொண்டிருந்தது. சோகேஸ் ஒன்றினை நிறைத்து வெள்ளிச் சாமான்கள் மினுங்கின.

''இவர் செல்லையா அண்ணையின்ரை மகன்'' பொன்னுத்துரையர் அந்தப் பெண்ணிற்கு அறிமுகப் படுத்தினார்.

''எந்த''

''இவர்தான் விவசாய மன்னன் செல்லையா!'

''ஆ... சின்னனிலை கண்டனான். ஆளை மட்டுக்கட்ட முடியேல்லை'' சிரித்தாள்.

ஒரு பெண் தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள்,

''இவ மூத்தவற்றை பொஞ்சாதி''

''ஓம்... ஓம்.. அவர் கொழும்பிலை வேலை என்ன?''

''ஓம் ' பொன்னுத்துரையர் செருமினார்:

''க்கூம்... அண்டைக்கு கதைச்ச விசியமாய்த்தான் வந்த னாங்கள். இவர் வெளியாலை போக ஆயத்தம் அதுக்கிடை யிலை முற்றாக்கிப் போடுவமெண்டு வந்தவர்..''

''பேந்தென்னண்ணை.. சரியெண்டா ஒரு நாளைப் பாக் கிறதுதானே. பெட்டையையும் தெரியுந்தானே''

''எதுக்கும் தம்பியையும் கேட்டுப் பாப்பம்'' பொன்னுத் துரையர் அந்த இளைஞனைப் பார்த்துச் சிரித்தார்.

''எல்லாருஞ் சரியெண்டா எனக்கும் சரி, ஆனால், இந்த நேரத்திலை பெரிசாய் ஒண்டும் வேண்டாம். சும்மா தாலியைக் கட்டினால் போதும் வேறையொண்டும் வேண்டாம்.''

''ஓம் ஓம்... அதுதான் நல்லது. எப்ப செய்யலாமெண்டு சொன்னால் ஆயத்தப்படுத்தலாம்''

''நாங்கள் இப்பவும் சரியண்ணை. மூத்தவன் முன்னமே தாலி கூறையள் வாங்கியந்திட்டான். பூதராயர் கோவிலிலை தாலியைக் கட்டி, எழுத்தும் எழுதி இன சனத்தோடை முடித்து விடுவம்'' என்றாள் தாய்.

பொன்னுத்துரையர் பைக்குள்ளிருந்த பஞ்சாங்கத்தைப் புரட்டினார்.

''நாளைக்குப் பின்னேரம் தசமியும் நல்ல நாளுமிருக்கு''

''அதுக்கென்ன மூத்தவனும் நிற்கிறான் முடிச்சுவிடுவம். அப் பிடி உங்களுக்கு காசு தேவையெண்டால் தாறம். பிறகெடுக்க லாம்'' என்று சொன்ன தாயைச் சத்தியன் பெருந்தன்மையு டன் நோக்கினான்.

''அப்ப நாங்கள் கவனிக்கிறம். நீங்கள் உங்கடை அலுவல் களைப் பாருங்கோ'' தாய் சொன்னாள். இருவரும் எழுந்து கொண்டனர்.

* * * *

சத்தியனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. போவதற்கிடையில் அக்காவின் திருமணம் முடிந்துவிட்டது. எளிமையாய்த் திரு மணம் முடிந்தாலும் அக்காவையும், அத்தானையும் பார்க்க அக்கம் பக்கத்தார் வந்துகொண்டிருந்தனர். அக்காவைவிட அம்

மாவிற்கே மகிழ்ச்சி அதிகம். ஒரு சுமை குறைந்ததென்று நினைத்திருப்பாள்.

''பிள்ளை நல்ல குணமானவன். பிள்ளைக்கு ஏற்றவன்தான்'' வருபவர்களோடு அம்மா புளகி, நின்றாள்.

மாமிக்கு முதலில் கவலையாய் இருந்தாலும், பின்னர் கலாவை அனுப்ப உடன்பட்டவுடன் சந்தோசமடைந்தாள். பூதராயர் கோவிலில் தாலிகட்டி, வீட்டில் எழுத்தெழுதி... எல்லாவற்றையும் மாமாவும் மாமியும் செய்து முடித்தனர்.

அன்று—

''எனக்கு எப்ப கட்டிறது?'' என்று சுபத்திரா சீண்டியது ஞாபகத்திற்கு வந்தது.

தியாகுவும் ராணியும் உள்ளே யாருடனோ கதைத்துக் கொண்டிருந்தனர். முற்றத்தில் நின்று பார்த்தான். தோட்டத்தில் பயிர்கள் முளைவிட்டிருந்தன.

''கலியாணத்தோடை பயணமும் நிண்டிட்டுது. எப்பபோகப் போறாய்'' சிவத்தின் அம்மா வந்துகொண்டிருந்தாள். முன்பை விடச் சோர்ந்து காணப்பட்டாள். சிவம் போன கவலை இன்னமும் போகவில்லைப் போலிருக்கிறது. சிவம் போயும் பத்துநாட்கள் கழிந்துவிட்டன. இப்போது பயிற்சி பெற்றுக்கொண்டிருப்பான்.

''நாளைக்குப் பின்னேரம் போறன் மாமி''

''ம் நீயும் போனா ஊரிலை இளம் பெடியள் ஒருத்தருமில்லை. அந்தரமாவத்துக்கும் நாங்கள்தான் அல்லாடவேணும். சிவமாவது எங்களோடை இருப்பானென்டா ம்... அது என்ரை வயித்திலை அடிச்சிட்டுப் போட்டுது'' என்றபடி உள்ளே போனாள்.

உண்மைதான்... இனி இந்த ஊரே இளைஞர்களில்லாமல் நிக்கப் போகுது அப்போது யார் தனியன்?

இயந்திர வல்லூறொன்று எதையோ குறிவைத்து வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. மாலை மங்கிக் கொண்டிருந்தது.

* * * *

அவள்...வசந்தகாலத்துக் கோகிலம்.
அவனோ...வறண்ட நிலத்துத் தாவரம்...
வறண்ட பூமியில் வசந்தம் நிலைக்குமா?
இல்லை
வசந்தத்தில் ஒரு வறட்சி மிஞ்சுமா?...
விடைகளே வினாக்களாய் ..
வினாக்களே... விடைகளுமாய் ..

# 8

அதிகாலையிலேயே எழுந்து கொண்டான் சத்தியன். வழமையான புள்ளினங்களின் பூபாளம்; அதைத்தொடர்ந்து துயிலெழுப்பும் வேட்டுச் சத்தங்கள். எதுவுமே அவனைப் பாதிக்கவில்லை. மனம் ஏதோ அந்தரத்தில் நிற்பது போலத் தவித்தது. அகத்திற்குள் இருக்கும் உணர்வுகள் மதிப்பிடப்பட முடியாதவையாக, ஒரு பிரமிப்பான நிலை போல...

அம்மா வேளைக்கே எழுந்து குளித்து விட்டு கோவிலுக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். தியாகுவும், ராணியும் கிணற்றுக் கட்டிலிருந்து பல் துலக்கியபடி ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர். அவன் ஏதோ சொல்ல... அவள் நாணிச் சிரிக்க . அவன் அவளது கன்னத்தில் கிள்ள . அவள் விலகியபடி ஏதோ சொல்ல . அவர்கள் ஆனந்தித்ததைச் சத்தியன் அவதானிக்கத் தவறவில்லை. ஆனால் ரசிக்க முடியவில்லை. மாலையுடன் வீட்டை விட்டு, கிராமத்தை விட்டு, கிராமத்து உறவுகளைத் துறந்து ஏன் நாட்டை விட்டே போகப் போகிறான். போகாமல் நின்றாலென்ன என மனது ஏங்கியது. போகாவிடின் அப்பாவின் கட்டளை, குடும்பத்தின் எதிர்காலம் எல்லாம் குழி தோண்டிப் புதைக்கப்படக் காரணமாகி விட்டவன் என்ற பெயரைத் தாங்க வேண்டி வரும்.

'நாளை இந்த ஊரில் இந்த மண்ணில் நானும் ஒரு மனிதன். இப்போது மனிதம் பணத்தால்தானே அளவிடப் படுகிறது. ஆனால் இந்தக் கிராமம் ஒரு பருவ இளைஞர்களின்றித் தனித்து

விட்டது. அல்ல, அவர்களைத் தொலைய விட்டு விட்டது. நாளை அது என்ன செய்யப் போகிறதோ? நினைக்கும் போது மனம் வெறுமையாய் உழன்றது.

கிராமத்தை... அதன் எழிலை... அதில் வாழும் சகோதர உறவுகளையெல்லாம் பார்க்க வேண்டும் போல் ஒரு தவிப்பு. கட்டாயம் பார்க்க வேண்டும் என்ற உந்தல்.

அம்மா 'அர்ச்சனைத் தட்டோடு' கோவில் பக்கமாகப் போனாள்... கலா உடுப்புக்களை அடுக்கிக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் ''பழைய சேட்டையும் வைக்கிறதே?'' என்று கேட்டாள்.

''வேண்டாம். மூண்டும் காணும்''

சேட் ஒன்றைக் கொழுவியபடி, சமயலறைப் பக்கமாய்ப் போனான். ரமா பிட்டவித்துக் கொண்டிருந்தாள். குழல் பிட்டு நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவிக்கப் படுகிறது அவள் தடியொன்றால் குழலிலிருந்த பிட்டைத் தள்ளி இறக்க, தமயந்தி அதை அள்ளித் தின்றுகொண்டிருந்தாள்.

''அண்ணை, தேத்தண்ணி ஆறுது. எடுத்துக் குடியன்''. ரமா சொன்னாள். அவன் அதை எடுத்து அருந்தினான்.

''தமயந்தி இண்டைக்குப் பள்ளிக் கூடம் போக வேண்டாம். நில்லு'' என்றான் சத்தியன். அவளுக்கு நல்ல சந்தோசம். துள்ளிக்குதித்தாள். அவனுக்கு?

தோட்டப் பக்கம் போக வேண்டும் போலிருந்தது சைக்கிளை எடுத்து மிதித்தான். வழியில் தெரிந்த பல முகங்கள். எல்லோரும் சிரித்தும், தலையசைத்தும், விசாரித்தும் ! அவர்களிலிருந்து அந்நியப்பட்டுப் போக வேண்டியிருக்கிறதே என்ற அங்கலாய்ப்புடன் தோட்டக்கரை வாழை மரத்தோடு சைக்கிளைச் சாத்தினான்.

பரந்து விரிந்து செல்லும் பசுமை நிறைந்த தோட்டங்கள்; புழுப் பொறுக்க நடை பயிலும் கொக்குகள்: களை பிடுங்கும் பெண்கள்; தரையைக் கொத்தியும், மருந்தடித்தும், தண்ணீர் கட்டியும் நிற்கும் ஆண்கள்; தண்ணீரில் குளிக்கும் காகங்கள், புலுணிப் பறவைகள். கீழை வானில் உயர்ந்து வெள்ளிப் பந்தாய் உருளும் சூரியன்! தோளினைத் தழுவிச் செல்லும் கிராமத்துக் காற்று.

சிதைவுகளூடே உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் மின் உற்பத்தி நிலையம். நேராக ஓடிச் சுவடுகள் மறைந்து நிற்கும் புகையிரதப் பாதை... எல்லாவற்றையும் இனி எப்போது பார்ப்பது?

புகையிரதப் பாதையில் கற்குவியலின் மேல் அமர்ந்தான். சில மாதங்களுக்கு முன் இந்தப் பாதையில் அவனுடன் பலரிருந்து கதைத்தனர். பின்னர் சந்திரன் . சிவம்...இப்போது அவன் மட்டும் தனியாக!

இலந்தைப் பற்றைக்குள்ளிருந்து கௌதாரி கத்தியது. பச் சோந்தி ஒன்று கொப்புகளில் ஊர்ந்தது. சிட்டுக்குருவிகள் தாவித் தாவிக் கத்தின. புறாக்கள் பறந்து திரிந்தன.

புகையிரதப் பாதையால் நடக்க வேண்டும் போலிருந்தது. எழுந்து நடந்தான். கற்கள் காலை இடறின. புல், பூண்டுகள் காலை வருடிச் சென்றன. இடையிடையே நெருஞ்சி முட்கள் காலில் தைத்தன.

''ம்.. ஆ'' ஒரு முள் நன்றாகக் குத்திவிட்டது. ஒற்றைக் காலில் நின்றபடி காலைத்தூக்கி முள்ளை எடுத்தான். இரத் தம் வழிந்தது. அதைக் கையால் துடைத்தான். மீண்டும் துளிர் விட்டது.

“வரட்டும்” திரும்பி நடந்தான். கால் வலித்தது. காலை விட நெஞ்சு பலமாக வலித்தது. கெந்தியபடி நடந்தான்.

எல்லாம் போகாதே என்று அழைப்பதுபோல ஒரு பிரமை. சைக்கிளை எடுத்து உந்தினான். குச்சொழுங்கையால் வளைந்து திரும்பி பனங்கூடலைக் கடந்து போனான். விளையாட்டு மைதானம் வந்தது. அது வெறுமனே கிடந்தது. சைக்கிளை வெட்டி மைதானத்தில் வட்டமடித்தான். ‘தனியாக வட்டமடிக்க யாராவது விசரன் என நினைக்கப் போகினை! ’நினைக்கட்டும். எனக்குச் சைக்கிளோடக் கற்றுத் தந்தது இதுதான். என்னை புட்போல், கிரிக்கட், கிட்டியெல்லாம் விளையாட வைச்சது இதுதான்.’ சைக்கிளால் இறங்கினான்.

அந்தப் பாழடைந்த கிணறு. அதில் முன்பு கேணியிருந்ததாம். இப்போது தூர்ந்துவிட்டது. கிணற்றை எட்டிப் பார்த்தான். கோழியொன்று செத்துக் கிடந்தது. யாரோ கொண்டு

வந்து கிணற்றுக்குள் போட்டிருக்கிறார்கள். அதன் நாற்றம் மூக்கை அரித்தது. கிணற்றைச் சுற்றிப் பூண்டுகளோடு காஞ் சோண்டியும் வளர்ந்திருந்தது.

சைக்கிளை உருட்டியபடி கோவிலடிக்குப் போனான். அது கூட நிசப்தமாயிருந்தது. கும்பிட்டுவிட்டு, வடக்கு வீதிக்கு வந் தான். மதிலோடு நின்ற கொன்றை மரம் மஞ்சள் பூக்களால் மலர்ந்து நின்றது. சாய்ந்து வளைந்து நின்ற கொப்பில் ஏறி யிருந்தான். அப்படியே தூங்க வேண்டும் போலிருந்தது. கொன் றைப் பூக்கள் நிலத்தில் உதிர்ந்து மஞ்சட் கம்பளமாய் மிளிர்ந் தன.

அவன் நட்ட மலைவேப்பங் கன்று கிளை விட்டிருந்தது. ''நாளை அதுவாவது பேர் கூறட்டும்'' எனச் சொல்லிக்கொண் டான், நெல்லி மரம் காய்த்திருந்தது. மதிலால் நடந்து போய் ஒரு நெல்லிக்காயைப் பிடுங்கி, வாய்க்குள் போட்டான். அது கசந்தது.

'இனிக் கோவிலுக்கு வருவது எப்போது? அரச மரத்தடி யில் நின்று புக்கை வாங்கிச் சாப்பிடுவது எப்போது? நெல்லிக் காய் தின்பது எப்போது?'' பிரிய மனமின்றி எழுந்தான்.

மனதிற்குள் ஏதோ நெருடியது. பனை மரங்கள் நுங்குக ளோடு நின்றன. நுங்கு குடிக்க ஆசையாயிருந்தது. எங்கே தேடுவது?

சைக்கிளை உதைத்தான். தன்னையே அறையவேண்டும் போலிருந்தது. யாரை அறைவது... என்னையா? காலத்தையா? சந்தர்ப்பத்தையா? மனது அழுதது.

சுபத்திரா வீட்டடியில் சைக்கிளை நிறுத்தினான். சாடிக ளில் கத்தரியும், மிளகாயும் சிலிர்த்து வளர்ந்திருந்தன. கத வைத் திறந்துகொண்டு சிரித்தபடி சுபத்திரா வந்தாள். அவ ளைப் பார்க்காமல் திரும்பிப் போவோமா என்றொரு எண்ணம் என்றாலும் போவோம் என்றபடி நடந்தான். மாமி வந்தாள். மாமா வந்தார். அவன் கதிரையொன்றில் அமர்ந்து கொண் டான்.

''என்ன பயணஞ் சொல்ல வந்திட்டீரோ?'' மாமாவின் சிரிப்பு

''ஆளுக்கு நல்ல புழுகந்தான்'' மாமியின் சிரிப்பு.

அவற்றைக் கேட்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. சிரிப்பில் வெறுமை.

மாமா ஆலோசனைகள் சொன்னார். மாமி அறிவுரைகள் சொன்னாள். எல்லாம் நாராஸமாய்க் குத்தின. ''சாப்பிட்டுப் போம்'' என்ற அழைப்போ கட்டளையோ சுபாவிடமிருந்து பிறந்தது. சாப்பிடுவம்' மனது சொல்லியது.

சற்று வேளைக்குள் தனிமை நிலவியது. 'ஈஸிச்சயரில்' படுத்துக்கொண்டான். மனதிற்குள் ஏதேதோ நினைவுகள் முளை விட்டன. ஒன்றை இடைமறித்து இன்னொன்றாக, சிக்கலாய்... குழப்பமாய்..

சுபத்திரா 'எலுமிச்சம் பானம்' கொண்டுவந்து நீட்டினாள். அதைக் குடிக்க வயிற்றைக் குமட்டியது. முன்பு அது விருப்புக்குரிய பானம் இப்போது? அரைவாசியுடன் வைத்தான்.

''என்ன சுவிஸ் சொர்க்கத்தை கனவு காணிறீரா?''

''மண்ணாங்கட்டி, அது என்ன சொர்க்கம்? எங்கடை இயற்கையைவிட'' அவளை நிமிர்ந்து பார்த்தான். 'அவள் விகாரமடைந்து போனாளோ? சே... எனது மனந்தான் விகாரமாயிட்டுது''

''சுபா! நான் போகாமல் இஞ்சையே நிக்கலாம் போல இருக்கு'' அவள் சிரித்தாள்.

''பகிடியா? இஞ்சை இருந்து என்ன செய்யிறது?''

''எனக்கென்னவோ இந்த ஊரைவிட்டுப்போக முடிய வில்லை. என்னைக் காணுற ஒவ்வொண்டும் போகாதை எண்டு கூப்பிடுறமாதிரி இருக்கு. இந்தத் தோட்டம்... புகையிரதப் பாதை, பவர்ஸ்ரேசன், கோவில்... மைதானம்...எல்லாத்தையும் விட்டிட்டுப் போறதா? வீட்டுக்காரரை... உன்னை...இந்த ஊராக்களையெல்லாம்...''

அவள் கலகலத்துச் சிரித்தாள்.

''நாளைக்கு இதுகள் உங்களுக்குச் சோறு போடப் போகுதே இப்ப தேவை பணம். அதையுழைக்கும் வரைக்கும் தானே''

“சே... கேவலம் பணத்திற்காக எவ்வளவற்றை இழக்கிறம் எவ்வளவற்றிலை அந்நியப்படுறம்” அவன் கண்களில் நீர் திரையிட்டது.

“சீ .. இதுக்குப் போய் யாரும் கண் கலங்குறதே? முந்தி என்னை அழவைச்சீங்கள். இப்ப எனக்குமுன்னாலை அழுகிறீங்கள். குழந்தைப்பிள்ளை மாதிரி கன்ணைத் துடையுங்கோ”

“என்னை விடு சுபா! என்ரை கண்ணீராவது இந்த மண்ணிலை பதியட்டும்.”

அவள் அவனைப் பார்த்தாள். அவனது கண்கள் சிவந்திருந்தன. கண்களில் கண்ணீர் அணை மேவ நின்றது. பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அவனைத் தொட்டு கண்ணீரைத் துடைத்து விட வேண்டுமென்ற குறுகுறுப்பு. கைகள் நகர மறுத்தன.

“சுபா இந்த வேப்பங்காற்று .. அதில் பழம் தின்று கத்தும் கிளிகள், குயில்கள், மைனாக்கள், வௌவால்கள் எல்லாம் இனி எப்போது பார்க்கக் கிடைக்குமோ?”

“பெரிய கவிஞன்தான். இங்கை இதுகள் அங்கை வேறேதும் இருக்கும்தானே. ஏன் பெரிசா யோசிக்கிறீர்? இப்பிடிப் பார்த்தால் எத்தனை பேர் அங்கை நிக்கினை”

“நான் நினைச்சன் நீயாவது என்ரை துன்பத்தைப் புரிஞ்சு கொள்ளுவாயெண்டு, நீயும் ஏஜென்சிக்காரன் மாதிரியே நிக்கிறாய்”

அவளது கண்களில் நீர் திரையிட்டது.

“ஏன் சத்தியன் அப்பிடி நினைக்கிறீர். என்னாலை உம்மைப் புரிந்துகொள்ள முடியுது. ஆனா, நடைமுறை வாழ்வைப்பற்றியும் சிந்திக்கவேணும். ரண்டு தங்கச்சியள், அக்காவின்ரை பணம் .. அரைகுறையாய்க் கிடக்கும் வீடு. அதைத் திருத்திக் கட்டி, சிலவேளை வேறை வீடு கட்டவேண்டியும் வரும். இஞ்சையிருந்து உம்மாலை அதையெல்லாம் சாதிக்க முடியுமா? நித்தமும் மரண ஓலங்களோடை எப்பிடித்தான் ஒரு தொழிலிலை சேர்ந்து, நிம்மதியா உழைச்சு வாழேலும்? ஏதோ எங்களுக்கு உம்மை அனுப்பீட்டு இருக்க விருப்பமே”

“அதுக்கேன் நீ அழுகிறாய். தயவுசெய்து எழும்பு. நான் கொஞ்ச நேரமாவது தனிய இருக்கப்போறன். பிளீஸ்...”

கண்களைத் துடைத்தபடி அவள் எழுந்தாள். அவனைப் பார்க்க அழுகையாய் வந்தது. அவனது கண்களில் கசியும் கண்ணீரைத் துடைக்கவேண்டும் போல... அவனைக் குழந்தையாக்கித் தாலாட்ட வேண்டும் போல... சற்று நேரம் வைத்தகண் வாங்காமல் அவனைப் பார்த்தாள்.

"சுபா... பிளீஸ் .. என்னைத் தனிமையாய்..."

"போறன்..." அவள் போய்விட்டாள். பார்வைகள் பிரிந்தன.

ஒவ்வொரு முகங்களும் மனதில் படமாய் விரிந்தன. மனது சற்று இளைத்தது போலிருந்தது. மெல்ல மெல்ல உறக்கத்தில் அமிழ்ந்து போனான்.

அனலிட்ட புழுவாய்...
ஆனதெம் வாழ்க்கை...
அச்சங்கள்... அவலங்கள்...
ஆறாத காயங்கள் ...

## 9

மனிதக் கூட்டமொன்று நகர்ந்து கொண்டிருந்தது. அதிலொருவனாகச் சத்தியனும் நடந்தான். அருகே தியாகுவின் அண்ணன் கருணா வந்து கொண்டிருந்தார். மாலை மங்கி இருள் சூழ்ந்து விட்டது. நட்சத்திர ஒளியிலும், வியாபாரத்திற்குச் செல்ல வந்து கொண்டிருக்கும் சைக்கிள்களின் டைனமோ ஒளியிலும் நடந்து, கொம்படிக்கு வந்தனர். கரையில் இருளோடு கைகோத்துப் பலர் நின்றனர். மறுகரைக்குப் போகும் நிலையில் பல படகுகளும் நின்றன.

இருவரும் ஒரு படகில் ஏறி அமர்ந்து கொண்டனர். சற்று வேளைக்குள் படகு நிரம்பப் பொதிகளுடன் ஆட்கள் சேர்ந்தனர்.

படகு புறப்பட ஆயத்தமானது. ஒருவன் பாய்க் கயிற்றைக் கழற்றி இழக்கிவிட்டு படகுக்கு அடியில் இருந்த துடுப்புகளை எடுத்து அணியத்தில் இருந்தவர்களிடம் கொடுத்தான்.

"ம்.. ஹீ . ம்" மூவர் சேர்ந்து படகைத் தள்ளினர். அது நகரவில்லை.

"லோட் கூடிப்போச்சுது. உள்ளுக்கை இருக்கிற நாலைஞ்சு பேர் வாங்கோ தள்ளுவம்' சத்தியன் இறங்கினான். 'ஜீன்சை'த் தண்ணீர் நனைத்தது. மற்றவர்கள் இறங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்ன மனிசரப்பா! நீங்கள் போற படகைத் தள்ளேலாமல் கிடக்கே. எல்லாரும் இறங்குங்கோ... படகு போகேல்லை" படகுக்காரன் ஆத்திரத்தில் கத்தினான்.

அதன் பின் நான்கைந்து ஆண்கள் இறங்கி வந்தனர். படகு தள்ளப்பட்டு நீரில் மிதந்தது. படகைத் தள்ளியவர்கள் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு ஏற முற்பட படகு சரிந்து ஆடியது.

"ஏனண்ணை இப்பிடி ஏறுறீங்கள். போட் பிரண்டா உங்கடை சாமானுகள்தான் தண்ணிக்குள்ள விழும்" அணியத்தில் ஏறி நின்றவன் கத்தினான். கடைசியாகச் சத்தியன் ஏறிக் கொண்டான். ஆடியாடிப் படகு மெல்ல நகர்ந்தது.

பாய் விரியாது சுருங்கி நின்றது. வேகமும் குறைந்தது.

"அண்ணை காத்தில்லை. தள்ளத்தான் வேணும்" என்றான் அணியத்தில் நின்றவன்.

"எறங்கு... நாங்கள் தள்ளுவம்" பின்னால் நின்ற இருவரும் தண்ணீருக்குள் இறங்கினர். இடுப்பளவு தண்ணீரில் நடந்தவாறு படகைத் தள்ளினர். அணியத்தில் நின்றவன் சுக்கானைப் பிடித்தபடி பாடினான்.

ஏல ஏலோ தத்தைத்தோம் ஏல ஏலோ
கரிய இருட்டும் வளைச்சிருக்கு
கனம் மனசில நெறஞ்சிருக்கு
ஆனையிறவு ஒளியும் வெளியும்
மனசைக் கலக்கச் செய்யுதுங்க...

ஆனாலும் மனம் துணிஞ்சு நடந்து
அடுத்த கரை போறோமுங்கோ
ஏல ஏலோ தத்தைத்தோம் ஏல ஏலோ...

நட்சத்திரங்கள் மின்னின. மெல்லிய காற்று உடலை வருடியது. அவனது பாடலுக்கு தாளமிசைப்பது போல நீர் 'சொவ் சொவ்' எனச் சப்தித்தது. பாடல் இனிமையாய் இருந்தது. அதைச் சத்தியன் ரசித்துக் கேட்டான். அதனால் தானோ நாட்டார் இலக்கியங்கள் என்றுமே நிலைத்து நிற்கின்றன?

இரண்டு மணி நேரமாகத் தண்ணீரில் பயணம். நட்சத்திரங்களின் வழிகாட்டலில் ஒருவன் சுக்கான் பிடிக்க, இருவர் இடுப்பளவு தண்ணீருக்குள் நின்று தள்ள... நான்கு மைல் கடந்தாயிற்று.

எல்லோரும் இறங்கினர். சத்தியனும் கருணாவும் இறங்கி நடந்தனர். சற்றுத் தள்ளி சிறுசிறு கொட்டில் கடைகள் காணப் பட்டன. சிலர் மண்ணெண்ணெய் விளக்கொளியில் தேநீர் குடித்துக் கொண்டிருந்தனர்.

''அங்காலை அஞ்சரை மைல் நடக்கவேணும். களைப்பா யிருக்கும். இதிலை ஏதாவது சாப்பிட்டுப் போவம்'' கருணா சொன்னார். சத்தியன் தலையசைத்தான்.

உள்ளே நுழைந்து வாங்கில் அமர்ந்து கொண்டனர்.

''ஏண்ணை... என்ன வேணும். டீயா... கொத்து ரொட்டியா...''

"கொத்துரொட்டியும், ரீயும் ரண்டு கொண்டு வா''

கடைக்காரன் கொண்டு வந்து கொடுத்ததைச் சாப்பிட்டு விட்டு எழுந்து கொண்டனர். சத்தியன் காசை நீட்டினான்.

''வேண்டாம். நான் குடுக்கிறன்'' கருணா காசைக் கொடுத்தார்.

வெளியே இருளோடு இருளாகச் சிலர் சேர்ந்து போய்க் கொண்டிருந்தனர். கருணாவும் சத்தியனும் நடந்தனர். இடைக் கிடை தூரத்தே ஒளி தெரிந்தது. மற்றப்படி இருளாயிருந்தது.

''என்ன பேசாமல் வாறீர். பயமாய்க் கிடக்கே?''

''சே... புதுப் பழக்கந்தானே''

''உமக்குத் தெரியாது. இவ்வடம் மணல் தரை. கொஞ்சத் தூரம் போனாப் போலை, குண்டும் குழியுமாய் ஏற்ற இறக்க மான தரை. மாரிக்கு இவ்வடமெல்லாம் தண்ணி நிக்கும். பள்ளங்களுக்கை விழுந்தெழும்பித்தான் போக வேணும். பெரிய சிரழிவு'' என்று சொன்னவர் சுமந்து வந்த பையை வலது தோளுக்கு மாற்றிக் கொண்டார்.

''அதுக்குள்ளை பேயுலாவுது எண்டு ஒரு கதை. பேயுமில்லை. ஒண்டுமில்லை. கொஞ்சப்பேர் களவெடுக்கிறத்துக்குச் சொல்லுற சாட்டு. கொஞ்சத்தூரம் போனால் நீரே பாப்பீர்...'' சிரித்தார்.

குண்டுங் குழியுமாய்ப் பாதை நீண்டது. தடக்கித் தடக்கி நடந்து போனான் சத்தியன். பாதை வளைந்து நெளிந்து சென்றது. இடையிடையே சிறு பற்றைகள்; முட்கள்; பூண்டுக் கட்டைகள்! சற்றுத் தள்ளி இரு கறுத்த உருவங்கள் தெரிந்தன.

''அண்ணை! உது பாதையில்லை. இதாலை வாங்கோ. கூட்டிக்கொண்டு போய் விடுறம்'' ஒரு உருவம் சொன்னது

''வேண்டாம் எங்களுக்குத் தெரியும் நாங்கள் போறம்'. கருணா சொன்னார்.

''எங்களுக்கென்ன? நாங்கள் நல்லது சொல்லத் தீமையாகுது. உது சுத்திப் போக வேணும். வழியிலை சுடலையும் இருக்கு. உங்கடை இஷ்டம்''

''பரவாயில்லை'' கருணா நடந்தார். சத்தியன் பயத்துடன் பின் தொடர்ந்தான். அவர்களுடன் போயிருக்கலாம் போலிருந்தது.

''என்ன, சுடலையெண்டு சொன்னது பயமாயிருக்கோ. நான் முதல் சொன்னனே, இவங்கள் இப்படித்தான். வசதியாய் ஆரும் மாட்டிக் கொண்டால் காசுகளைப் பறிப்பாங்கள். எனக்கு இந்தப் பாதை தெரியும். சுடலையுமில்லை ஒண்டுமில்லை''

சற்றுத் தூரத்தில் விளக்கொளி தென்பட்டது. மெல்ல மெல்ல அது அண்மி வந்தது. அண்மையில் வந்த போதுதான் தெரிந்தது. ஒருவர் விளக்கைப் பிடித்தபடி வந்தார். நான்கு

பேர் இரு தடியில் சாக்கை நுழைத்து, அதில் ஒருவரைக் காவி வந்தனர். இருட்டில் அவரது முகம் தெளிவாய்த் தெரியவில்லை.

''என்னண்ணை நடந்தது?''

''இவருக்கு வயித்துக்குத்து, ஒப்பிறேசன் செய்யவேணும். யாழ்ப்பாணம் கொண்டு போறம்'' என்றான் ஒருவன். அவர்கள் கடந்து சென்றனர். அதைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமா யிருந்தது.

''இந்த மண்ணிலை இப்பிடியும் அவலமா?''

வியாபாரிகள் சிலர் கூட்டமாகச் சைக்கிள்களில் சுமையுடன் வந்தனர். பள்ளத்தில் விழுந்து எழுந்து அவர்கள் செல்வதைப் பார்க்க ஆச்சரியமாயிருந்தது. ''எவ்வளவு மனச் சுமைகளைத் தாங்கி, உடல் சுமைகளைத் தாங்கி .. நாளையைத் தேடுவதற் காகப் பயணிக்கிறார்கள். இவர்களது பயணங்கள் தானே எங்கள் உயிரை நிலை நிறுத்துகின்றன''

அவர்கள் வாகனம் நிற்கும் இடத்தை அடைந்த போது அடுத்த நாளின் இரண்டு மணி கழிந்திருந்தது. ஆட்காட்டிக் குருவியொன்று அலறியபடி பறந்து போனது.

* * * *

கருணாவிற்கு முப்பத்தைந்து வயதிருக்கும். தடித்த...உயர மானவர். அகன்ற முகம், முகத்தில் உத்தியோகத்தனம் தெரியும். அவர் கொழும்பில் வேலை செய்து பழக்கப்பட்டதால் சிங்களம் அரை குறையாகவேனும் பேசுவார்...

''தம்பி அதுதான் முதல் சென்றி, அதிலையிருந்து அங் காலை ஆமிக்காம்ப் .. அவங்களைக் கண்டு மருளக் கூடாது. முகத்தில் எவ்வித சலனமும் இருக்கக் கூடாது. சாதாரணமாகப் போக வேணும்''

கருணா அவனைப் பார்த்தார். அவன் தலையசைத்தான். ஆனாலும் மனதிற்குள் மெல்லிய பயவுணர்ச்சி இருக்கத்தான் செய்தது. கொக்கட்டிச்சோலை, வல்வெட்டித்துறை, குமுதினி ஏன் சுன்னாகம்... எத்தனை படுகொலைகளைப் புரிந்த இரா ணுவம்!

மக்கள் வரிசையாகச் சென்று கொண்டிருந்தனர். அதிலே இருவரும் இணைந்து கொண்டனர். இராணுவ சோதனை மையத்திற்கு அருகில் இரு ட்றக்குகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவ்விடத்தைச் சூழ இயந்திரச் சுடுபடைக் கலன்களைக் கைகளில் ஏந்தியவாறு முப்பது வரையான இராணுவத்தினர் நின்றனர். கரிய அவர்களின் கண்கள்... துப்பாக்கிகளைப் போல அனல் கக்குவதுபோலத் தெரிந்தன.

காலைச் சூரியக் கதிர்கள் முகத்தை எரியச் செய்தன. நெருங்கி வந்து விட்டனர். முன்னால் ஐந்தாறு பேர்தான் நின்றனர்.

இராணுவ வீரனொருவன் சத்தியன் அருகே வந்து, அவனை மேலும் கீழுமாகப் பார்த்து விட்டுச் சென்றான். அவனுடல் நடுங்கியது. இதயம் லப் டப் என வேகமாக அடித்துக் கொண்டது. உள்ளூரப் பயந்தாலும், அதை வெளிக்காட்டாது முகத்தை சாதாரணமாக வைத்திருக்க வேணும் என நினைத்தான்.

அப்போதுதான் .. ஒருகண நேரத்திற்குள் அது நடந்தது. சத்தம் கேட்டுச் சத்தியன் நிமிர்ந்து பார்த்த போது ஒரு உடல் பூமியில் நெளிந்தது. சற்று நேரத்தில் அதன் கதை முடிந்து அமைதியடைந்தது. பக்கத்தில் இராணுவ வீரனொருவனது உடல் துடித்துக் கொண்டிருந்தது.

சற்றுமுன் நடந்தவை மனதை அரித்தன.

அவனுக்கு முன்னால் கருணா, அவரைக் கடந்து மூன்று ஆண்கள், ஒரு இளம் பெண்... அவளது முறை வந்தது. அவளுக்கு அடுத்து அவளது சகோதரன் நின்றான்.

இராணுவ வீரர்களிருவர் பைகளைச் சோதனையிட்டனர். அவளது பைகளைச் சோதனையிட்டபின் ஒரு சிப்பாய் ஏதோ சொன்னான். மற்றவன் பதில் சொல்லி நக்கலாய்ச் சிரித்தான். அவள் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள். அவர்கள் சொன்னது அந்த இளைஞனுக்குப் புரிந்திருக்க வேண்டும். அவன் அவர்களைச் சுட்டெரித்து விடுவது போல் பார்த்தான்.

அவர்களது பேச்சும், நக்கலும் தொடர்ந்தன. முகாமில் சிங்கக்கொடி அசைந்தாடியது. வாளேந்திய சிங்கம் கம்பீரமாக...

"இந்த வாள் எங்களை வெட்டிச் சரிப்பதற்கா?" சத்தியன் நிமிர்ந்து பார்த்தான். ஒரு இராணுவ வீரன் அவளது நாடியில் கையை வைத்து நிமிர்த்தி, ஏதோ சொன்னான்.

(ஐயோ .. அவளை ஒன்றுஞ் செய்யாதீங்கோ. !அவள் என்ரை தங்கச்சி) அவன் குரல் பரிதாபமாய் ஒலித்தது.

(எங்களுக்கு ஒரு பெண் வேணும். உன்ரை தங்கச்சியாய் இருந்தாலென்ன, யாராயிருந்தாலென்ன. எல்லாரும் தமிழர் தானே)

ஒருவன் சொல்ல, மற்றவன் நகைத்தான். அவ்விளைஞன் அவர்களை முறைத்துப் பார்த்தான். அதைக் கண்ட ஒரு சிப்பாய் துப்பாக்கியைத் தூக்கியபடி ஓடிவந்து, துப்பாக்கிப் பிடியால் அவனது தோள் மூட்டில் அடித்தான்.

(சேட்டை விடுறியள் என்ன? பனங்கொட்டைத் தமிழுங்கள் எங்களோடை கதைக்க வெளிக்கிட்டியள். இது யாழ்ப்பாண மில்லை... வவுனியா...)

முதுகைத் தடவியபடி அவன் நிற்க, மற்றச்சிப்பாய் அந்தப் பெண்ணின் தலைமயிரை இழுத்தான்.

"ஐயோ அண்ணை" அவளது அலறல் ஓய முன்னரே, அவன் பாய்ந்து சென்று அந்தச் சிப்பாயைப் பிடித்துத் தள்ளி னான். அவன் தள்ளிய வேகத்தில் சிப்பாய் நிலை குலைந்து விழ, விழுந்த அவன் மீதேறி முகத்தில் குத்தினான்.

"மகே அம்மே .." சிப்பாயின் குரல் ஈனமாய் ஒலித்தது. அவனை அடித்த சிப்பாய் துப்பாக்கியை இயக்கினான். அவனு டல் மண்ணில் சரிந்தது. அந்த ரவை கீழே விழுந்த சிப்பா யையும் தாக்கவே அவனும் மரணித்தான்.

சத்தங்கேட்டு 'மேல் வெடி' வைத்தபடி இராணுவத்தினர் குழுமினர். எல்லோர் முகங்களிலும் கோபச் சுவடுகள்! தொலைத் தொடர்பு சாதனத்தில் ஒரு சிப்பாய் பரபரப்புடன் எதையோ சொல்லிக் கொண்டிருந்தான்.

புழுதியில் விழுந்து கிடந்த இளைஞனது சடலத்தைக் கட்டிப் பிடித்து அவள் கதறிக் கொண்டிருந்தாள். அருகே கிடந்த

இராணுவச் சிப்பாயின் முகம் வெடித்திருந்தது. வந்த இராணுவத்தினர் உடல்களைச் சூழ நின்றனர்.

பயணிகள் யாவரும் என்ன நடக்குமோ? என அஞ்சினர். சத்தியனிற்கு என்ன செய்வதென்று புரியாமல் பதற்றமாயிருந்தது.

சற்று நேரத்தில் ஜீப் ஒன்றிலிருந்து இராணுவ அதிகாரி இறங்கி வந்து சடலங்களைப் பார்த்தார். மற்றச் சிப்பாய் நடந்தவற்றைச் சிங்களத்தில் சொன்னான். அவன் சொல்லி முடித்ததும் அதிகாரியின் கண்கள் சிவந்தன. முகத்தில் கோபச் சுவடுகள். இளைஞனின் சடலத்தையும் அதனருகே அழுது கொண்டிருக்கும் பெண்ணையும் ஆத்திரத்துடன் பார்த்தார்.

(ஒரு சிங்களச் சிப்பாயை .. அதுவும் எங்கடை காம்பிலை வைச்சு அடிக்குமளவிற்கு தமிழங்கள் மிஞ்சீட்டாங்கள். இது இனிமேல் நடக்க அனுமதிக்கேலாது) சிங்களத்தில் பெலத்துக் கர்ச்சித்த அவ்வதிகாரி தன் சிப்பாய்களுக்குக் கட்டளையிட்டார்.

''எங்கடை சிப்பாயின் உடலை ட்றக்கில் ஏத்துங்கோ. இந்தப் பரதேசியின் பொடி இங்கேயே கிடக்கட்டும். அவளை ஒவ்பிஸீக்கு கொண்டு வாங்கோ. மற்றவை இதிலையே நிக்கட்டும் இரண்டு மணிக்குப் பிறகுதான் இவையை அனுப்புங்கோ''

ஜீப்பில் ஏறி அவர் சென்றார். அவரது கட்டளைகள் நிறைவேறின.

இரு சிப்பாய்கள் அவளை இழுத்துச் சென்று ட்றக்கில் ஏற்றினர். ''ஐயோ... என்னைக் காப்பாற்றுங்கோ'' அவள் அலறல் மெல்ல மெல்ல அழிந்து போனது. திமிறினாள்: விடுவிக்கப் பிரயத்தனப் பட்டாள். ஒருவன் தலைமயிரைப் பற்றியபடி கன்னத்தில் அறைந்தான். அதைப் பார்த்து சத்தியன் மனம் பொருமினான். மனக்கண் முன்னே அவள் கசக்கியெறியப் படும் காட்சி விரிந்தது.

''ஓ . எவ்வளவு கொடூரம்? வெறி பிடித்த கூட்டம் அவளைச் சிதைக்காமல் விடாது. அவர்களது அரக்கத்தனத்தால் அவளது தளிர் மேனி துவண்டும் போகலாம்! அல்லாவிடில் கசங்கியபடி செல்லும் அவளை இந்தச் சமுதாயம் என்ன கோணத்தில் பார்க்குமோ? சமூகம் அப்படிப்பட்டது. நாளைய அவள் வாழ்

விற்கு சமுதாயம் நச்சு விதைகளை விதைக்கும்; அவளுக்கு வாழ்வளிக்கும் இளைஞர்கள் யாராவது இருப்பினும் சமுதாயத்தின் சில தீய கரங்கள் தடுக்கத்தான் பார்க்கும். அதை உடைக்கும் துணிவு யாருக்குண்டோ?''

''ஏன் இங்கை வந்தோம்? என்றிருந்தது. இப்படி இங்கே அவலமாய்ச் சாவதை விடச் சொந்த மண்ணிலே சுதந்திரமாய்ச் சாகலாம்'' என்று அவன் மனம் எண்ணியது. மற்றப் பயணிகளும் இப்படித்தான் நினைத்திருப்பார்களோ?

அந்தப் பெண்ணை ஏற்றிய ட்றக் மறைந்து விட்டது. இளைஞனின் சடலம் புழுதிக் குளியலில் அநாதரவாய்க் கிடந்தது. வெயில் கொதித்தது. திரும்பிய இடமெங்கும் இராணுவத்தின் வெறித்தனப் பார்வையும், அப்பாவிகளின் பயங்கலந்த பார்வையும்..

சுடுமணலில் கால் பதிய அவர்களுடன் அவனும் தவமிருந்தான். காகக் கூட்டமொன்று சடலத்தைச் சுற்றிப் பறந்து ஒப்பாரி வைத்து அழுதன.

❋ ❋ ❋ ❋

மதியம் இரண்டு மணியும் கடந்து விட்டது. வெயில் வெம்மையாய் எரித்தது. பசிக்களை வேறு! உடல் சோர்ந்து விடும் போலிருந்தது. உள்ளேயிருந்து இரு சிப்பாய்கள் வந்தனர். அவர்களைக் கண்டதும் அங்குமிங்குமாகச் சிதறியும், இருந்தும் சோர்ந்து போயிருந்தவர்களெல்லோரும் எழுந்து வரிசையில் நின்றனர்.

ட்றக் ஒன்று வந்தது. அதற்குள் ஒரு சவப்பெட்டியிருந்தது. இருவர் அந்தப் பெட்டியைத் தூக்கி லொறியொன்றில் ஏற்றினர். வேறிருவர் அந்த இளைஞனின் சடலத்தைத் தூக்கினர். தூக்கும் போது தசைத் துண்டுகள் நிலத்தில் விழுந்தன. வெயிலில் கிடந்து வெதும்பிய உடலிலிருந்து தசைகள் பிடிப்பிழந்திருக்க வேண்டும். அவனது முகம் சுருங்கி, தளர்ந்து போயிருந்தது.

(ஏய்.. இந்த இருவருக்கும் நடந்ததுதான் உங்களுக்கும். இனிமேல் இதை உதாரணமாய்க் கொண்டு செயற்படுங்கோ) ஒரு சிப்பாய் சொன்னான்.

இரு சடலங்களையும் ஏற்றிய லொறி யாழ்ப்பாணப் பக்கமாகச் சென்றது. அது போவதையே வைத்தகண் எடுக்காது சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான் சத்தியன்... அவனது மனம் கனத்தது.

''நாளை இவர்களின் உறவினர்கள் இந்தக் கொடியவரை எதிர்த்துப் போரிடத் துணிய மாட்டார்களா? இழப்புகளும், தாக்கங்களுந்தானே ஒரு போராட்டத்தை வளர்க்கின்றன என்பது இவர்களுக்கு எங்கே புரியப் போகிறது. நிச்சயமாய் இதை உதாரணமாய்க் கொண்டு ஒரு சந்ததி எழத்தான் போகிறது''

கருணா முதுகில் தட்ட, நினைவுகள் அறுபட நிமிர்ந்தான். சோதனை ஆரம்பமானது. கருணா கண்ணைக் காட்டி பதற்றப் படாமல் இருக்கும் படி சைகை காட்டினார். சோதனையிடும் சிப்பாய்கள் அரை குறைத் தமிழில் ஒவ்வொருவரையும் விசாரித்துக் கொண்டிருந்தனர். நெஞ்சம் பட படத்தது. உள்ளே ஏதோ 'சுரப்பு' சுரந்தது போலிருந்தது.

ஒரு இராணுவ வீரன் அவனைச் சோதனை செய்தான். அடையாள அட்டையையும், அவனது முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான். பையில் வைத்திருந்த பலகாரப் பார்சலை மற்றச் சிப்பாய் எடுத்துக் கொண்டான்.

''சரி போ...'' நிம்மதிப் பெருமூச்சுடன் நடந்தான். சிறிது தூரம் போனவுடன் ஒரு சிப்பாய் கூப்பிட்டான். அவனுடல் நடுங்கியது.

அந்த மனிதர்கள்
பாலைவனப் பிரதேசங்கள்...
நாள்தோறும் நரகத்தை
ஞாபகம் செய்பவர்கள்..
ஓ...அந்தப் பாலைவனத்தில்
பாலையிலும் ஒரு பனித்துளி..

# 10

''ஒன்பேர் சத்தியசீலன்... நீ ஒரு மிலிற்றன்... பிறஸ்தவாதி'' சிப்பாய் இரைந்தான்.

''நா . நா ஸேர் இவர் மாணவன். குடும்பக் கஸ்டத்தில பொறின் போறார்'' கருணாவைச் சிப்பாய் கோபத்துடன் பார்த்தான்.

''ஏ! ஒனக்கு இங்கை வேலையில்லை... நீ போ... இவனை இன்குவார் பண்ணோணும்'' அவர் தயங்கித் தயங்கி நின்றார்.

''போன்னா...போ...'' அவரது முதுகில் இரண்டு அடி போட்டுக் கலைத்தான். அவர் எதுவுமே செய்ய முடியாமல் திரும்பிப் பார்த்துப் பார்த்துப் போனார். அவர் போவதைப் பார்க்கச் சத்தியனுக்குக் கண் கலங்கியது. நெஞ்சம் பயத்தால் விம்மி விம்மித் தணிந்து கொண்டது.

அந்தச் சிப்பாய் 'கொலரில்' கையைப் பிடித்து இழுத்துச் செல்வது போல் கூட்டிச் சென்றான். அவனது முரட்டுப் பிடி கழுத்தை இறுக்கியது. சற்றுத் தூரத்தில் முகாம் தெரிந்தது. முகாமின் முன்னால் கொடிக் கம்பத்தில் வாளேந்திய சிங்கம் பொறித்த கொடி ஆடிக் கொண்டிருந்தது. சிறுசிறு காவலரண் களில் கோபத்தை உமிழும் கண்களுடன் சிப்பாய்கள்...

முகாம் வாசலைக் கடந்து தகரக் கொட்டகைக் கூடாக உள்ளே அழைத்துச் செல்லப்படும் அவனை பல முகங்கள் பார்த்து ஏளனப்புன்னகை புரிந்ததை அவன் அவதானிக்கத் தவறவில்லை.

உள்ளேயிருந்த ஒரு அறையில் கொண்டு சென்று, சேர்ட் கொலரைப் பிடித்து உலுக்கி விட்டுத் தள்ளினான். ''இன்கு வார் பண்ண வரைக்கும் இங்க கிட...''

தகரத்தால் வேயப்பட்ட கூரை. மூடியிருக்கும் சிறு ஜன்னல். புழுதி படிந்த சீமெந்துத் தரை. பையை ஓரமாக வைத்து விட்டு, அமர்ந்து கொண்டான் கண்களை நீர் நிறைத்திருந்தது. முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். வீட்டாரின் முகங்கள் நினைவில் வந்து மறைந்தன.

''வீட்டாரெல்லோரும் இந்நேரம் என்ன செய்வார்களோ? சத்தியன் கொழும்புக்குப் போய் விட்டான் என்று அம்மா புழுகித் திரிவா. தமயந்தி அண்ணா வெளிநாட்டுக்குப் போயிட் டார்; எனக்கொரு சங்கிலி செய்து தாறனெண்டவர் என்று சொல்லித் திரிவாள். சுபத்திரா அத்தான் வெளியிலை போட் டார். தங்கச்சியளின்ரை அலுவல் முடிஞ்சோடனை எனக்குக்

கிடைப்பார் என்று நினைப்பாள். கருணா அண்ணர் வந்திடுவன் என எதிர்பார்த்து வவுனியா ஸ்ரேசனடியில் காவல் நிற்பார். நானோ?'' கண்களை மேவிக் கண்ணீர் நிலத்தில் சிந்தியது.

யாரோ வரும் சத்தம் கேட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டான். சிவில் உடையில், கையில் குறிப்புப் புத்தகத்துடன் ஒருவர் வந்து, அவனை மேலும் கீழுமாய்ப் பார்த்தார். அவன் எழுந்து நின்றான்.

''தம்பி .. உம்மட பேரென்ன?'' தமிழில் கேட்டார்.

''சத்தியசீலன்'' குறித்துக் கொண்டார்.

''அப்பாவின் பெயரையும், தொழிலையும் சொல்லும்''

''அவற்றை பெயர் . செல்லையா .. அவர் செத்திட்டார்''

''குடும்ப அங்கத்தவர் விபரம்...''

''அம்மாவின்ரை பெயர் இலட்சுமிப்பிள்ளை... அடுத்தது அக்கா சத்தியராணி, அடுத்தது நான், அடுத்தது சத்தியகலா... மற்றது சத்தியரமா கடைசித் தங்கச்சி தமயந்தி...'' எல்லாவற்றையும் குறித்த பின் அவனை நிமிர்ந்து பார்த்தார். பார்வையில் பரிதாப உணர்வு தொனித்தது.

''நீரா குடும்பப் பொறுப்பு ''

''ம் .. அதுதான் வெளிநாடு போக இங்கை வந்தனான்''

''விட்டுடுவினை'' ஆறுதல் தெரிவித்துவிட்டு அவர் சென்றார்.

மீண்டும் தனிமை .. தகர வெக்கை உடலில் வியர்வையை உண்டு பண்ணியது. பசி வேறு! பையைத் திறந்து பார்த்தான். கொண்டு வந்த பலகாரப் பார்சலும் பறிக்கப்பட்டு விட்டது. அடிப்பையில் இரண்டு லட்டுகள் கிடந்தன. சோதனையிடும் போது தவறியிருக்க வேண்டும். அவற்றை எடுத்துத் தின்றான். நா உலர்ந்து போனதால் அவை உள்ளே இறங்கப் பிரயத்தனப்பட்டன. உமிழ் நீரில் குழைய விட்டு உண்டான்.

பூட்ஸ் சத்தம் கேட்டது. வாயைத் துடைத்துக் கொண்டான். ''விட்டு விடுவார்களோ?'' என்று நினைத்துக் கொண்டான். வாசலில் நான்கு பேர் நின்றனர். பார்த்தால் முரடர்கள்

போல .. அவனுக்கு உடல் நடுங்கியது. ஒருவன் முன்னே வந்தான் இருந்த சத்தியன் எழுந்து நின்றான். முன்னே வந்தவன் முரட்டுப் பார்வை பார்த்து விட்டு, பூட்ஸ் காலால் மார்பில் அடித்தான். அடியின் வேகம் தாளாமல் அவன் பின் புறமாய் நிலைகுலைந்து விழுந்தான்.

கீழே விழுந்த அவனது நெஞ்சின் மேல் பூட்ஸ் காலை மிதித்தபடி தமிழில் கேட்டான்.

"உன் பேரென்ன?"

"ச...ச. சத்தியசீலன்" வார்த்தைகள் உடைந்து வந்தன.

"ஐ. சி. நம்பரைச் சொல்லு"

"தெ .. தெரியா..."

"ஐ. சீ. நம்பர் தெரியாது? ஆம்ஸைப் பற்றித்தான் தெரியுமா? ஏ. கே. மகஸீனிலை எத்தனை றவுண்ட்ஸ் போடலாம்? ம்.."

"தெ...தெரியா"

"ம்... தெரியாது" காலால் மார்பில் அழுத்தினான்.

"ஐயோ... அம்மா..."

"தம்பி... இங்கை யாருமே வரமாட்டாங்கள்... நீ றெயினிங் எடுத்தனீ... மருந்து கட்டினனி... எங்களுக்கு இன்போமேசன் கிடைச்சிருக்கு"

"இ...ல்லை...ங்... ங்... தா... நான் படிக்கிறன், எனக்கு ஒண்டுமே தெரியா" அவன் குரல் உடைந்து ஒலித்து, மெல்ல மெல்ல அழிந்தது.

அவன் காலை எடுக்காமலே பின்னே திரும்பி மற்றவர்களுக்குச் சைகை காட்டினான். அவர்கள் மூவரும் வந்ததும் அவன் காலை எடுத்தான்.

"அங்கை கொண்டு போ... நான் வாறன்" அவன் சொல்லி விட்டுச் சென்று விட்டான். மூவரும் அவனைக் கூட்டிக் கொண்டு சென்றனர். நடக்கும் போது முதுகு வலித்தது. உடல் இளைத்தது. பிரயத்தனப்பட்டு நடந்தான்.

அவர்கள் கூட்டிச் சென்று ஒரு அறையில் விட்டனர். காற்றோட்ட வசதியற்ற அவ்வறையின் சுவர்களில் திட்டுத் திட்டாக

இரத்தம் படிந்து காய்ந்திருந்தது. அறையின் நடுவே இரு கயிறுகள் தொங்கின. அவனை இருவர் குப்புறப் பிரட்டித் தலைகீழாகத் தூக்கினர். மற்றவன் கயிற்றினால் கால்களைக் கட்டினான். கட்டியவுடன் கையை விட்டனர். அவன் அந்தரத்தில் நின்று ஊஞ்சலாடினான். மரத்தில் வெளவால் தூங்குவது போல!

உடல் பட படத்தது. தலைக்கு மேலே வந்துவிட்டது. சாண் ஏறினாலென்ன? முழம் ஏறினாலென்ன! அந்த நேரத்திலும் வாழ்வோம் என்ற நம்பிக்கை.

'கோழியை உரிப்பதற்கு கழுத்தில் கட்டித்தான் உரிப்பார்கள். என்னைக் காலில் கட்டியா உரிக்கப் போகிறார்கள். உரிக்கட்டும். என்னை உரிப்பதால் .. என்னைப்போல் எத்தனை பேர் தோன்றப் போகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. எனது சுவடுகள் முடிந்து போகக் கூடியவையா? முழுமையாய் அழிந்து போகக் கூடியவையா? என்ன வந்தாலும் வரட்டும்'

''எல்லாஞ் சரியா?'' என்றபடி வந்தான் அந்த முரடன். அவன் தனது இடுப்பில் கையை வைத்து, கொழுவியிருந்த பெல்ற்றைக் கழற்றினான்.

''அம்மா'' முதலடி. ''ஐயோ... அம்மா'' அடுத்த அடி— குரல் ஒடிந்து அனுங்கலானது. அடி ஓயவில்லை. எத்தனை அடி விழுந்ததோ? என அவன் எண்ணவில்லை. மெல்ல மெல்ல நினைவிழந்து மூர்ச்சையானான்.

* * * *

கண்களைத் திறந்து பார்த்தான் சத்தியன். மேலே 'பான்' சுழன்று கொண்டிருந்தது. அருகருகே கட்டில்களில் பலர் இருந்தனர். முன்னாலுள்ள கட்டிலில் படுத்திருந்தவன் சிங்களத்தில் ஏதோ முனகிக் கொண்டிருந்தான். சத்தியன் எழும்ப முயன்றான். முடியவில்லை. கையிலும் உடலிலும் கட்டுகள் போடப்பட்டிருந்தன. அந்த முரட்டு உருவங்கள் நினைவில் நிழலாடின. தாகமாயிருந்தது. எடுத்து அருந்தக் கை விலகவில்லை.

சற்று நேரத்தின் பின் மருத்துவர் வந்தார். வந்தவர் அவனைப் பரிதாபத்தோடு பார்த்தார்.

''எப்பிடித் தம்பி.. சுகமா?'' தமிழில் கேட்டார். தலைய சைத்தான்:

''பெரிசா இல்லை... அடி காயங்கள்தான். இரண்டு நாளிலை மாறிடும்''

''த...ண்...ணி'' என்று அனுங்கினான் சத்தியன்

அவர் தாதியைக் கூப்பிட்டு சிங்களத்தில் ஏதோ கூறினார்.

அவர் சென்றதும் அவள் அவனைப் பரிதாபமாய்ப் பார்த்தாள். அதன் பின் அவள் தண்ணீர், சாப்பாடுகளை வேளை தவறாமல் எடுத்துக் கொடுத்தாள்.

இரு நாட்களின் பின் வந்த மருத்துவர் சொன்னார்.

''இனி நீர் போகலாம். நான் றெக்கமண்ட் பண்ணி விடுறன். ருமாறோ மோனிங் நீர் போம். இல்லாட்டில் அவங்கள் பிறகும் உம்மைக் கொண்டு போடுவாங்கள்...''

அதன்பின் அவனைப் பற்றி, குடும்பத்தைப் பற்றியெல்லாம் விசாரித்தார்.

''ஒன்னோடை உடுப்புகள், காசு எல்லாம் எடுத்து வைச்சிருக்கிறன். நீயும் என்னோடை புள்ளை மாதிரி. பாவியள்... இப்பிடி அடிச்சிட்டாங்கள்...' அடிச்சவனும் தமிழன்... அடி வேண்டினவனும் தமிழன் சே...'' என்று சொல்லி, சிங்களத்தில் ஏதேதோ சொல்லித் திட்டினார். அதன் பின் அவனது முகத்தை தடவி விட்டுச் சென்று விட்டார்.

மீண்டும் அடுத்த நாட் காலையில் மருத்துவர் வந்தார்' தன்னுடைய உதவியாளரிடம் ஏதோ சிங்களத்தில் சொல்லி விட்டு, அவனருகே வந்தார்.

''இண்டைக்கு நீர் போகலாம். பயப்படக் கூடாது. நான் காரிலை கொண்டு போய் றெயிலேற்றி விடுறன். எல்லாத்துக்கும் ஒரு நாள் தீர்வு கிடைக்கும்தானே... வி ஆர் சிலோனிஸ்! அதிலை நாங்கள் ஒன்றாயிருப்பம்...''

சத்தியன் உடையை மாற்றினான். ''வி ஆர் சிலோனிஸ்' மருத்துவரின் வார்த்தைகள் எதிரொலித்தன.

''ஒரு காலத்தில் வீ ஆர் சிலோனிஸ்தான்! இன்று ஒரு புறம் ஸ்ரீலங்கா. மறு புறம் தமிழீழம். இது எப்படி வந்தது? சிங்கள அரசியல் வாதிகளும், பௌத்த சிங்கள மேலாதிக்கமும் அவர்தம் படையணிகளும் இனவாதத்தை தோளில் தூக்கியதன் விளைவே இதைத் தோற்றுவித்தது. இனி எப்படி வீ ஆர் சிலோனிஸி என்பது? பாவம்! அப்பாவிச் சிங்கள மக்கள் ''

''ம் ..என்ன யோசிக்கிறீர்? எல்லாத்துக்கும் முடிவு வருந்தானே! வாரும்...போவம்'' அவர் முன்னால் நடந்தார். அவரின் பின்னால் அவன் நடந்தான். வைத்தியசாலை வாசலில் அவருடைய உதவியாளர் காருடன் நின்றான். கார்க்கதவைத் திறந்து ஏறிக்கொண்டார். அவனும் ஏறினான். கார் புறப்பட்டது.

''நான் இந்த நிலையிலை இருக்கிறதுக்கு காரணம் ஒரு தமிழர்தான். அப்ப எங்களுக்குக் கஸ்டம். நாங்க பத்துப் பிள்ளைகள். என்னிலை இருந்த ஆர்வத்தைப் பார்த்த சின்னப்பு என்கிற டொக்டர்தான் எனக்கு கெல்ப் பண்ணினவர். அவர்தான் எனக்கு தமிழ் சொல்லித் தந்தவர். நல்லா சிங்களமும் பேசுவார். அவரோடை நான் தெல்லிப்பளைக்குப் போயிருக்கிறன்'' அவர் சொல்வதைக் கேட்க ஆச்சரியமாயிருந்தது.

வெளியே பார்வையை வீசினான். வயல்கள், மரங்கள், சிறு சிறு பற்றைகள், சிறுசிறு கொட்டில்கள். வயலுழும் எருமை மாடுகள்... எல்லாம் மறைந்து, சன நடமாட்டமுள்ள தெருவில் கார் ஏறியது. வாகனங்கள் ..இயந்திரத் தனமான மனிதர்கள்... கடைகள்...எல்லாம் கடந்து புகையிரத நிலையத்தில் வந்து நின்றது. சாரதி இறங்கினான். அவர் அவனிடம் ஒரு ஐநூறு ரூபா நோட்டை நீட்டி, ஏதோ சிங்களத்தில் சொன்னார். சிறிது நேரத்தின் பின் டிக்கட்டுடன், ஒரு பார்சலையும் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தான். அவர் அதை வாங்கிப் புன்னகைத்தபடி சத்தியனிடம் நீட்டினார். அவன் தயங்கினான்.

''ம் உமக்குத்தான். பிடியும்'' அவன் வாங்கியபடி அவரை நன்றியுடன் பார்த்தான்.

''உம்மட சேர்ட்டை அவங்கள் கிழித்திட்டாங்கள். புதுசா வாங்கித் தந்திருக்கிறன். என்னுடைய ஞாபகமாக இருக்கட்டும்'

பையுக்குள் இருந்து ஒரு அட்டையையும் தூக்கி அவனிடம் கொடுத்தார்.

''இதுதான் என்ரை அட்றஸ். தேவையெண்டால் லெற்றர் போடும். ஆனா, அந்தப் பக்கம் வரவேண்டாம். அங்குள்ளவர்கள் துவேசம் நிறைந்தவர்கள்''

புகையிரதம் கூவிக்கொண்டு வந்தது. இருவரும் காரை விட்டு இறங்கினர். பைகளைத் தூக்கிக் கொண்டு புகையிரத மேடையை நோக்கிச் சத்தியன் நடந்தான். புகையிரதத்திலிருந்து பயணிகள் இறங்கிக் கொண்டிருந்தனர். ஏறுவதற்குத் தயாராய் ஒரு கூட்டம் நின்றது. எல்லோரும் முண்டியடித்தபடியிருந்தனர். சிலர் இறங்குபவர்கள் இறங்கிமுடிய முன்னரே, தொற்றி ஏறிக் கொண்டனர்.

அவர் முதுகில் தட்டினார். அவன் கண்கள் கலங்கின. குனிந்து அவர் பாதத்தைத் தொட்டு விட்டு நிமிர்ந்தான்.

''கவனமாய்ப் போட்டு வாரும்'' முதுகில் தடவி வழியனுப்பினார். கம்பியைப் பற்றித் தொற்றி ஏறி யன்னல் ஓரமாக ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டான்.

''புஸ் . ஸ்...க்கும்...க்கும்'' புகையிரதம் இயங்கி மெல்ல மெல்லப் புறப்பட்டது. அவர் கையைக் காட்டி வழியனுப்பினார். அவனும் கையைக் காட்டியபடி, ஓடும் ரயிலில் அமர்ந்திருந்தான். மெல்ல மெல்ல அவருருவம் பார்வையில் சுருங்கி, புள்ளியாய் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

திரும்பி உள்ளே பார்த்தான். இருக்கை நிறைய ஆட்கள் இருந்தனர். அவர்களைப் பார்க்கப் பயமாயிருந்தது சத்தியனுக்கு. அவர்கள் பார்வையில் முறாப்புத் தென்படுவது போல......

தலையை ஜன்னலுடன் இணைத்துப் படுக்க முயன்றான்' உடல் அசதியாய் இருந்தது,

கொஞ்ச நேரம் செல்ல பின் இருக்கையில் இருந்தவன் ஏதோ சிங்களத்தில் கேட்டது புரிந்தது. கண்ணை இறுக மூடிக் கொண்டான். அருகிலிருந்தவன் அவனது முதுகில் தட்டி ஏதோ சொன்னான். அவன் பேசாமல் இருந்தான்.

'என்ன வந்தாலும் பரவாயில்லை. வவுனியாவில் நடந்ததை விட இங்கு பெரிதாக என்ன வரப் போகிறது'

பக்கத்திலிருப்பவன் பின்னாலிருப்பவனுக்கு ஏதோ சொல்வது கேட்டது. மனம் பழைய சம்பவங்களை அசை போட்டது. மெல்ல மெல்ல எரியும் நினைவுகளோடு தூங்கிப் போனான்.

❋ ❋ ❋ ❋

அவன் மீண்டும் கண் விழித்த போது புகையிரதம் ஏதோ ஒரு நிலையத்தில் வந்து நின்றது.

''குரும்பே குரும்பே பார்லி பார்லி'' வியாபாரிகளின் கூச்சல்கள். தொண்டை வரண்டிருந்தது. ஒரு சோடாவை வாங்கி அருந்தி விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான். புகையிரதம் புறப்பட்டது.

'இரண்டு மணியாகி விட்டது. இந்நேரம் வீட்டார் சாப்பிட்டிருப்பினம். அம்மா சாப்பிடும் போது என்னையும் நினைத்திருப்பா சுபத்திராகூட கடைசியாய் நான் அழுததை நினைத்துப் பார்த்துக் கொண்டிருப்பாள். சீனியம்மான் சில நேரம் வெளவால் கொடி கட்டியிருப்பார். மதி, சிவம் இருவரும் வீட்டிற்கு வந்து சென்றிருப்பர். அக்காவும் தியாகுவும் சிவன் கோவில் திருவிழாவுக்குப் போயிருப்பினம்...இண்டைக்கு வேட்டைத் திருவிழா... இளைஞர்களில்லாமல் நடந்திருக்கும்'

முன்பென்றால் வேட்டைத் திருவிழாவில் அந்த வட்டாரமே திரண்டிருக்கும். இப்போது யாரிருக்கிறார்கள் சுவாமியைத் தூக்கிக் கொண்டு விரைவாய் ஓட!

வெளியே மழை பெய்தது. யன்னல் பக்கத்தால் தூவானம் எற்றியது. கண்ணாடியை இழுத்து விட்டு விட்டு மீண்டும் படுத்தான்.

நெத்தலிப் பயில்வான்! இப்படித்தான் ஊரில் பலர் அவனை அழைப்பர். சுபத்திரா இடைக்கிடை கொக்கத் தடி என்று சொல்லிச் சீண்டுவாள்.

'இந்த உடம்பு இவ்வளவு அடிகளையும் தாங்கியிருக்கிறதே!'

மாலை நான்கு மணிக்கு புகையிரதம் கோட்டையில் வந்து நின்றது. சிவலிங்கம் அங்கிளின் அட்றஸ்ஸை கையிலெடுத்தான். பைகளைத் தூக்கிக் கொண்டு, முண்டியடித்து இறங்குபவர்களுள் ஒருவனாக இறங்கி, கிழக்குப் புறமாக விரிந்து கிடந்த வீதி வழியே நடந்தான்.

❋ ❋ ❋ ❋

சொந்தமண்
சோகங்கள் சுமந்தாலும்
சுகத்தைத் தந்தது
அன்னிய மண்...
ஆனந்தம் பல எனினும்...
சுதந்திரத்தை விழுங்கியது.

# 11

வீதியை நிறைத்துச் சனங்களுடன் வாகனங்களும் சென்று கொண்டும், வந்துகொண்டுமிருந்தன. குறுக்குத் தெருக்கள், அவற்றில் நிறைந்து நிற்கும் மனிதக் கூட்டங்கள், உயர்ந்து நிற்கும் கட்டடங்கள், வாகனப் புகைகளின் நாற்றங்கள், வாகன ஓசைகள்,... புலன்கள் எல்லாவற்றையும் கிரகிக்க, மனது மட்டும் வெறுமையாய் உழற, பிரதான வீதியால் வளைந்து செல்லும் வீதியூடாக நடந்து, திரும்பி டயஸ்பிளேஸில் உள்ள சிவலிங்கம் அங்கிளின் வீட்டை அடைந்தான் சத்தியன். மூன்றாம் மாடியில் அவர்களது வீடு உள்ளது. மூன்றாம் மாடியில் மட்டும் பத்து வீடுகள் இருந்தன. வீட்டு நம்பரைச் சரிபார்த்துக் கொண்டான்.

வீடு பூட்டிக் கிடந்தது. கதவைத் தட்டினான். சிறிது நேரத் தட்டலின் பின் சிவலிங்கம் அன்ரீ கதவைத் திறந்தாள்.

''என்ன... ஆரிட்டை வந்திங்கள்''

''நான் சத்தியன்... சுன்னாகம்''

''ஆஙா... வாரும்... லெட்டர் கிடைச்சது. நான் ஆளை மறந்தே போனன்'' உள்ளே போனான். ஒரு அறையளவு இடத்தில் ஒரு வீடு. அதற்குள்தான் எல்லாம். வீட்டை நிறைத்து அழகுப் பொருட்கள்... ரீவீ... றேடியோ... பிறிஜ், சோகேஷ்.

உள்ளே ஒரு இளம் பெண்ணிருந்தாள். சுபத்திராவைப் போல வெள்ளைக் குண்டுப் பெண். அவள் அவனை முறாய்த்துப் பார்ப்பது போலிருந்தது. கதிரையொன்றில் அமர்ந்தான்.

ரீவி ஓடிக்கொண்டிருந்தது. உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டியில் இரு அணிகள் விளையாடுவது காட்சியாய் விழுந்துகொண்டிருந்தது. கிரிக்கட் அவனுக்குப் பிரியமான விளையாட்டு...இப்போது ஏனோ கசந்தது. கூல் டிறிங்சுடன் அன்ரி வந்தாள். ஒன்றை அவனிடமும், மற்றதை அவளிடமும் கொடுத்துவிட்டு தானுமொன்றை எடுத்து அருந்தினாள். அதன்பின் அவனைக் காட்டி அவளிடம் ஏதோ சொன்னாள். அதற்குப் பதிலாக அவள் ஏதோ சொல்ல, அதை மறுத்து அன்ரி ஏதோ சொன்னாள். அவர்கள் என்னதான் கதைக்கிறார்களோ?

'யாரோ ஸிக்ஸர் அடித்துவிட்டான்' அறிவிப்பாளர் உற்சாகத்தில் அலற அதன் வழியே சபையோரின் கூக்குரல்கள்...

ரீவியின் ஆங்கில, சிங்கள அலறல்கள், அன்ரியினதும் அந்தப் பெண்ணினதும் சிங்கள உரையாடல்கள்.. ஒன்றுமே அவனுக்குப் புரியவில்லை. எதையாவது பார்ப்போமென்றால் எல்லாமே செயற்கை. அன்ரி வெகு அந்நியோந்நியமாய் அவளுடன் பேசிக்கொண்டிருந்தாள். அவன் பேசாமல் ரீவியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

உடை மாற்றவுமில்லை. சூரியன் மறையத் தொடங்கவும் செயற்கை ஒளி முதல்கள் ஒளிரத் தொடங்கிவிட்டன.

அந்தப் பெண் எழுந்து போய்விட்டாள். அதன்பின்னர்தான் அன்ரி அவனைப் பார்த்தாள். கை, கால்களில் பிளாஸ்ரர் ஒட்டப்பட்டிருப்பதை அப்போதுதான் கண்டாள் போலும்!

''உதென்ன... கைகாலெல்லாம் சுட்டுகள். விழுந்துபோனீரே''

அவன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். பின்னர் வவுனியாவில் நடந்ததைச் சொன்னான்.

''மெய்யே... அறுவாங்கள்... இப்பிடிச் செய்தவங்களே?''

சிறிது நேரம் அவனைக் கூர்ந்து பார்த்தாள். பின் குரலில் தணிவுடன் சொன்னாள். ''இஞ்சை நாங்கள் எதுவுமே கதைக்கிறதில்லை. கதைச்சால் பிரச்சனைதான். இப்ப இதிலை இருந்தா... அவகூட குண்டு கொண்டுவந்தாரோ எண்டு நக்கலாய்க் கேட்டா. அவவின்ரை தகப்பன் இன்ஸ்பெக்டர். தொங்

கல் றாமிலை ஆமியள் நாலைஞ்சுபேரிருக்கினை. நாங்கள் யாழ்ப்பாணமெண்டே கதைக்கிறேல்லை. தற்செயலாய் அவங்கள் ஏதாவது சந்தேகிச்சால் வெட்டியும் போடுவாங்கள். நீர் புதிசு. வாய்தவறி ஏதாவது கதைச்சுப் போடாதேம். பிறகு நாங்களும் உள்ளுக்கை போகவேண்டியதுதான்.

கேட்க ஆச்சரியமாயிருந்தது. அந்தப் பெண்ணுடன் நன்றாய்க் கதைத்தவள் இப்போது இப்படிச் சொல்கிறாள். இங்கே எல்லாமே செயற்கை; மனிதர்களும் கூட!

''நாங்கள் முதலிலை உம்மைப் பதிவு செய்யவேணும். அல்லாட்டில் பிரச்சனைதான். இனியென்ன. நாளைக்குத்தான் பதியவேணும். சத்தியன் நீர் ஏதாவது கதைக்கிலி சிங்களவரை சீனா எண்டும், தமிழரை தானா எண்டும், ஆமியை ஈனா எண்டும் சொல்லும். நாங்கள் அப்பிடித்தான் கதைக்கிறனாங்கள்''

அதன்பின் அவனது குடும்பத்தைப்பற்றி, ஊராரைப்பற்றியெல்லாம் விசாரித்தாள். சின்னவயதில் புளியடி வைரவகோவிலின் பின்னாலுள்ள வெளி வளவில் கிளித்தட்டு விளையாடியதையும், வண்ணாத்துப் பூச்சிகளைப் பிடித்து விளையாடியதையும், புளியமரக் கொப்புகளில் ஏறியிருந்து ஊஞ்சலாடியதையும், உப்பு மிளகாயுடன் புளியங்காய் தின்றதையும் தனக்குரிய பாணியில் சுவாரஸ்யமாக நினைவுகூர்ந்தாள்.

''இப்பவும் அந்த இடத்திலை விளையாடுறவையே?''

''இல்லை அன்ரி! அந்த இடத்திலை இப்ப தோட்டஞ் செய்யினை. பெரிய ரண்டு புளியும், இலுப்பையும் தறிச்சாச்சு. ஆரிருக்கினை விளையாட? அன்ரி, இனி வாற சந்ததியள்தான் அந்த இடங்களிலை விளையாடப் போகவேணும்.''

''ஏன்? ஒருதருமில்லையே'' சிரித்தாள்.

''உங்களுக்குச் சிரிப்பாயிருக்கு. உண்மைநிலை. அன்ரி 87க்குப் பிறகு ஊரிலை இருந்து நான் வரையிலை 42 பேர் வெளிநாடெண்டு வெளிக்கிட்டிட்டம். அதுபோல பலர் சொந்தமண்ணிலேயே தமக்குரிய மேலான கடமைகளைச் செய்யப்போய் விட்டினம். இந்த நிலையிலை சந்தோசமாய் விளையாடித்திரிய ஆரிருக்கினை? நேரமெங்கே? உங்கடை கால நிலமை எங்கடை

மண்ணிலை தோன்றிறத்துக்கு ஒரு முடிவு வரவேணும். அதுக்குப் பிறகுதான் அங்குள்ள சந்ததிகள் நிம்மதியா சந்தோசமாய் எதிலையும் ஈடுபடேலும்''

அன்ரி அவனை ஆழமாய்ப் பார்த்தாள். பிறகு மௌனத்துடன் எழுந்து கிச்சின் பக்கமாகப் போனாள்.

''பாவம் அன்ரி, பிள்ளையளுமில்லை. சொந்த ஊரிலையும் இல்லை. எப்பிடியோ உறவுத்துயர் அவளையும் பாதிக்குது'. எழுந்துபோய், ஒருவர் மட்டுமே நிற்கக்கூடிய சிறிய குளியலறைக்குள் நுழைந்தான். அதற்குள்தான் மலசலகூடமும்.

முகம் கழுவிவிட்டு வெளியே வந்தபோது சிவலிங்கம் வந்து கொண்டிருந்தார். வந்தவர் அவனை ஆச்சரியப் பார்வை பார்த்தார்.

''நீர் சத்தியனோ?''

''ஓம்...'' தலையாட்டினான். அவரும் பலவற்றை விசாரித்தார். 87ன் பின் ஊருக்கு வரவில்லையே என ஆதங்கப்பட்டார். தாங்கள் முன்பு நின்று அரட்டையடிக்கும் பூதராயர் கோவில் அரசமரம் வளர்ந்துவிட்டதா? எனவும் கேட்டார்.

''இவவுக்குச் சரியான கவலை. மாமி மோசம் போனதுக்கும் வர முடியேல்லை. என்ன செய்யிறது? வெளிக்கிட்டம். ஒரு மாதமளவுக்கு வவுனியாவிலை கேபியு. பிறகு யாழ்ப்பாணம் கேபியு. கொழும்பிலை குண்டு வெடிப்பு. இப்பிடியே ஒவ்வொண்டாய் வரேலாமல் போச்சுது''

அன்ரி இருவருக்கும் ரீ கொண்டுவந்து கொடுத்தாள்.

பலகதைகளையும் பேசிவிட்டு படுக்கைக்குப் போகும் போது நேரம் பத்து மணியாகிவிட்டது. பட்டர் தடவிய பாண் துண்டுகளை உண்டுவிட்டுப் படுத்தபோது தலை வலித்தது சத்தியனுக்கு சிறிய இடத்திற்குள் முழுமையாக நீட்டி நிமிர்ந்து படுக்க முடியவில்லை. சுருண்டு படுத்துக் கொண்டான்.

வீட்டு நினைவுகள் நிழலாடின. வீடு என்ன மாதிரி இருக்குமோ? இன்னும் கடிதம் கூட எழுதவில்லை. இனி ஒவ்வொரு நாளும் அம்மா வாசலில் தபால்காரனை எதிர்பார்க்கப் போறா...

"தம்பி... கொழும்பெண்டாலென்ன, வெளிநாடெண்டாலென்ன கண்டகண்ட சிநேகிதங்கள் ஏற்படும். அதாலை குடிக்கிற, புகைக்கிற, சூதாடுற சந்தர்ப்பங்களெல்லாம் வரலாம். நீ உன்ரை வீட்டு நிலையை யோசிச்சு நடவணை" சினியம்மானின் அறிவுரை நினைவுக்கு வந்தது.

வவுனியாவில் விழுந்த அடிகள் .. ஒவ்வொரு அடிகளும் மீண்டும் மீண்டும் விழுந்து நோவது போல...

புலன்கள் மெல்ல மெல்லச் சோர, அவனை உறக்கம் ஆட்கொண்டது.

❋ ❋ ❋ ❋

நான்கு முரடர்கள் கையில் கத்திகளுடன் அவனைச் சூழ நின்றனர். அவன் நிலத்தில் குந்தியிருந்தான். ஒருவன் கத்தியை ஓங்க, அவன் கும்பிடக் கும்பிட கத்தி இறங்கி, காயத்தோடு அலறியபடி குருதி கொப்பளிக்க அவன் ஓடினான். முரடர்களும் கலைத்தனர். ஓடிஓடிக் களைத்து நிற்க, கத்திகள் நான்கும் சீவ... ஐயோ... அலறல் கேட்காமல் மடிந்தது. திடுக்கிட்டு எழுந்தான் சத்தியன். சே! கெட்ட கனவு. அதன்பின் நித்திரை வரவில்லை. மனதில் அலையலையாய் நினைவுகள் .

அறைக்கதவு தட்டப்பட்டது. யாரோ சிங்களத்தில் ஏதோ சொல்லியபடி தட்டினர். எழுந்து கதவைத் திறக்கப் பயமாயிருந்தது. சத்தம் கேட்டு அங்கிள் எழுந்து லைட்டைப் போட்டார். அன்ரியும் எழுந்து வந்தாள். கதவைத் திறக்கவும், முன்னால் நாலைந்து பொலீசார் நின்றனர். அவர்கள் அங்கிளிடம் சிங்களத்தில் ஏதோ கேட்க, அவர் பதில் சொல்லியபடி அவனைக் காட்டினார்.

ஒரு பொலிஸ்காரன் உள்ளே நுழைந்து அவனைப் பிடித்தான். அங்கிள் சிங்களத்தில் ஏதேதோவெல்லாம் சொன்னார். மன்றாடப் பாவனையில் கதைத்தார். அவர்கள் கேட்கவில்லை. அவனை இழுத்துக்கொண்டு வெளியே வந்தான் பொலீஸ்காரன். அங்கிளும் பின்னால் வந்து ஏதோவெல்லாம் கதைத்தார். மாடிப் படிகளில் அவனையும் இழுத்துக்கொண்டு பொலிசார் இறங்கினர். ஜீப்பொன்று நின்றது. அங்கிள் பதட்டத்துடன் சொன்னார்.

சத்தியன் பயப்படாதேம்... விடிய முன்னுக்கு நான் உம்மை விடுவிச்சிடுவன். பெரிதாய்ப் பயப்படாதேம்...''

'இனிப் பயப்பட்டு என்ன செய்வது? வவுனியாவை விட இங்கே வேறென்ன நடக்கப்போகுது. அடிப்பார்கள் உதைப்பார்கள், சிலவேளை என்னையும் கொன்று களனியாற்றில் போடுவார்கள்' உடலில் மெல்லிய பதட்டம் இருந்தது. அது கூடப் பயமாயில்லை! வவுனியாதான் அவனை இப்படியாக்கியது.

ஜீப் புறப்பட்டது. கண்களை நீர் நிறைக்க அன்ரி விக்கித்து நின்றாள். எதுவுமே செய்ய முடியாமல் அங்கிள் தத்தளித்த நிலையில் நின்றார். சத்தியனுக்கு கண்ணீர் வரவில்லை பெரிதாய்க் கவலைப்படவுமில்லை. என்னவென்றாலும் நடக்கட்டும் என்றிருந்தான்.

பொலிஸ் ஸ்டேசனுக்குள் ஜீப் நுழைந்தது. ஜீப்பிலிருந்து இறக்கிக் கொண்டு சென்று அவனை ஒரு அறைக்குள் விட்டுப் பூட்டினர். அந்த அறை இருட்டாயிருந்தது. சிறிது நேரம் உட்கார்ந்து இருந்தபடியே யோசித்துக் கொண்டிருந்தான். பிரயாண அலைச்சல்களால் போதிய நித்திரையில்லை. நித்திரை கொள்ளவேண்டும் போலிருந்தது. தரையில் சாய்ந்துகொண்டான், நினைவுகள் நித்திரையைக் கடத்த முயன்றன.

மெல்ல மெல்ல அயரும் நேரம் கதவு திறக்கப்பட்டது. தூக்கக் கலக்கத்துடன் எழுந்து கொண்டான். ஒருவன் அவனைப் பிடித்துக் கூட்டிப் போனான். ஒரு அறையில் ஒருவர் சிகரெட் புகைய அமர்ந்திருந்தார். அவன் சத்தியனைக் காட்டி அவரிடம் ஏதோ சொன்னான். அதற்கு அவர் ஏதோ சொன்னார். அவர் இன்ஸ்பெக்டராயிருக்க வேண்டும். சிங்களத்தில் பேசி இவனுக்கு என்ன விளங்கப்போகிறது? விரட்சியுடன் அவர்களின் முகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவருடன் பேசிவிட்டு அவனைக் கூட்டிச்சென்று ஜீப்பில் ஏற்றிவிட்டுத் தானும் அருகில் அமர்ந்தான். 'விசாரணையுமில்லை, ஒன்றுமில்லை. விடப் போகிறார்களோ?' ஜீப் புறப்பட்டு எங்கோ விரைந்து சென்றது. குலுக்கலால் நிலையில்லாமல் ஆடவேண்டியிருந்தது. இருளின் நடுவே வீதியில் ஒளி உமிழும் மின் குமிழ்கள், அந்த நேரத்திலும் சிறிய சனக்கூட்டம்! நித்திரை வேறு சுழன்றடித்தது.

எங்கே கூட்டிச் செல்கிறார்கள்? என்ற கேள்விதான் விடை காண முடியாமலிருந்தது. திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் இருப்பவன் ஜீப் குலுக்கலில் ஆடியாடித் தூங்கிக்கொண்டிருந்தான்.

'இந்த நேரத்தில் பாயலாம். பாய்ந்து எங்கே போவது? எங்கடை இடமெண்டால் எங்கையும் போகலாம். இங்கை மீண்டும் இவனைப் போல - அல்லது இவனைவிடவும் துவேசம் பிடித்த ஒருவனிடம் அகப்படவேணும். அவன் பிடிக்காமல் - அடிக்காமல் - சிலவேளை வெட்டிக் கொல்லாமல் விடுவனோ? ''...ஆனால் அங்கை மட்டும் வந்திடாதேம். அங்குள்ளவர்கள் துவேசம் பிடித்தவர்கள்'' டொக்டர் அமரசிறி சொன்ன வார்த்தைகள் நினைவில் வந்து மறைந்தன.

'வவனியாவிலை இன்றைக்கு யார் வேள்விக்குப் போனார்களோ? அவர்கள் வேள்வி செய்து குருதியை ஆகதியாக்கிக் கொடுக்கிறார்கள். அதிலிருந்து பூதம் புறப்படுகின்றதுதான்... அது அவர்களுக்குக் தெரியாமலே அவர்களை அழிக்கப்போகிற பூதம்... ஒருநாள் அவர்கள் முழுமையாக அகதியாகுவர் - மீள் உயிர்ப்பற்று'

ஜீப் குலுங்கி நின்றது. அது ஒரு பெரிய கட்டடம். நீளமான அறைகள். பார்த்தால் ஒரு சிறைக்கூடம் போல... வாசலில் காவலரணில் துப்பாக்கியை நீட்டியபடி ஒருவன் இருந்தான். ஆங்காங்கே வேறும் பலர் துப்பாக்கிகளுடன் நின்றனர்.

ஜீப்பிலிருந்து இறங்கிய சத்தியனைக் கூட்டிக்கொண்டு நீளமான சாய்ப்பு ஒன்றினூடாக நடந்துபோய், ஒரு அறையின் வாசலில் நின்றான். உள்ளே யாரோ இருவர் கதைத்துக்கொண்டிருந்தனர். அவன் வாசலை அண்மி நின்று, உள்ளே பார்ப்பதும், சத்தியனைப் பார்ப்பதுமாக நின்றான். உள்ளே நின்றவர் கதைத்து முடிந்ததும் அவனைக் கையில் பிடித்தபடி கூட்டிச் சென்றான். கண்ணாடி அணிந்த ஒருவர் உள்ளே அமர்ந்திருந்தார். அவன் சத்தியனைக் காட்டி அவரிடம் ஏதோசொன்னான்.

அவர் அவனை மேலுங்கீழும் பார்த்தார். பார்வையில் ஒரு வெறித்தனம் இருப்பதாகச் சத்தியனுக்குப் பட்டது.

''ஒன் ... பேயர் என்னா..'' குரலில் வார்த்தைகள் புரள அவர் கேட்டார். ''ச. சத்தியசீலன்''

''சாத்தியசீலன்'' பின்னர் ஏதோ யோசித்தார். பிறகு அவனிடம் ஏதோ சொன்னார். அவன் போய்விட்டான். அவர் தொலைபேசியில் பேசினார். அதன்பின் அவனை நிமிர்ந்து பார்த்தார். ஏதேதோவெல்லாம் கேட்டார். அவரது கேள்வியொன்றுமே விளங்கவில்லை. புரியாமல் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான் சத்தியன். மனது மட்டும் வெறுமையாய்...

சிறிது நேரங் கழித்து ஒருவன் சீருடையுடன் வந்தான். அவனிடம் அவர் ஏதோ சொன்னார். அவன் தலையசைத்துவிட்டு சத்தியனைக் கூட்டிக்கொண்டு போனான். வளைந்து திரும்பிச் செல்லும் பாதையைக் கடந்து கட்டடமொன்றிற்குள்ளால் நடந்து ஒரு அறையின் முன்னே வந்து நின்று கதவைத் திறந்தான். அறை முழுவதும் இருளாயிருந்தது. சத்தியன் அவனைப் பார்த்தான். அவன் சிங்களத்தில் ஏதோ பேசி விட்டுச் சத்தியனைத் தள்ளிவிட்டுப் பூட்டினான்.

கண்களைக் கசக்கியபடி உள்ளே பார்த்தான். அவனைப் போலவே பலர்; எல்லோரும் படுத்திருந்தனர். சத்தியன் ஓரிடத்தில் அமர்ந்துகொண்டான். சிறைக்குள் வந்தாயிற்று 'நிரபராதிகளுக்கான சிறையா? எல்லைதாண்டி வந்ததற்கான மறியலா?'

அருகே படுத்திருந்தவன் அவனைக் கண்டதும் எழுந்துகொண்டான். ''புதிசா?'' தலையசைத்தான். பெயரைக் கேட்டான்; நடந்தவற்றைக் கேட்டான், தன்னைபற்றியும், தனக்கு நடந்ததையும் சொன்னான். ''பூஸா முகாமுக்கு வந்தால் எப்ப திரும்பிப் போறதெண்டு தெரியாது. நான் இண்டையோடை 296 நாளா இங்கை இருக்கிறன். அம்மா, அப்பாவையோ-உறவினர்களையோ யாரையும் சந்திக்கேல்லை. ஏதோ வாழ்வம் எண்ட நம்பிக்கையிலை நாட்களை ஓட்டவேண்டியதுதான் ....'' அவன் சொல்லிக்கொண்டே போனான். பூஸாமுகாம்... அவனது மனது கனத்தது. மனதிற்குள் ஏதோ அரித்தது.

* * * *

அந்தச் சிறை அறையில் அவனோடு நாற்பத்தெட்டுப் பேர் இருந்தனர். நீளமான அந்த இருள் சூழ்ந்த அறைக்குள்தான்

அவர்களது வாழ்க்கை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ், சிங்கள இளைஞர்கள்தான் அதிக மாயிருந்தனர். வேறு சிலர் கொலை, கொள்ளை முயற்சிகளில் ஈடுபட்டுக் கைதாகியிருந்தனர்.

சத்தியன் வெறும் நிலத்தில் சுருண்டு படுத்திருந்தான். பகலில் கல் உடைத்து உடலெல்லாம் வலி கண்டிருந்தது. இரண்டு தினங்களுக்கு முன் தலைகீழாய்த் தொங்கவிட்டு அடித்த அடியின் நோவும் இன்னமும் மாறவில்லை. "எப்பதான் விடுவாங்களோ?"

அறையில் சலசலப்பு எழுந்தது. நெளிந்த அலுமினியக் கோப்பைகள் வாசலில் சிறைக் கம்பிகளுக்கு வெளியேயிருந்து நீட்டும் ஒருபிடி அரிசிக் குழையலை வாங்க ஒவ்வொன்றாய் நீண்டன. சத்தியன் தனது கோப்பையை எடுத்து நீட்டினான். கோப்பைக்குள் குழையல் விழுந்ததும், திரும்பி வந்து அமர்ந்த படி அதை உண்டான். உப்பும், மிளகாயும் தேவைக்கு அதிக மாகவே சேர்ந்திருந்து, நாவை எரித்தன.

கொள்ளை, கொலை புகழ் வீரதுங்காவின் கர்ச்சனை மூலைப் பகுதியில் கேட்டது. அது வழமையானதுதான். இன்றும் யாருடையதோ சாப்பாட்டைப் பறித்திருப்பான்.

"டொடாங்" சாப்பாட்டைப் பறித்து விட்டு வீரதுங்கா வீசிய கோப்பை சத்தியனுக்கருகே வந்து விழுந்தது. அந்தக் கோப்பைக்குச் சொந்தக் காரனான மயூரன் அதனை எடுத்துச் சென்றான். வீரதுங்கவை ஓங்கி அறைய வேண்டும் போலிருந் தது சத்தியனுக்கு. பின் விளைவுகளை எண்ணிப் பேசாதிருந் தான்.

மீண்டும் வீரதுங்காவின் குரல்; அதனைத் தொடர்ந்து கோப்பையை வீசும் ஒலி. அடுத்து ஏதேதோ சத்தங்கள். இருட் டிற்குள் யார் யாரோவெல்லாம் கைகலப்பில் ஈடுபடுவதைச் சத்தியனால் ஊகிக்க முடிந்தது. அந்த அறை முழுவதும் கூக் குரல்கள்.

சற்று நேரங் கழிய, சிறைக்காவலர்கள் துப்பாக்கிகளையும் பொல்லுகளையும் தாங்கியபடி வந்தனர்.

வீரதுங்காவின் முகம் வெடித்திருந்தது. அவனை உடனடி யாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அவனுக்கு

அடித்த திலக்கும், கமகேயும் காவலர்களால் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர். திலக்கின் நெற்றியில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

பாவம் திலக்கும், கமகேயும்! இரவு முழுவதும் சித்திர வதைப் பட்டுச் சாகப் போகிறார்கள். இப்படித்தான் சிறைக்குள் நிகழ்ந்த அடக்குமுறைகளை உடைத்தெறிய முயன்று றொபின் சனும் சித்திரவதைக்குட்பட்டுக் கொல்லப்பட்டானாம். திலக்கும், கமகேயும் அவனைப் போல இன்னும் பல இளைஞர்களும் ஜே. வி. பி. பயங்கரவாதிகள் என்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கைதாகியிருந்தனர். திலக்கிற்கு இவ்வருடந்தான் "மெடிக்கல் பக்கல்றி என்ரன்ஸ்' கிடைத்ததாகச் சொன்னான். "ஒரு எதிர் கால டொக்ரர் அநியாயமாய்ச் சிறையில் கிடந்து அடிபட்டுச் சாகப் போகிறான்"

சத்தியனின் தோளை ஒரு கை பற்றியது. திரும்பிய போது. மகேந்தி நின்றான்.

"கமகேன்ரை சாப்பாட்டைப் பறிச்சதாலைதான் திலக்கும் அவனும் சேர்ந்து அடிச்சவங்கள். இவனுக்கு நல்லாச் சாத்த வேணும். விட்டால் ஆளையே விழுங்கிப் போடுவான் பாவி .."

"ம் காணும்; பேசாமலிரு" சத்தியன் அவனை அதட்டி னான்.

"முதல் மயூரனிட்டைப் பறிக்க அவன் பாத்துக் கொண்டு தானே நிண்டவன்"

"அவன் தமிழன். அவன் அடிச்சிருந்தால் இந்த இடத்தி லையே காவலர்களாலை சுடப்பட்டிருப்பான். நாங்களும் தாக் கப்பட்டிருப்பம். கமகேயும், திலக்கும் சிங்களவரெண்டதாலை நாங்கள் தப்பினம்" கேசவன் வழி மறித்துச் சொன்னான்.

"ம்...காணும் .. நாங்கள் படுப்பம்" சத்தியன் அவர்களிரு வரையும் அனுப்பி விட்டுச் சுருண்டு படுத்தான். குழையலின் காரம் இன்னமும் வாயில் எரிந்தது.

வீட்டு நினைவுகள் பொறி தட்டின. அம்மாவும், அக்காவும். சுபத்திராவும் வந்து போனார்கள். பூதராயர் கோவிலும், மைதா னமும், அரசமரமும், அழுக்குப் படிந்து போன முத்தமிழ் மன்றச்

சுவரும், மின்உற்பத்தி நிலையமும், பள்ளமும் மேடுமாய்ப் புழுதி படிந்த தெருவும், வெளவால் கொடியும் வந்து போயின. அவர்கள் பார்வையில் அவனை நோக்கிய பாசம். அவன் பார் வையில் அவர்களையும் அவற்றையும் நோக்கிய பாசம்.

நித்திரை வரவில்லை. உருண்டு புரளவும் இடமில்லை. அவனது காலடியில் கிடந்த கஸ்ரோ கேட்டான்.

“என்ன மச்சான் பயந்திட்டியா?”

“சே...”

“உதுகளுக்கெல்லாம் பயந்தவன் பேந்தேன் மனிசனாயிருக்க வேணும். உந்த அடக்குமுறையள் எண்டைக்கும் எப்பவும் எங் கையும் நிலைச்சதில்லை. ஒரு நாளைக்கு இந்தச் சிறைக்கம்பியள் சிதறத்தான் போகுது. அதுக்குப்பிறகு சூரியன் இந்தக் கட்டி டத்துக்குள்ளையும் உதிக்கும். நீயும் நானும் எங்களைப் போலை எல்லாரும் அச்சமின்றி எங்கையும் உலாவுவம்...”

கஸ்ரோவின் வார்த்தைகளின் தாக்கத்துடனேயே உறங்கிப் போனான் சத்தியன்.

விடிந்ததும் ஒரு செய்தி காத்திருந்தது. திலக்கும், கமகேயும் இறந்து விட்டார்களாம். தப்பியோட எத்தனித்த பயங்கர வாதிகளான இருவரையும் படையினர் சுட்டுக் கொன்று விட் டார்களாம்.

சத்தியனின் நெஞ்சை அழுத்தியது அந்தச் செய்தி. ஒரு கணம் மௌனித்து, மீண்டான்.

மௌனங்களைப் பிளந்து
ஒரு வார்த்தை வெடிக்கிறது
இருளைக்கிழித்து
ஒரு விடியல் பிறக்கிறது...
சூரியனைத்தேடி
ஒரு சுதந்திரப்பூ மலர்கிறது...

## 12

மதிய வெயில் வெம்மையாய் எரித்தது. வெண் முகில்களற்ற நீல வானம் பிரகாசமாய்த் தெரிந்தது. சன நெருக்கடி நிறைந்த

தெருவில் சத்தியனும் அங்கிளும் நடந்தனர். எட்டுமாதங்கள்! அர்த்தமற்ற சிறை வாழ்க்கை. இன்றுவரை அவனுக்கு விடை தெரியாத கேள்வி 'எதற்காக என்னைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்? சித்திரவதைகள் செய்தார்கள்?'

அருகே வந்த சிவலிங்கம் அங்கிளிடமும் இதே கேள்வியைக் கேட்டான்.

அவர் சிறிது நேரம் மௌனமாக நடந்தார். பின்னர் பெரு மூச்சொன்றுடன் சொன்னார். "ம்..எல்லாம் தமிழராப் பிறந்ததாலைதான்..."

வீட்டிற்கு வந்த போது அன்ரி அவனைப் பார்த்து விக்கி விக்கி அழுதாள்.

"உதென்ன ராசா கோலம்...கண்கொண்டு பாக்கேலாமல் கிடக்கு. எக்கணம் கொம்மாவுக்கு நானென்ன பதிலைச் சொல்லுறது..." அழுகையினிடையே தேம்பித் தேம்பி வேறே தோவெல்லாம் சொன்னாள். அவனால் அன்ரியின் முன் நிற்க முடியவில்லை.

குளியலறைக்குள் நுழைந்து, உள்ளே பொருத்தப் பட்டிருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்தான். முகம் காய்ந்து, கறுத்துப் போயிருந்தது. முகத்திலும் மயிர்கள் வளர்ந்து சுருண்டிருந்தன. தலைமயிரும் வளர்ந்து விட்டது. சிறையிலிருந்த போது இரு தடவை மொட்டையாய் தலை மயிரை வெட்டியிருந்தனர். பிக்குவாகப் போகிறவர் போல!

முகம் பார்த்தே எவ்வளவு நாளாகி விட்டது? ஆரம்பத்தில் அங்கிருந்த உடைந்த மங்கிய கண்ணாடியும் பின்னர் மறைந்து விட்டது தினசரி அந்த வட்டத்திற்குள் இருந்து கொண்டு, அடிகளையும், உதைகளையும் வாங்கி, சொல்லப்பட்ட வேலைகளைச் செய்து, புழுதி படிந்த தரையில் படுத்துறங்கி, வேதனைகளையும், சிரமங்களையும் சகித்து வாழ்ந்து, இருளினூடே ஒளியைத் தேடி... வாழ்ந்து முடித்தாயிற்று.

அது சிறைதான்! ஆனால் மனது சுதந்திரமாக நடமாடியது. எதிர்காலத்தைப் பற்றிய தேடல்கள்; நம்பிக்கைகள்; குறிக்கோள்கள்; திட்டங்கள்... கடந்த காலமே மறந்து போய்விட்டது.

எதிர்காலம் குறித்த உறுதிதான் மனதில் அடித்தளமிட்டிருந்தது. சிறையில் விழுந்த ஒவ்வொரு அடிகளும் அவனது உடலையும், உள்ளத்தையும் பதப்படுத்தியிருந்தது.

பைப்பைத் திறந்து, தண்ணீரை அள்ளி முகம் கழுவினான். தண்ணீரில் குளோரின் மணம்! முகத்தைத் துடைத்து விட்டு வெளியே வந்தான்.

அன்ரி தேநீருடன் வந்தாள். ஒரு சில்வரை எடுத்துக் கொண்டுபோய் அங்கிளுக்கு அருகில் இருந்தான். அங்கிளின் கையில் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தது.

"நான் எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தன். நீர் எங்கையிருக்கிறீர் எண்ட தகவலே கிடைக்கேல்லை. பிறகு முன் வீட்டிலை ஒரு இன்ஸ் பெக்டர் இருக்கிறார். அவர் மூலமாய்த் தான் பூஸாவிலை இருக்கிறதா அறிஞ்சம். உம்மடை அம்மா வைக் கூட்டிக் கொண்டும் ஒருக்கா வந்தனான். ஆனாப் பாக்க விடேல்லை. விசாரணை நடக்குது; முடிய விடுவம் எண்டு சொன்னாங்கள். விடுற பாடாய்த் தெரியேல்லை. அதுக்குப் பிறகு எண்ணாயிரம் ரூபா கட்டித்தான் விட்டவங்கள்"

அன்ரியும் அருகே வந்தமர்ந்தாள். அவள் அவனைப் பார்த் தாள். கண்களில் கண்ணீர்.

"என்ன செய்யிறது... உம்முடைய நிலை இப்பிடியாய்ப் போச்சுது. உங்கடை வீட்டிலை நடந்த விசியங்களொன்றுமே தெரியாமல்... ஒருதரையும் பார்க்காமல்...கலா எவ்வளவு ஆசையோட வந்தாள். பாவம் போகேக்கை அவள் அழுது கொண்டுதான் போனாள்..." மேலே சொல்ல முடியாமல் விக்கி விக்கி அழுதாள்.

அன்ரி கொடுத்த கடிதங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த் தான். எவ்வளவு மாற்றங்கள் இந்த எட்டு மாதத்திற்குள்...

ராணியக்காவிற்குக் குழந்தை பிறக்கப் போகுதாம்.... குடு குடென ஓடித்திரிந்தும், அம்மாவின் மடியில் புரண்டும் செல்லம் கொட்டும் தமயந்தி பெரியபிள்ளையாகி விட்டாளாம்... அண்ணா சாறியோடு வருவார் என்று எதிர்பார்த்திருப்பாளோ? சிவம் சிவம் மரணமடைந்து விட்டானாம்...கட்டுவனில் நடந்த மோதலில் களப்பலியாகி விட்டானாம்.

சுபத்திராவும் ரமாவும் போய்விட்டார்களாம்... அம்மா கடிதத்தில் ஆதங்கப் பட்டு எழுதியிருந்தாள்.

'எல்லாம் மாற்றம்தான். காலத்தின் மாற்றம்தான். அநியாயமாக அண்ணனைப் பிடித்து வைத்திருக்கிறாங்கள் என்ற ஆவேசம் ரமாவுக்கு இருந்திருக்கும். அதுபோல சுபத்திரா விடமும்...இந்த மண் உயிர்த்துக் கொண்டுதானிருக்கப் போகிறது'

இருவரும் இப்போது என்ன செய்வார்களோ? ஒருத்தி காவலில் ஈடுபட்டிருப்பாள். மற்றவள் யாருடனாவது வாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருப்பாள். சே! களம் அவர்களை மாற்றியிருக்கும். ஏதாவது ஆக்கபூர்வமாய் செய்து கொண்டிருப்பார்கள். அம்மாதான் பாவம்... ஒவ்வொன்றின் தாக்கங்களும் அவவைப் பாதித்திருக்கும். சில வேளை மெலிந்தும்போயிருப்பா...

நீண்ட மௌனம்...

"ம்...பிறகும் வந்து பிடிச்சாலும் பிடிப்பாங்கள். எதுக்கும் உடனேயே அங்காலை போறது நல்லது. விட்டால் உடனை அங்காலை அனுப்பச் சொல்லித் தயாளன் எழுதியிருக்கிறான். தான் காசை அனுப்பினேண்டு விட்டால் உடனே அங்காலை அனுப்பச் சொல்லி தயாளன் எழுதியிருக்திரான் தான் காசை அனுப்புறனெண்டு... எதுக்கும் மத்தியானம் சாப்பாட்டை முடிச்சுக் கொண்டு ஏஜென்சியைச் சந்திச்சிட்டு வருவம்..." சிவலிங்கம் அங்கிள் அவனைப் பார்த்தார். அவன் மௌனமாயிருந்தான். பிறகு சொன்னான்.

"நான் பின்னேரமே வீட்டை போகப் போறேன்"

சிவலிங்கம் அங்கிளும், அன்ரியும் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

"என்ன கதை கதைக்கிறீர் வீட்டை போய் என்ன செய்யிறது? ஒருக்கா வவுனியாவிலை பழகீட்டீர்...பிறகும் அதைக் கடந்து வீட்டை போறனெண்டு நிக்கிறீர்... உந்தக் கதையை விட்டிட்டு .."

"பிளீஸ் அங்கிள் இனி என்னாலை வெளிநாட்டுக்குப் போகேலாது. நான் என்னுடைய இடத்துக்குப் போயே ஆக வேணும். அதிலை நான் உறுதியா இருக்கிறன்." இடைமறித்துச் சொன்னான் சத்தியன்.

"சத்தியன் வீணா அங்கை போய்ச் சாகிறதுதான்... அதை விட வெளிநாட்டிலை சந்தோசமாய் வாழலாம்."

"இல்லை அங்கிள்... என்ரை இடந்தான் எனக்குப் பாதுகாப்பு. அங்கை போய் வாழுறதுதான் என்ரை முடிவு... இடையிலை வவுனியாவிலை என்ன நடந்தாலும் நான் பயப் பிடேல்லை.

"இது என்ரை உறங்கல் காலம்...இனிமேல்தான் எனக்கு அங்கை வேலையிருக்கு,,

அன்ரியும் அங்கிளும் புதிர் தொக்க அவனைப் பார்த்தனர்.

"அங்கிள்... என்னை ஒருக்கா ரெயிலேற்றி விடுங்கோ... அதுக்கிடையிலை கருணா அண்ணையைச் சந்திக்க வேணும்."

"ம்..."

"வாரும்...சாப்பிடுவம்" அன்ரி அழைத்தாள். எழுந்து போய்க் கையைக் கழுவி விட்டுச் சாப்பிட உட்காந்தான். அன்ரி டின் பிஸ் குழம்பிட்டுச் சோற்றுக் கோப்பையை நீட்டினாள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் நல்ல சாப்பாடு. சோற்றைக் குழைக்கும் போதே நாவில் நீருறியது. ஒரு பிடியை வாய்க்குள் செலுத்தினான். சுவையாக இருந்தது. சாப்பிட்டு விட்டுச் சொன்னான்

"அன்ரி சினா ஈனா இனியும் குட்ட நான் விடமாட்டன். தானா தலை இனியும் குனியாது"

"காணுங் காணும்." அன்ரி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

அவன் எழுந்து போய்க் கதிரையொன்றில்.அமர்ந்தான்.

"இரும்...சாப்பிட்டு வாறன், போவம்" அங்கிள் போனார்.

வீட்டிற்குப் போனதும் அம்மாவும் அக்காவும் கதறியழப் போகிறார்கள்.. ஊரார் சுகம் விசாரிக்கக் கூடப் போகிறார்கள்... உடலில் சுவடுகளாய்த் தெரிபவற்றைப் பார்த்து ஏங்கப் போகிறார்கள்...

"என்னப்பன்...எப்பிடியிருக்கு?" குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். கருணா வந்து கொண்டிருந்தார்.

''வாங்கோ...உங்களிட்டைத்தான் வர இருந்தனாங்கள்'' கதிரையொன்றில் அமர்ந்தார். அவனைப் பரிதாபமாய்ப் பார்த்தார்.

''உதுகளையெல்லாம் மறந்திடும். வெளிநாட்டுக்குப் போற வழியை உடனே பாரும். அதுக்கு வேண்டிய உதவியளை நானும் செய்யிறன்''

அவன் சிரித்தான். சிரிப்பில் ஏளனம்...

''எப்பிடியண்ணை மறக்கிறது. இதுகள்தான் என்னை நிமிரச் செய்திருக்கு...அதோடை நான் ஊருக்குத்தான் போகப் போறன்'' அவர் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

அன்ரியும் அங்கிளும் வந்தனர்.

''எப்பிடித் தெரியும்?''

''சும்மா விசாரிப்பமெண்டு வந்தனான். இங்கை இவர் நிக்கிறார்'' அதன்பின்... பலதும் பத்தும் கதைத்தனர். நடந்ததை விசாரித்தார் கருணா. சொன்னான். வெளிநாடு போவதுதான் நல்லதென்று மூவரும் சொல்லினர்.

அவன் மட்டும் உறுதியாயிருந்தான்:

சுவர் மணிக்கூடு ஒருமணி என்பதை நினைவுறுத்தவோ என்னவோ சங்கீத ஒலியெழுப்பி ஓய்ந்தது.

❋ ❋ ❋ ❋

கோட்டை புகையிரத நிலையத்தில் சனங்கள் நிறைந்து காணப்பட்டனர் ஒவ்வொரு முகங்களும் அவனை உறுத்துவது போலிருந்தது. அவர்களை வெறுப்புடன் பார்த்தான்.

'இவர்களை வெறுப்பாய்ப் பார்த்து என்ன செய்வது? இவர்களை இயக்குபவர்கள்தான் பொல்லாதவர்கள்' மனதிற்குள் ஏதோ ஒன்று சொல்லியது.

அவனை வழியனுப்ப அங்கிளும், அன்ரியும், கருணாவும் வந்திருந்தனர். பை கனத்தது. 'வரும்போது மனசில பாரம். போகும்போது மனசிலை இல்லை; வெளியிலை பாரம்'

கூவிக் கொண்டு புகையிரதம் வந்தது; அடித்து நொருக்கப் போகும் அரக்கன் போல...

அது நின்றதும் ஒவ்வொருவராக ஏறிக்கொண்டனர். அவனும் தொற்றி ஏறி ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டான்

ஆரவாரிக்கும் சனங்கள். அவர்களின் இயந்திரத் தனமான இயக்கங்கள். புகையிரதம் புறப்பட்டது. அவர்கள் மௌனமாக வழியனுப்பினர். அன்ரியின் கண்களில் கண்ணீர். அங்கிளும் கருணாவும் வெறுமையாய்ச் சிரித்தனர்.

அவர்கள் மெல்ல மெல்ல மறைந்து போக, வெளியே பார்த்தான். மேலைவானம் இரத்தந் தோய்ந்திருந்தது. மெல்ல மெல்ல இருளப் போகிறது. இரவின் பின்னே ஒரு விடியல் தோன்றத்தானே வேண்டும்.

அவன் மீளத்தடம் பதிக்கத் தயாராய்..

நெஞ்சம் சீராக விம்மித் தணிந்து கொண்டிருந்தது.

முற்றும்

---

# இறுதியாக...

நண்ப,

நான் உன்னைத் தேடுகிறேன். நீ எங்குள்ளாயென எனக்குத் தெரியாது. பல்லாயிரக்கணக்கான வெகுசனத்திரளில் உன் இருப்பை நான் அறியாதிருக்கலாம்.

புறத் தாக்கங்களும் அதன் வழியே அகத் தாக்கங்களும் நிறைந்த ஒரு காலகட்டத்தில் நீயும் நானும் வாழ்ந்த சூழலில், எங்களை மீறி நாமெல்லாம் பிரிந்து போனோம்.

இந்நூலை எப்போதாவது உன் கை தழுவ நேரிடின், உன் மனம் சிலிர்க்கும். இப்படித்தான் எனது வரலாறும் போனதென எண்ணுவாய். உன் கரம் பற்றிய படைக்கலன் பெருமையுடன் உன்னை நோக்கும்.

உன்கடமை பெரிது. அதற்குத் தலை வணங்குகிறேன். நிச்சய மற்ற வாழ்விலும் கூட, நாவலுள் நுழைந்துள்ள உன்னை அல்லது உன்னைப் போன்றவர்களை நான் நிஜத்தில் கண்டு நட்புக் கொள்வேன் என நம்புகிறேன்.

சந்திப்போம்!

உன் இனிய நண்பன்,

**இயல்வாணன்**



இளம் எழுத்தாளர்

**இயல்வாணன்**

எழுதிய

## இந்த நாவல்...

நெருக்கடிகளும் தா ங்களும்
தடம் பதித்த பூமி!
வெடியோசையுடனேயே
விடியும் பொழுதுகள்!
இங்கே ..
இழந்தவை உயிர், உடமைகள்
மட்டுமல்ல;
உடல், உள உறுதிகளுந்தான்!
இந்தச் சூழலில் பிறப்பெடுத்த
ஒரு சந்ததியின் கதைதான்

**சுவடுகள்...**

சமூக நாவல்

மீரா வெளியீடு: 22